# அணைக்க ஒரு கரம் வேண்டும்

## 1

டாக்டர் பரதனின் ஸ்கூட்டர் அந்தத் தெருவுக்குள் நுழையும்போது பொழுது விடியத் தொடங்கி விட்டிருந்தது. இரண்டு நாட்களாகப் பிசுபிசுத்த மழை நின்று போனதால் வானம் மேக மூட்டத்தின் சங்கடத்தில் சிக்காது முழு நீலமாகப் பளிச்சிட்டது.

கேட்டைத் திறந்துகொண்டு ஸ்கூட்டரை உள்ளே தள்ளி— முன்பக்கம் கட்டியிருந்த காரேஜிக்குள் வைத்து விட்டுத் திரும்பினான். கீழ்வானத்தின் சிவப்பு மாறிச் சூரியனின் வெள்ளிப் பிழம்பு போன்ற கதிர்கள் கண் களைக் கூசச் செய்வதை உணர்ந்தான்.

இரவுப் பணியினின்று அவன் சாதாரணமாக விடியு முன்பே திரும்பி விடுவது வழக்கம். மறுநாள் காலைப் பணியை மேற்கொள்ளும் வைத்தியர் நர்ஸிங்ஹோமின் குடியிருப்புப் பகுதியிலேயே வசிப்பவர்.

பரதன் இரவு முழுவதும் உழைத்துவிட்டு வீட்டிற்குச் சென்ற பின்னர் குளித்து முடித்துக் காலை உணவைக் கவனித்துக் கொண்டு பத்தரை மணியளவில் மறுபடி அறுவைச் சிகிச்சை செய்ய ஆரம்பிக்கும் தலைவருக்கு உதவி புரிய ஓடிவர வேண்டும்.

மனிதன் என்ன யந்திரமா, நிற்காது கொள்ளாது உழைத்துக் கொண்டிருக்க? யந்திரங்கள்கூடத் தேய்ந்து—

MITHRAVINTHA

முடிவில் இடக்குகள் செய்யத் தொடங்குகின்றனவே? என்று இரக்கப்படும் சுபாவம் அந்த ரெசிடெண்ட் வைத்தியருக்கு இருந்தது.

''டாக்டர் பரதன், நீங்கள் கிளம்புமுன் என்னைத் தொலைபேசியில் கூப்பிட்டு விட்டுப் போய் விடுங்கள். அதற்குப் பின்னர் வருகின்ற கேஸ்கள்—வார்டுகளில் எழுகின்ற பிரச்சினைகள் அனைத்தையும் நான் கவனித்துக் கொள்கிறேன். தலைமை நர்சிடம் என்னை அழைக்கும்படி கூறிவிட்டு விடியுமுன் விட்டிற்குப் போய்க் கொஞ்சம் ஒய்வு எடுத்துக் கொண்டு விட்டு வாருங்கள். நானிருக்கிறேன். இங்கே நான் முழுவதும்...அதனால் கவலை வேண்டாம்...''

பரதன் அந்த நர்ஸிங் ஹோமில் வேலைக்குச் சேர்ந்த அன்றே உறுதிமொழி கொடுத்திருந்தார் டாக்டர் நீலமேகம்.

ஆனால் அன்று இரவு அவனுக்குச் சங்கிலித் தொடராக வேலைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன.

இரவு பணிபுரியும் வைத்தியர் நர்ஸிங்ஹோமின் எல்லாப் பகுதிகளையும் கவனித்துக் கொள்ள வேண்டும். தன்னால் சமாளிக்க முடியாது வேலை அதிகமாகி விட்டால்...அந்தந்தப் பகுதியின் பொறுப்பில் உள்ள வைத்தியர்களைத் தொலைபேசியில் உடனடியாக அழைத்து உதவி வாங்கிக் கொள்ள வேண்டும்.

இருவராலும் முடியாது போகும் போதுதான் நர்ஸிங் ஹோம் தலைவரை, அவரது தூக்கத்திலின்று எழுப்ப வேண்டும்.

நர்ஸிங் ஹோமின் முழுச் சொந்தக்காரரும் அவர்களுக்கெல்லாம் படியளக்கும் தலைவருமான டாக்டர் பூபதி ஐம்பது வயதைத் தாண்டி விட்டவர்.



நாற்பதாவது வயதிலேயே நாய்க் குணம் வந்துவிடும் மனிதனுக்கு என்கிறார்கள்...

பெரிய நர்ஸிங்ஹோமின் பொறுப்பைத் தாங்கி அதைச் செம்மையாக நடத்த வேண்டிய சிரமத்தின் அழுத்தத்தைத் தாளாது மனிதன் அப்போதைக்கப்போது அனுகுண்டாக வெடிப்பார்.

கோபத்தில் முகத்தில் சதா ஒரு சிணுங்கல். சிரிக்கவே தெரியாத ஒரு பிறவி.

சின்ன வயதில் அந்த நர்ஸிங் ஹோமை ஆரம்பித்த புதிதில் அவர் கேலிப் பேச்சுகளும் சிரிப்பு வெடிகளுமாக இருந்தவர்தானாம்.

கோவில் பெருச்சாளிகள் போல, நீண்ட காலமாக நர்ஸிங் ஹோமில் அட்டைகளாக ஒட்டிக் கொண்டு விட்டிருந்த ஆட்படைகள் சிலர் பேசக் கேட்டிருக்கிறான் பரதன்.

ஆனால், அவன் அங்கு வந்து சேர்ந்த அந்த இரண்டாண்டுக் காலத்தில் மனிதர் முகத்தில் மலர்ச்சியைக் கண்டதே இல்லை.

கடுவன் பூனையாக—துருதுருவென்று வளைய வந்து கொண்டிருக்கும் தலைவரைக் கண்டால் அங்கே எல்லோருக்கும் அச்சந்தான்.

பரதனுக்கும் அவரிடம் லேசாகக் கொஞ்சம் பயம் இருந்தது உண்மை. அவன் அறிந்தவரை...தலைவர் டாக்டர் பூபதி பொறுமையற்றவர். வள்-வள் என்று வெடித்துக் கத்தும் துர்குணம் படைத்தவர்.

அறுவைச் சிகிச்சைகளை முடித்துக் கொண்டதும் தலைத் தொப்பி, முகமூடி இரண்டையும் கழற்றி மூலையில் வீசிவிட்டு...தியேட்டர் நர்சைப் பார்த்து ஒரு கூச்சல் போடுவார்...கட்டிடமே அதிர்ந்து போகும்...அப்படி ஒரு சிம்மக் குரலில் கத்தி விடுவார்.

MITHRAVINTHA

"ஆப்ரேஷனுக்கு நீ கத்திகளையா கொடுத்தே... கத்திரிக்காய் நறுக்கும் அரிவாமனை..."

"அடுத்த முறை இம்மாதிரியான பழைசு பட்டைகளை வச்சுக்கொண்டு என்னை ஆபரேஷனுக்குக் கூப்பிட்டியோ தெரியும் சேதி...அமெரிக்காவிலிருந்து நமக்குப் போன மாதம் வந்த அந்த இன்ஸ்ட்ருமெண்டுகள் என்ன ஆச்சு? ஊறுகா போட்டு வச்சிருக்கியா...? நர்ஸிங்ஹோம் உபயோகத்துக்குத்தானே வாங்கினது? உன் பாட்டன் வீட்டுச் சொத்தா, பாழாகிப் போகும்னு நீ பயப்பட? நான் கஷ்டப்பட்டு என் பணத்தைக் கொடுத்துத் தருவிச்சது-ஞாபகமிருக்கட்டும்..."

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு முகம் வெளுத்துப் போய்த் தியேட்டர் நர்ஸ் நிற்க...பதில் பேசத் தோணாது அதிர்ச்சியுடன் அனைவரும் நிற்க, அங்கே மயானத்தின் அமைதி ஒரு கணம் நிலவிடும்.

புயல்காற்றுப் போலத் தரை அதிர—கோட்டு இரு புறமும் இயற்கையாகப் பறக்க—அவர் வராந்தாவில் நடந்து அப்பால் போனபின்தான் எல்லோரும் நிம்மதியாக மூச்சு விடுவார்கள்.

ஆமாம்—இந்த மனுஷன் என்ன நம்மை அடிமை என்றா நினைத்துக் கொண்டு விட்டிருக்கிறான்—?

வீட்டு வேலையாளிடம்கூட இந்தக் காலத்தில் இப்படிக் காட்டுக் கத்தலா யாரும் கூச்சலிட முடியாது.

"பிடி—துடப்பத்தை" என்று கோபத்துடன்...சுத்தப் படுத்த உதவும் பொருள்களைக் கீழே போட்டு விட்டுப் புடவைக் தலைப்பை இழுத்துக் கட்டிக்கொண்டு போய் விடுவாள் வேலைக்காரி வீரம்மா.

படித்தவர்கள்—பட்டங்கள் பல பெற்றவர்கள்... உன்னதமான தொழில் எனக் கருதும் வைத்தியத் தொழிலை மேற்கொண்டவர்கள்...அனுபவசாலிகள்...



அப்படி வாயடைத்து நிற்பானேன்—கேட்பது சுலபம்... செயல்படுவது ஆகாத காரியம்.

டாக்டர் பூபதியை விரோதித்துக் கொள்வது அப்படி ஒரு சாத்யமான காரியமல்ல

மனிதன் நாயாக உறுமிக்கொண்டு பாய்கிறாரே தவிர, வெளிப்படையாகப் பேசுகிறவர். தனக்குத் தெரிந்த அறுவைச் சிகிச்சை முறைகளை ஒளிவு மறைவு இன்றித் தனது உதவி வைத்தியருக்குக் குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதுபோல—ஆனா ஆவன்னா எழுதக் கையைப் பிடித்து ஆசிரியர் எழுதிக் காட்டிக் கற்றுத் தருவதுபோல உதவி வைத்தியரது கையைப் பிடித்து...கத்தியை எத்தனை ஆழம் தோலின் மீது பதித்து அறுக்க வேண்டும், உள்ளுறுப்புகளை எப்படிக் கையாள வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொடுக்கும் குரு அவர்.

கலைஞர்கள், வைத்தியர்கள், விஞ்ஞான மேதைகள்—இவர்களிடம் அறிவும் திறமையும் எப்படிப் பிரகாசிக்கின்றனவோ அதுபோல சில சமயம் சிலரிடம் முன்கோபம் கனலாக எரிவதுண்டு.

கோபமிருக்குமிடத்தில்தான் குணமிருக்கும் என்று எடுத்துக்கொண்டு வாயை மூடிக்கொள்வதைத் தவிர அந்த நர்ஸிங் ஹோமில் வேலை செய்யும் பாக்கியத்தை இழக்க முடியாது என்றதொரு நிலை.

தலைவரைப் பற்றி விமர்சிக்க யாருக்கும் துணிவு இருக்கவில்லை. ஏடாகூடமாகப் பேசிவிட்டு வேலையைத் தொலைத்துக் கொள்ள யாருக்கும் மனம் இல்லை.

அபிராமி நர்ஸிங்ஹோம் சகல வசதிகளும்—புதிய சிகிச்சை முறைகளுக்குக் கையாள வேண்டிய புது நுணுக்க கருவிகள் பலவும் கொண்ட ஒரு உயர்மட்டத்து மருத்துவ மனை.



MITHRAVINTHA

அதில் வேலை செய்வதே பெரிய தகுதி, கௌரவம். அதில் வந்து தங்கிக்கொள்ளும் நோயாளிகளும் மிக மிகப் பிரபலமானவர்கள். அவர்களை அந்த நிலையிலாவது சந்திப்பது பெரும் பாக்கியமாகும்!

மாரடைப்புக்காகச் சிகிச்சைக்கு வந்திருக்கும் பிரபலமானதொரு சங்கீத வித்துவான்!

அல்சுஹாலிசத்திற்காக சிகிச்சைக்கு வந்திருக்கும் பிரபலமானதொரு நடிகை. புற்றுநோய் வந்து படுத்துக் கிடக்கும் தொழிலதிபரின் மனைவி.

பென்ஸ் கார்களில் படையாக வந்து இறங்கி வராந்தாவிலே சிலுக்சிலுக்கென்று நடந்து சென்று பிரத்யேக அறையில் மஞ்சள்காமாலை நோயுடன் கிடக்கும் தஞ்சை மாவட்டத்திலே பெரிய விவசாயியான அந்தப் பெரும் புள்ளியைக் காண வரும் பணக்காரக் கூட்டம்.

எலும்பு முறிவு, வயிற்று ஆபரேஷன் இரத்தப் பரிசோதனைக்காகத் தங்கியிருக்கும் பணம் படைத்தவரின் ஒரே மகனான கல்லூரி மாணவன், கண்ணாடிக் கட்டழகன்—அரசியல்வாதிகள்—பிரபல வக்கீல்கள்—என்ஜினியர்கள்—பெரிய நிறுவனங்களின் தலைவர்கள், அப்பப்பா——இவர்கள் நடுவில் பணத்தைச் செலவழித்து எப்படியாவது எமனிடமிருந்து தன் மகனின் உயிரை வாங்கிக் கொண்டு விடவேண்டும் என்ற பரிதவிப்போடு தமது நிலைமைக்கு ஒவ்வாத ஐந்து நட்சத்திர ஹோட்டல் போன்ற பெரிய முத்திரை கொண்ட அந்தப் பிரபல நர்ஸிங் ஹோமில் மகனை அனுமதித்து விட்டு வாரம் வாரம் வருகின்ற பில்லைச் சமாளிக்க வீட்டையும்-தமது காணி நிலத்தையும் மனைவியின் நகைகளையும் அடமானமாக வைத்துவிட்டுத் தவித்துக் கொண்டு வராந்தாவில் தள்ளாடியபடி கிழிந்த சொக்காயில் தெரியும், அண்ணன்—அழுது முகம் சிவந்து கண்கள் மினகாய்ப் பழமாகிவிட்ட தங்கைகள், இவர்களை அன்றாடம் சந்தித்துக் கொண்டு தான் இருந்தான்.



மயான வைராக்யம் என்பார்களே— அது போல அவனுள் தத்துவங்கள் தானாக உருவாகி அவனை நாளடைவிலே கொள்கைகள் மிக்க மன உறுதியும் துணிவுமுள்ள தன்னம்பிக்கையுள்ள ஒரு வைத்தியனாக... இந்தக் காட்சிகள் உருவாக்கிக்கொண்டு வந்தது உண்மையே.

ஆனால் அவன் பார்த்தவர்களில் கேள்விப்பட்டவர்களில் முப்பத்து மூன்றாம் அறை நம்பர் நோயாளி தணிகைவேல் எந்த வகையைச் சேர்ந்தவர் என்று அனுமானிக்க முடியாத, ஒரு நிலை.

கடந்த இரண்டு மாதங்களாக ஆஸ்பத்திரியை ஹோட்டல் என்று நினைத்துக் கொண்டவர் போல, அந்த அறையை யாருக்கும் விட்டுக்கொடுக்காது ஒட்டிக் கொண்டு கிடந்தார்.

அவரும் தலைவரைப் போல ஐம்பது வயதைத் தாண்டி விட்டவர்தான். தலைவர், தலையில் சாயத்துடன்...மூக்குக்கண்ணாடி வழியே, மிடுக்காகப் பார்த்துக் கொண்டு வெளேர் என்ற உடுப்பிலே கச்சிதமாகத் தெரிகிறவர். பார்த்த அளவிலே பரிசுத்தத்தின் எல்லையாகக் காட்சியளிக்கும் அவரது உடைகள்.

முப்பத்து மூன்றாம் அறை தணிகைவேல்— வந்து சேர்ந்த அன்று முகம் முழுவதும் மண்டிவிட்ட தாடி மீசை பட்டை பட்டையாக நரைத்து சிப்புக் கண்டு பல மாதமாகி விட்ட சிகை, சிங்கத்துப் பிடரி போலக் கழுத்தில் புரள, அழுக்கு மண்டிய நகங்களும், நெருப்பில் போட்டால் கூட வேகாது போன்ற அழுக்கு ஜிப்பா வேஷ்டியுடன் வந்து வார்டைக் கலக்கிய காட்சியை அவன் அத்தனை சுலபத்தில் மறக்க முடியுமா?

''டாக்டர் பரதன்! முப்பத்திமூணாம் நம்பர் நோயாளிக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கு போலிருக்கு—எனக்குக் கிட்டேபோக பயமா இருக்கு— அந்த அழுக்குச்

MITHRAVINTHA

சட்டையைக் கழற்ற மாட்டேன்னு கத்திவிட்டு— ஊசி போடவச்ச... இட்னி டிரேயைக் காலால் உதைச்சுத் தள்ளி எல்லாத்தையும் உடச்சிட்டார்—''

வேலைக்குப் புதிதாக வந்து சேர்ந்திருந்த குட்டி நர்ஸ் ரம்யா கண்கலங்க விசும்பினாள்.

சம்பளம் வாங்கு முன்னே— உடைத்த சாமான்களுக்குத் தண்டப் பணம் அபராதமாகக் கட்ட வேண்டுமே என்று அழுகை அவளுக்கு.

''நான் வரேன் இதோ!'' அபயம் அளித்த டாக்டர் பரதன்... இமே தான் பார்த்துக் கொண்டிருந்த ஒரு நோயாளிக்கு விரைவாக மருந்துச்சீட்டு எழுதிக் கொடுத்து விட்டு...லிப்டில்...ஏறி மூன்றாவது தளத்திற்கு வந்தான்—

முப்பத்து மூன்றாவது அறை...வராந்தாவின் கோடியிலிருந்தது. அதற்குப் பிறகு சூப்பர் டீலக்ஸ் அறை... பிரபல அரசியல் வாதிகள்—பெருத்த பணக்காரர்களுக்கு நோய் வரும்போது மட்டும்...... உபயோகிக்கப்படும்— விசேஷ அறை—பூட்டப்பட்டிருந்தது.

குச்சி மட்டைக்குத் துணி சுற்றியது போலக் காணப்பட்ட மெலிந்த தோற்றமுடைய அழுக்குத் துணியணிந்த தாடி மீசை ஆசாமி தனது கண்களால் அவனை ஏற இறங்க அளந்தார்.

அவனது கோட்டின் முகப்பிலே குத்திக் கொண்டிருந்த சிறு பிளாஸ்டிக் சட்டத்திலே பொறிக்கப்பட்டிருந்த அவன் பெயரை ஊன்றிப் படித்தார்.

''டாக்டர் பரதன்!—இப்படி வாங்க—உட்காருங்க—'' குரலில் கோபமில்லை—கோமாளித்தனம் அதிகம் தொனித்தது. ''எனக்குப் பணிபுரிய—சின்னக் குட்டி நர்ஸ்களை ஏவாதீங்க. எனக்கு சின்ன பெண்களைக் கண்டாலே பிடிக்காது.''



''சரி—ஆம்பிள்ளை நர்ஸை அனுப்பி வைக்கிறேன். இல்லாவிட்டா வயதானவங்களாகப் பார்த்து அனுப்புகிறேன்.''

''ஸாரி டாக்டர் என்னை மன்னிக்கணும். அந்த உடைஞ்சுபோன சாமான்களுக்கு நான் பணம் கட்டி விடுகிறேன். அந்தக் குட்டி இதுக்காக அழ வேண்டான்னு சொல்லுங்க.''

''சொல்லிடறேன்—''

''என்னவோ டாக்டர். உங்களைப் பார்த்ததும் எனக்குப் பிடிச்சுப் போச்சு—நீங்களே என்னைக் கவனிச்சுக்கிறதாக வாக்குத் தந்தா—நீங்க சொல்றபடி கேட்பேன்— இல்லாட்டா—''

மறை கழன்று போயிருக்கும் கேஸ் போல இருக்கு... கொஞ்சம் தாஜா செய்து தொலைப்போம் என்று பரதன் புன்முறுவலுடன் சரி என்று தலையசைத்தான்.

''எனக்கு எத்தனை வியாதிகள் இருக்கு தெரியுமா?...'' தணிகைவேல் அதட்டிக் கேட்டார்.

''முதலில் இந்தத் தாடி மீசையை எடுக்க ஏற்பாடு செய்வேன்...உங்க கிராப்பு ரொம்ப வளர்ந்து போயிடுத்து. அதையும் கவனிச்சுட்டு, நன்றாக வெந்நீரில் குளிச்சி நீங்க சுத்தமான உடை போட்டுக்கணும்—அப்போது உங்க வியாதிகளில் பாதி போய்விடும்—''

''எனக்கு வியாதிகள் போகணும்னு ஆசையில்லை— நான் போகணும்னுதான் ஆசை—''

''அப்போ இந்த மருத்துவமனைக்கு வந்திருக்க வேண்டாமே—வீட்டிலேயே மருந்து சாப்பிடாம—கவனிச்சுக்காம இருந்தா விரைவில் உங்க ஆசை நிறைவேறியிருக்குமே—''

''பணத்தை என்ன செய்கிறது?...''

MITHRAVINTHA

''மிதமிஞ்சிக் கிடந்தால் தான தர்மம் செய்கிறது... உங்க பிள்ளை குட்டிகளுக்கு விட்டு வைக்கிறது...''

''எனக்குப் பிள்ளையும் கிடையாது. குட்டியும் கிடையாது...நான் ஒரு தனி மனிதன். தற்சமயத்துக்கு உன்னை என் பிள்ளையாட்டம் நினைச்சுகிட்டு நீ சொல்றபடி கேட்கிறேன்...சந்தோஷமா?''

தணிகைவேலின் கோபக் கனல் மிகுந்த கண்களில் கனிவும் குறும்புத்தனமும் தெரிந்தன.

''அப்படியா? அப்போ, சொல்றபடி கேட்கிறதா இருந்தா நானும் தற்சமயத்துக்கு உங்களுக்குப் பிள்ளை போல இருந்து உதவுவேன்—ஓ கே!''

''ஓ. கே. இது நமக்குள் ஒரு ஒப்பந்தம்''—புன்னகைத்தார் தணிகைவேல்.

கொஞ்ச நேரம் சென்ற பின்னர்...முப்பத்து மூன்றாம் அறையிலிருந்து வந்த அழைப்புக்கிணங்க அவன் அங்கே சென்றபோது தணிகைவேலின் தோற்றத்தில் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டு வியந்து போனான்.

தாடி மீசை மழிக்கப்பட்டு—சுத்தமான மல் ஜிப்பாவும் வெள்ளை வேஷ்டியுமாக உட்கார்ந்திருந்த அந்த ஒல்லி ஆசாமியின் முகத்திலேதான் எத்தனை ஒரு கவர்ச்சி—?

சின்ன வயதில் ஆள் அழகனாகவே இருந்திருக்க வேண்டும். அந்தக் கூர் மூக்கு—நிமிர்ந்து நின்ற முகவாய் ...மெல்லிய உதடுகள், அலையாகச் சரிந்த வரிவரியாக நரைத்த கிராப்பு முடி—உடல் வற்றிக் காய்ந்த குச்சி போலிருந்தாலும், மனிதன் உள்ளத்திலே உணர்ச்சிகள் கொப்பளித்துக் கொண்டு அதுவும் கோப உணர்வு முன்னுக்கு நிற்கும் சாயலைக் காட்டிய விழிகளுடன் ஒரு பணக்காரக் களையுடன் காணப்பட்டார்.



பணமுடையவனாகத்தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த நர்ஸிங்ஹோமில் தனியறையில் தங்க வந்திருப்பது சாத்தியப்படுமா? யாருமற்ற அனாதை என்கிறார். உறவினர்கள் இல்லாதிருக்கலாம். தன்னைத் தானே காத்துக் கொள்ளுமளவுக்கு இவரிடம் பணமிருக்கிறது என்ற கணிப்புடன் அவரை நெருங்கி, ஸ்டெதஸ்கோப்பை அவர் நெஞ்சிலே வைத்துச் சோதனையை ஆரம்பித்தான்.

வேண்டிய சோதனைகளுக்குப் பரிசோதனைச் சாலைக்குக் கடிதங்கள் எழுதி, சாப்பிடத் தரவேண்டிய உணவு முறைகளை விவரமாக எழுதிவிட்டு, அவரது இருமலுக்கு ஒரு ஊசி மருந்தைப் போட்டுவிட்டு அவன் திரும்பியபோது தலைவர் தமது உதவி வைத்தியர், நர்ஸ் புடைசூழ உள்ளே வந்தார்.

''எப்படி நம்ப மிஸ்டர் தணிகைவேல்?'' கேட்டபடி ஒரு சிறு புன்னகையுடன் நோயாளியின் படுக்கையை நெருங்கினார்.

அதைக் கண்ட டாக்டர் பரதனுக்குக் கொஞ்சம் அதிசயமாகத் தானிருந்தது சாதாரணமாகச் சலனமில்லாத முகத்துடன் நோயாளியருகே நெருங்கி...நோயாளிக்கும், கூட வந்த டாக்டர்களுக்கும் ஒருங்கே அச்சத்தைத் தரும், வழக்கமுடைய டாக்டர் பூபதியால் சிலரிடம் மட்டும் எப்படிச் சிரித்துப் பேச முடிந்தது?

அப்படி தணிகைவேலுவுக்கும் டாக்டர் பூபதிக்கும் என்ன ஒரு ஈர்ப்பு?—

சில நாட்களில் அவனுக்கு அந்த ரகசியம் புரிந்து விட்டது.

டாக்டர் பூபதியின் நெருங்கிய நண்பர் சரவணனது சிபாரிசின் பேரில்தான் அந்த நோயாளி அங்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

MITHRAVINTHA

டாக்டர் சரவணனால் முன்னுக்கு வந்தவர் டாக்டர் பூபதி. அந்த நன்றிக்கடனுக்காக முன்பின் தெரியாத ஒரு சிடுமூஞ்சிக் கிழவனுக்குத் தன் நர்ஸிங்ஹோமில் தங்க இடமளித்து, அவர் படுத்தும் பாட்டைப் பாராதவர்போல இருந்து கொண்டதுடன், நேரில் நாளைக்கொரு தடவை வந்து தாமும் கவனித்துப் போய்க்கொண்டிருந்தார்.

டாக்டர் பூபதியிடம் எத்தனையோ குறைகளை அவன் கண்டான். ஆனால் நன்றியுணர்வு அதிகமுள்ள மனிதர் என்று புரிந்து கொண்டபோது அவனுக்கு மிக வியப்பாகத்தானிருந்தது.

சில நாளைக்குப் பின்னர் ஒரு நாள் காலை பரதன் அவுட்பேஷண்ட் நோயாளிகளைக் கவனித்துக்கொண்டிருந்தபோது தலைவரிடமிருந்து அழைப்பு வந்தது.

கீழ்த் தளத்திலிருந்த அவரது விஸ்தாரமான ஏ.சி. அறைக்குள் நுழைந்து மேஜைக்கு முன் பணிவுடன் நின்றான்.

வைத்தியப் பத்திரிக்கை ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்த தலைவர் நிமிர்ந்தார்.

''டாக்டர் பரதன்! முப்பத்து மூன்றாவது அறையிலிருந்து மிஸ்டர் தணிகைவேலை வேறு அறைக்கு எக்காரணம் கொண்டும் மாற்றக்கூடாது.

''அவர் கொஞ்சம் சிரமம் கொடுக்கும் நோயாளி தான். அவரை அவ்வப்போது கவனித்துக்கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு. என்ன காரணமோ தெரியவில்லை...ஊசி போடறது—ரத்தம் எடுக்கிறது என்றால் டாக்டர் பரதன்தான் செய்யணும். மத்தவங்க குத்திக் குதறிப் பிடுங்கறாங்க என்றார் அவர் என்னிடம். மொத்தத்தில் அவர் ஒரு எக்ஸென்டிரிக்...வக்ரமான கிழம் ..கவனிச்சுக்கோங்க.''



நிற்க வைத்துக்கொண்டே படபடவென்று பேசி முடித்துவிட்டுப் பத்திரிக்கையை மீண்டும் புரட்டினார்.

வாரந்தோறும் அந்த மருத்துவமனையில் சிகிச்சை முறைகளைப் பற்றி நடத்தும் கூட்டத்தில்தான் தலைவர் தமக்குக் கீழே அங்கு வேலை செய்யும் மற்ற வைத்தியர்களைக்கூட உட்கார வைத்துக்கொண்டு—ஒவ்வொரு கேஸ்களைப் பற்றியும் அலசி...அவர்கள் அபிப்ராயம்—இத்யாதிகளைக் கேட்பது வழக்கம்.

தனிப்பட்ட முறையில் அவர்கள் யாரிடமாவது ஏதாவது பேச விரும்பினால் தலைவர் அந்தக் குறிப்பிட்ட வைத்தியரைத் தமது அறைக்குள் அழைக்கும்போது நிற்க வைத்துப் பேசி அனுப்பி விடுவது வழக்கம்.

அப்படி அவருக்கு ஒரு வக்கிரபுத்தி—தான் அந்த மருத்துவமனையின் தலைவன்—மற்றவர் அங்கு வேலை செய்கிறவர்கள் என்ற நினைப்பு.

தன்னைத் தனியே தலைவர் அழைக்கும் போதெல்லாம் பரதன் வெட்கத்தில் குமைந்து போவான். அவர் எதிரே நின்றபடி பேச வேண்டிய நிலை வந்துவிட்டதே என்று எண்ணி உள்ளூர வெகுண்டு...காதுகள் சிவக்க நெஞ்சு பதைக்க நிற்பது வழக்கம்.

நல்ல வேளை அன்று தலைவரது பேச்சு சுருக்கமாகவேயிருந்தது. அந்த அவஸ்தையிலிருந்து வேகமாக விடுபட்டு வெளியே வந்து கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

எத்தனைக் காலத்திற்கு இந்த அடிமைத்தனம்? என்றைக்கு அவன் அவனது தகுதி, பட்டங்கள், திறமை அனைத்திற்கும் உரியதான ஒரு தனி மருத்துவமனை வைத்துக் கொண்டு—தனிப்பட்ட முறையில் செயல்படப் போகிறான்?

ஒரு சாதாரணக் கிளினிக்கையே அவன் சட்டென்று வெற்றிகரமாக நடத்த முடியவில்லையே?

MITHRAVINTHA

மூலைக்கு மூலை ஒரு எம். டி. அல்லது எம். எஸ்... டி. ஜி. ஓ. எஃப். ஸி. ஸி. பி. (யு. எஸ்.ஏ.). எஃப்.ஐ.ஸி., எஃப். ஆர். ஸி. எஸ். (இங்கிலாந்து), எஃப். ஆர். ஸி. எஸ். (எடின் பாரோ) என்று தங்கள் பெயருக்குப் பின்னால் வால் போன்ற நீட்டமான பல பட்டங்களை வைத்துக் கொண்டிருந்த வைத்தியர்களிடையே—மிகப் பாடுபட்டுத் தன் பெயருக்குப்பின் எம் எஸ். என்ற அறுவைச் சிகிச்சை மேற் படிப்புப் பட்டத்தை மட்டுமே பெற்றுவிட்டிருந்த அவனால் எதிர்நீச்சல் போட இயலவில்லை.

படித்துப் பட்டங்கள் பெறுவதற்கு ஒரு தனித் திறமை வேண்டும்.

பட்டங்கள் பெற்ற பின்னர்—திறமை மிக்க—பிரபல வைத்தியனாக விளங்கப் பொருளாதார வசதிகளும்—ஒரு தனிப்பட்ட முகராசியும் வேண்டும். டாக்டர் பரதன் வரை முகராசி அதிகம் இருந்தது—ஆனால் அவனிடம் பொருளாதார வசதிதான் அதிகமில்லை.

## 2

பரதன் குடியிருந்த திருவல்லிக்கேணி சேதுமாதவன் தெருவில் அவன் வீடு மட்டுந்தான் ஒரு சிறு தனி வீடு. சுற்றுச் சுவர், வாசலிலே கேட், இடது பக்கம் அடுத்த வீட்டுச் சுவரோடு இணைந்தபடி ஒரு சிறு காரேஜ் என்ற தொரு சிறு மாடிக் கட்டிடம்.

மேல் பகுதியில் அவனது அறை. ஒரு சிறு முன்னறை. உள்ளடங்கிய குளியலறை இத்யாதி இருந்தன. கீழே பெரியதொரு ஹால்—அதன் நடுவே தொங்கிய ஊஞ்சல். இடது பக்கம் ஒரு அறை—வலது பக்கம் இன்னொரு சிறு அறை—அம்மாவுடைய அவளுடைய—பொருள்களை, துணிமணிகளைப் பத்திரமாகச் சேர்த்து வைத்திருந்த ஒரு இரும்பு பீரோ—பின்னால் ஒடிய தாழ்வாரத்தைத் தாண்டித்தான் முற்றம்.

திருடன் உள்ளே குதிக்க இயலாது பலத்த பாதுகாப்புடன் குறுக்கே போடப்பட்ட கம்பித் தடுப்புகள்—முற்றத்திலே கைகால் அலம்பிக் கொள்ள ஒரு சிறு தொட்டி, முற்றம்—எதிரே சிறுகூடம். அதை ஒட்டினாற்போல் சமையலறை—பின் கதவைத் திறந்து வெளிப்பட்டால்—அம்மிக்கல்லும் கல் உரலும் பதித்த கம்பி கேட் போட்ட பின் வராந்தா—அதற்கப்பால் சிறு தோட்டம். இரண்டு தென்னை மரங்கள், ஒரு சிறு வேப்ப மரம்.

அம்மாவின் பூஜைக்கு என்று நடப்பெற்ற பவளமல்லி மரமாகி—பக்கத்திலிருந்த கிணற்று மேடையில் பூக்களை உதிர்த்துக் கொண்டிருந்தது—அவ்வப்போது கம்பளிப் பூச்சிகளையும் உதிர்த்தது.

இத்தனை வசதியும் கொண்ட வீடு—பழைய பாணியில் கட்டப்பட்டதுதான்...பழுது பார்த்துச் சீர்திருத்த வேண்டிய நிலையில்தானிருந்தது...ஆனாலும் சொந்த வீடு—அவனது வேலைக்குப் பின் நிம்மதியாக வந்து ஒண்டிக்கொள்ள அம்மா தன் சொத்தாக அவனுக்கு அந்த வீட்டை மட்டுமாகிலும் விட்டுப் போயிருந்தாளே!

அதற்காக அவன் வீட்டிற்குள் நுழையும்போதெல்லாம் நன்றி உணர்வோடு நெஞ்சம் நெகிழ்ந்து போனான்.

முப்பது வயதிலேயே விதவையாகிவிட்டாள் அவன் தாய். படித்த படிப்பை வீணாக்காது அருகிலிருந்த தட்டெழுத்து—சுருக்கெழுத்து நிறுவனத்தில் பயிற்சி எடுத்துத் தேர்ந்து, கூடத் துணையாக இருந்த அப்பாவின் நண்பர் ஒருவரின் சிபாரிசின் பேரில் ஒரு பிரபல நிறுவனத்தில் தட்டெழுத்தராக வேலை ஏற்றுக் கொண்டு—மனைவியை இழந்த தகப்பனையும் தந்தையை இழந்த



MITHRAVINTHA

பிள்ளையையும் பொறுப்புடன் காப்பாற்றி—கணவன் விட்டுப் போயிருந்த அந்த வீட்டைச் சீர்திருத்தி—மகனுக்குப் பத்திரமாகப் பாதுகாத்து வைக்க எத்தனை பாடு பட்டாள்!

தன் நகைகள் சிலவற்றை விற்று—வீட்டின் முன்னாலிருந்த பெரிய அறையின் வாயிற் படியை வெளிப்பக்கமாக வைத்து—அதை அவன் ஒரு கிளினிக்காக உபயோகிக்க வேண்டும் என்று தன் வங்கிச் சேமிப்புத் தொகையில் கணிசமான பகுதியை—நாற்காலி, மேஜை— கைகழுவும் பீங்கான் பொருத்த—என்று வேண்டியவற்றிற்குச் செலவிட்டு—அவன் கிளினிக்கை ஆரம்பிக்க நாள் குறித்து வைத்து நேரம் பார்த்துக்கொண்டு இருந்தபோது அம்மாவுக்கு எத்தனை பெரிய அதிர்ச்சி!...

மகனுக்குத் துணையாக நிழலாக இருந்து, பேரன் தங்க மெடல்களை வாங்கி—மருத்துவக் கல்லூரியின் முன்னணி மாணவனாக ஒவ்வொரு ஆண்டும் வெற்றி பெற்று வருவதைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த தாத்தா... கோவிந்தன் நாளடைவில் நலிந்து கொண்டு போனார். வயதுக் கோளாறு என்றுதான் அவள் நம்பினாள்.

தாத்தாவை ரதத அழுத்தமும் சர்க்கரை வியாதியும் மெல்லத் தின்று கொண்டிருப்பதை வைத்தியப் பட்டம் பெற்று ஹவுஸ் சர்ஜனாகப் பணிபுரியும் போதே பரதன் கண்டு கொண்டு விட்டிருந்தான்.

மகளும் பேரனும் கருத்துடன்தான் கிழவரைக் கவனித்துக் கொண்டனர். கிளினிக்கைத் துவங்க இருந்த நாள் அன்று காலை பேரன் அவர் காலில் விழுந்து ஆசி பெற்றுக் கொண்டான்.

"மகராஜனாக இருப்பா. எம்.எஸ். தேர்வில் எடுத்த எடுப்பிலே பாஸ் செய்துட்டே. என் சிநேகிதன் ரொம்ப உன்னைப்பத்திப் பெருமையாப் பேசறான். இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்துக்க உன் அப்பன் நம்கூட இல்லையென்று



என் மனம் கொஞ்சம் சங்கடப்படுகிறது. என்ன செய்ய? நாம் குடுத்து வச்சது அவ்வளவுதான்." தாத்தாவின் குரலில் சோகம் தொனித்தது.

காப்பி டம்ளருடன் உள்ளேயிருந்து வந்த மகளைக் கண்டு அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

"சாரதா! நீ பட்டபாடு வீணாகலையம்மா. உன் பிள்ளை சீக்கிரம் பேரும் புகழுமா...பெரிய சர்ஜனா இருக்கப் போறான். இனிமேலே நீ உழைச்சு ஓடாக வேண்டாம். இந்த வருஷத்தோட வேலையை விட்டுட்டு, வீட்டோட கொஞ்சம் நிம்மதியா இரும்மா." சொல்லிக் கொண்டே காப்பி டம்ளரை வாங்கி ஒரு மடக்கு குடித்தவர்,

புரை ஏறி விட்டதுபோல இருமிக்கொண்டே சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். கையில் பிடித்திருந்த டம்ளர் கீழே விழுந்து உருண்டு காப்பி, தரையில் நாலாபுறமும் ஓட...

"அப்பா...! என்னப்பா உங்களுக்கு" என்று சாரதா அலற, பேரன் மருந்துப் பெட்டியுடன் உள்ளேயிருந்து ஓடி வருவதற்குள், தாத்தா அவர்களிடமிருந்து மீளா விடை பெற்றுக்கொண்டு விட்டிருந்தார்.

தாத்தாவின் மரணத்தினால் அம்மா மிகவும் அதிர்ந்து போய் விட்டிருந்தாள்.

அபசகுனம் போல...கிளினிக்கைத் துவங்கக் குறித்து விட்டிருந்த நாளில் இப்படி ஒரு துன்பம் அவர்களுக்கு ஏற்பட வேண்டுமா?

பரதன் அம்மாவுக்கு எத்தனையோ ஆறுதல் சொல்லிப் பார்த்தான்.

அதற்குப் பின்னர் ஒரு மாதம் கழித்து எவ்வித ஆடம்பரமுமின்றி அவனது கிளினிக் அவர்கள் வீட்டு வாசல்

MITHRAVINTHA

முன்னறையில் துவங்கப்பட்டது. அம்மா தொடர்ந்து வேலைக்குப் போய்க்கொண்டு வந்தாள். "கிளினிக்கில் கேஸ்கள் நிறைய வர ஆரம்பிக்கட்டும். வேலைக்கு முழுக்குப்போட்டுவிட்டு வீட்டோட இருந்து, உனக்குச் சமைத்துப்போட்டு.. உன்னைக் கவனிச்சுக்கிறேன்..." அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஆறுமாத காலம் ஓடியது. ஒரு நாளைக்கு இரண்டு பேர் வருவதே சிரமமாக இருந்தது. பணம் படைத்தவர்கள் வைத்தியர்களில் பிரசித்தி பெற்ற ஜாம்பவான்களைத் தேடிக்கொண்டு ஓடினார்கள்.

இல்லாதவர்கள் அரசு ஆஸ்பத்திரியின் கியூவில் நின்றனர். இங்கும் போக முடியாது—அங்கும் நிற்க நேரமுமின்றித் தவித்த மத்திய வகுப்பார், முட்டி வீக்கம், வயிற்று வலி என்று அவனைக் காண வந்தனர்.

"பில் அனுப்புங்கள்—மாசச் சம்பளம் வந்ததும் அனுப்பி விடுகிறேன்." சொல்லிவிட்டுப் போனார்கள்.

பில்களை அனுப்பிக் கை சோர்ந்து போனதுதான் மிச்சம்—வைத்தியர் கடனும் வாணியர் கடனும் வைத்துக் கொள்ளக்கூடாது, மகாபாவம் என்ற பழமொழியை உதிர்த்தார்கள். அல்வளவே! காசைக் கண்ணால் பார்ப்பது மிகவும் சிரமமாக இருந்தது. கடுமையாகப் பேசினால் சேரத் துவங்கிய கூட்டம் மறைந்து விடுமோ என்ற திகில்—தவித்தான் பரதன். ஒரு வைத்தியர் உருவாவதற்குத்தான் எத்தனைக் கஷ்டங்கள்—எத்தனை பாடு!

படித்தால் மட்டும் போதுமா—பட்டங்களை தன் பெயரில் வாலில் ஒட்டிக்கொண்டு விட்டால் மட்டும் போதுமா— பிராக்ட்டிஸ் என்பதை ஆரம்பித்து வெற்றிக் கொடி நாட்டுவது என்பது படிப்பிற்கும் வாங்கிய மெடல்களுக்கும், சம்பந்தமேயில்லாத விஷயம். சில சினிமா படங்கள், எதற்காக இப்படி ஓகோ என்று ஓடுகிறது



என்று காரணம் கண்டுபிடிக்கத் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டி வருகிறதே, அதே போலத்தான் வைத்தியர் உலகமும்.

மண்ணடியிலிருந்து மந்தைவெளிவரை ஏன் இப்படி இந்த டாக்டருக்கு மட்டும் க்யூ?

இத்தனை பட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தும் இந்த வைத்தியன் ஏன் இப்படி ஈ ஓட்டிக் கொண்டிருக்கிறான்!

இதெல்லாம் யாருக்குமே புரியாத சில புதிர்கள்.

பரதன் ஈ ஓட்டத் தொடங்கியதைக் கண்டு சாரதா மிகவும் பயந்து விட்டாள்.

"தடுக்கி விழுந்தால் டாக்டர்கள் என்ற நிலை உருவாகி விட்டதால், இனி வெளிநாடுகளில்தான் தமது திறமையைக் காட்டிப் பிழைப்பைத் தேடிக் கொள்ள வேண்டும். என் நண்பன் ஒருவன் ஜமைக்காவுக்குப் போயிருக்கான், நானும் அங்கு போகலாமான்னு இருக்கிறேன்" என்று பரதன் அலுத்துக் கொண்டான்.

அம்மா சாரதா கதிகலங்கிப் போனாள். "என் அப்பாவும்- உன் அப்பாவும் இல்லாத நிலையில் உன்னைத்தானே நம்பிக்கிட்டிருக்கிறேன். வயசு காலத்தில் என்னை விட்டு விட்டு எங்கேயும் போகாதே... கொஞ்சம் பொறுமையா இருந்தா கேஸ்கள் வரத் தொடங்கும்."

உபதேசித்தாள்.

பட்டங்கள் பெற்றும் திறமையிருந்தும் சட்டென்று முன்னுக்கு வரமுடியவில்லையே என்ற ஆதங்கத்தில் மனம் பரபரக்க பரதன் நண்பன் ஒருத்தனின் ஆலோசனையைக் கேட்டுக் கொண்டுதான் அபிராமி நர்ஸிங்ஹோமில் பூபதியின் உதவி டாக்டராக வேலையை ஏற்றுக் கொண்டான்.

MITHRAVINTHA

மாதச் சம்பளம் என்று ஒரு தொகை கிட்டுமே...! அம்மா இன்னும் எத்தனை காலம் வேலை செய்து கொண்டிருப்பாள்! ஓய்வு எடுக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது என்று கணக்கிட்டுக் கொண்டிருந்தான்.

ஆரம்பத்தில் சாரதாவுக்கு அவன் சொந்தமாகப் பிராக்டிஸ் செய்யாது இன்னொருத்தருக்குக் கைகட்டிச் சேவகம் செய்வது பிடிக்கவில்லை. பிரபல நர்ஸிங்ஹோம். விதவிதமான கேஸ்கள் வரும். அதனால் அனுபவமும் அதிகம் கிட்டும் என்று தாயைத் தன் பக்கம் திருப்பி யிருந்தான் பரதன்.

எப்படியாவது போகட்டும். மகன் வெளி தேசத்திற்கு வேலை தேடிக் கொண்டு போகாது கூடவே இருந்தால் போதும் என்ற திருப்தி அவளுக்கு.

''கஞ்சியோ கூழோ—கடைசிக் காலம்வரை என்னோட சேர்ந்து குடிச்சுக்கோ— என்னை விட்டுட்டுப் போயிடாதேயப்பா—'' அம்மா அடிக்கடி அழமாட்டாக் குறையுடன் கேட்டுக் கொண்டாள்.

ஒரு நாள் மாலை— நசநசவென்று மழை தூறிக் கொண்டிருந்த சமயம், வேலைக்குப் பின்னர் பஸ் நிலையத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த அம்மா சாரதா வீட்டு வாசலில் ஒரு கணம் நின்று விட்டுக் கோபத்துடன் உள்ளே வந்தாள். முகம் ஜில்லென்று சிவக்க நெஞ்சு படபடக்க, மூச்சுத்திணறக் கைப்பையை மேஜைமேல் போட்டுவிட்டுக் குடையை ஓரமாக வைத்தவளைக் கண்ட மகன் பதறிப் போனான்.

''என்னம்மா உங்களுக்கு...?'' கேட்டபடி, பின் வராந்தாவிலிருந்து ஓடிவந்தான். அன்று அவனுக்கு ஓய்வு நாள். அதனால்தான் அந்த வேளை வீட்டிலிருந்தான்.

''உன்னை வளர்க்க எத்தனை பாடுபட்டேன்? படிக்க வைக்க எவ்வளவு சிரமப்பட்டேன்? நீயுந்தானாகட்டும் ராவும் பகலும் ஓயாது ஒழியாது படிச்சே... சும்மா உன்



கையில் யாரும் பட்டத்தைத் தூக்கித் தந்துடலை... பாடுபட்டு நீ வாங்கின பட்டம்.''

''அதுக்கு இப்ப என்னம்மா...?''

''போர்டை அழகாக எழுதச் சொல்லி வாங்கி பூஜை அறையில் வச்சு—சரஸ்வதி பூஜையின்போது சந்தனமும் குங்குமப் பொட்டும் வச்சு வணங்கி—தூபம் காட்டி விஜயதசமி அன்னிக்கு எடுத்து உன் கையில் குடுத்து வாயில் கவரிலே மாட்டச் சொன்னேன் இல்லையா?

''போய் வாசல்லே பார். எந்தப் பாவி கடன்காரனோ மூலையில் கிடந்த கார்ப்பரேஷன் குப்பைத் தொட்டியை உன் போர்டு அருகே கொண்டு வச்சிருக்கான். எதிர் வீட்டுக்காரர்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள் என்று பேதமில்லாம எல்லோரும் குப்பைத் தொட்டிக்குள்ளும் நம் வாசல் முன்னாலும் போட்டிருக்காங்க... இந்த மழையில் ஐயோ அந்த அசிங்கத்தைப் பார்க்க சகிக்கலை...''

பரதன் விர் என்று வாயில் பக்கம் சென்று பார்த்தான். அவனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

டாக்டர் பரதன் எம். எஸ். என்று கம்பீரமாகக் கருப்புப் பின்னணியில் வெள்ளையாக எழுதப்பட்டிருந்த அந்தப் பலகைமீது யாரோ வீசிய குப்பையிலிருந்து கொஞ்சம் அழுக்கு பட்டிருந்தது.

சினிமா நட்சத்திரங்களின் படங்கள்மீது சாணி உருண்டையை வீசி முகத்தை அசிங்கப் படுத்துவார்களே சில வீணர்கள், அதுபோல பொறுப்பற்ற குடும்பத் தலைவிகள் தம் வீட்டுக் குப்பையை அயல் வீட்டு வாசலில் கொட்டுவதோடு நில்லாமல் அவன் பெயர்ப் பலகைமீதும் வீசிவிட்டிருந்ததைக் காண அவனுக்குப் பொறுக்கவேயில்லை...

டாக்டர் என்ற முறையில் அந்தத் தெருவைச் சுத்தப் படுத்த அவன் பட்டபாடு, எழுதிய விண்ணப்பங்கள்,



MITHRAVINTHA

நகராட்சி ஊழியர்களுக்குப் போட்ட சலாம் எல்லாம் வீண். நஷ்டம். சிங்கப்பூரைப்போல சென்னை மாநகரத்தைச் சீர்திருத்திச் சுத்தமாக—அழகான நகராக வைத்துக் கொள்ளப் போவதாகப் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

அநுமாநிரிச் சீர்திருத்தம் செய்ய முதலில் ஒரு அணு குண்டை நகரத்தின்மீது வீசி, ஒருங்கே அழித்துவிட்டு மீண்டும் ஒரு புது சென்னையைக் கட்டி உருவாக்கினால் தான் உண்டு.

எத்தனை முறை அவன் எதிர்வீட்டு அம்மாளிடமும், பக்கத்து வீட்டு அம்மாளிடமும் குப்பையை நடுத்தெரு வில் கொட்டாதீங்க என்று கெஞ்சுவது—உபதேசிப்பது—ஓசியாக அவர்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு வைத்தியம் செய்வது—ஊகும்...உருப்பட மாட்டார்கள்...இது இந்த ஜன்மத்தில் நடக்கும் அற்புதம் இல்லை.

நகரத்திலே ஜனப்பெருக்கம் அதிகமாக அதிகமாக, அழுக்கும் அதிகமாகி மக்களின் பொறுப்பு உணர்வு குறைந்து...சே!சே!...இந்த கதியில் போனால் நாடு எப்படி உருப்படும்? ஒவ்வொரு மனிதன் மனதிலும் நாட்டைப் பற்றியும் வீட்டைப் பற்றியும் கடமை · உணர்வு ஏற்படும் வரை, ஊகும் ஒன்றும் நடக்கப்போவதில்லை.

கோபத்துடன் தனது பெயர்ப் பலகையை அங்கிருந்து எடுத்து வந்து கழுவித் துடைத்து மாடி வராந்தாவின் முகப்பிலே எல்லார் கண்களிலும் பளிச்சென்று படும் வகையில் ஆணியடித்து மாட்டிவிட்டு வந்தான்.

''உன் பட்டத்தை அந்தக் குப்பைத் தொட்டியில் போடு என்பதைப் போல அக்கம்பக்கத்தவங்க மட்டு மரியாதை இல்லாம...'' அம்மா கண்ணீரில் திணறிய போது அவன் பக்கென்று சிரித்து விட்டான்.



''அறியாத்தனமாக— பொறுப்பில்லாமல், சுத்தமாக இருக்கத் தெரியாத சோம்பேறித்தனத்தில் அவர்கள் தவறு செய்தால் அதை ஏன் நாம் பெரிசு பண்ணணும்— அம்மா, அதுக்குத்தான் சொன்னேன்... நான் வெளிநாட்டுக்குப் போய் வேலையைத் தேடிக்கிட்டுப் பிறகு உங்களுக்கு விசா வாங்கி...

''வேண்டாம்— பரதன்...குப்பை போடறாங்க— தெருவை அசிங்கம் பண்றாங்க என்பதுக்காக நீ எங்கேயும் போக வேண்டாம்... என்னோடு கூடவே நான் கிருஷ்ணாம் பேட்டைக்குப் போகும்வரை இருந்திடு... என்னை விட்டு விட்டுப் போயிடாதே... என்னவோ மனதில் பல பலவீன உணர்வுகள் வந்தன. என் கணவர், என் தந்தை எல்லோரையும் நினைச்சுக் கிட்டேன்— நாம் ரெண்டு பேரும் வாழ்க்கையில் முன்னேற எப்படிப் பாடு படறோம்னு நினைச்சேன். நாள் முழுசும் செய்த வேலையின் களைப்பு... வாசலில் கிடந்த குப்பை வேறு என் உணர்வுகளை உறுத்திச்சு... துக்கமாப் போயிட்டது; வேறு ஒன்னுமில்லை.

''கார்ப்பரேஷன் கமிஷனருக்கும்- ஸ்பெஷல் ஆபீசருக் கும்— இந்தக் குப்பைத் தொட்டி விவகாரத்தைப் பத்தி ஒரு மனு எழுதிப்போடு... எந்தப் பத்திரிக்கையாவது இதைப் போட்டோ எடுத்துப் போடட்டும். அப்பவாவது இந்தத் தெருவுக்கு விமோசனம் கிடைக்கும்—''

''சரிம்மா... இப்போ நீங்க ஓய்வா இருங்க. நான் காப்பி கலந்து கொண்டு வரேன்...'' சமாதானப்படுத்தி னான்.

சாரதா தன் வாழ்வில் ஒரு கணத்தையும் வீண் அடிக்கும் பழக்கமுள்ளவளல்ல. பிறர் குறை கண்டுபிடிக்க முடியாத வண்ணம் தன் வேலைகளை அலுவலகத்திலே ஒழுங்காகச் செய்து முடிக்கும் அதே தீவிரத்தில்தான் வீட்டையும் நிர்வகிப்பாள்.

MITHRAVINTHA

வீடு எப்பொழுதும் தூசி தும்பு இன்றிச் சுத்தமாக இருக்கும். ஜன்னல் திரைச்சீலை எப்பொழுதும் பளிச் சென்று காணப்படும். முன்னறையில் கிடக்கும் சோபா, திண்டுகளைத் தட்டித் தரையில் விரித்திருந்த பலானி ஜமுக்காளத்தைத் தட்டிக் கொட்டிச் சுத்தமாக வைத்திருப் பாள்.

சமையலறையைப் பற்றிச் சொல்ல வேண்டாம். வீட்டில் அது அவனது ஆட்சி பீடம். பாத்திரங்கள் அலமாரியில் பளபளக்கும். பளிங்கு அடுப்பு மேடை வெளேரென்று துல்லியமாக இருக்கும். காய்கறிகள் பிரிஜ்சில் பிளாஸ்டிக் பைக்குள் தூங்கும். அப்படி ஒரு கவனிப்பு. அதனால் வெளியே காணும் அழுக்கைக் கண்டு அவள் அருவருப் படைவது இயற்கையே. துயரப்பட்டதும் நியாயம்.

''நம் வரை நாம் சுத்தமாக நம் வீட்டையும் நம்மை யும் கவனிச்சுப்போம். ஊராரைத் திருத்துவது என்பது சாத்யப்படாத செய்கை. காப்பியைச் சாப்பிடுங்கோ—'' உபசரித்தான் மகன்.

சின்ன வயதிலேயே அவன் அம்மாவுக்கு உதவியாக அடுப்பங்கரையில் அவள் பின்னால் வந்துநிற்பது வழக்கம்.

குழாயில் தண்ணீர் பிடித்துக் குடத்தைத் தூக்கிக் கொண்டு வந்து உதவுவான். கிணற்றில் ஜலம் இழுத்துச் செடிகளுக்கு ஊற்றுவான். சாப்பாட்டுத் தட்டுகளை எடுத்து மேஜைமேல் வைத்து, அம்மாவுக்குப் பரிமாறு வதில் உதவுவான்.

சாரதா மறுப்புச் சொன்னதில்லை. இதெல்லாம் ஆண் பிள்ளைகள் செய்யக்கூடாத காரியம் என்று அவன் பிற்போக்காக எண்ணியதில்லை. ஆணுக்குச் சமமாகப் பெண் அலுவலகத்தில் வேலைகளைச் செய்யப் புறப்பட்டு விட்ட இந்தக் காலத்தில், பெண்ணுக்குச் சமமாக வீட்டை நிர்வகிக்கவும்-சமைத்துச் சாப்பிடவும்-தன் ஆடைகளைத்



துவைத்து உலர்த்தி-இஸ்திரி போட்டு மடித்து வைத்துக் கொள்ளவும் ஆணுக்கும் தெரிந்திருக்க வேண்டும். வெளி நாட்டைத் தேடிக்கொண்டு ஓட விரும்பும் வாலிபர் களுக்கு வீட்டு வேலை கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும் என்று அவன் எண்ணினான்.

தன் மகன் சமையலறையில் புகுந்து குக்கரை அடுப்பில் ஏற்றிச் சமைப்பதை அவள் தடுத்ததில்லை.

''ஏம்மா புடலங்காய்க் கூட்டுக்கு என்ன லச்சு அரைக் கணும். தாயம்மா அரைக்கக் கேக்கிறாங்க. என்னவெல் லாம் கொடுக்கணும்.'' மகன் சமையலறையிலிருந்து விடு முறை நாட்களில் கூவுவான்.

''இதென்ன கம்ப சித்திரம். ஒரு சில்லு தேய்காய், அரை டீஸ்பூன் சீரகம், கொஞ்சம் துவரம் பருப்பு, துளி பெருங்காயம், அஞ்சு காஞ்ச மிளகாய், நல்லா மைய அரைக்கச் சொல்லு.'' படுக்கையில் புரண்டபடி புன்ன கைத்துக் கொண்டு உத்தரவிடுவாள்.

''கூட்டு எப்படியம்மா?'' மகன் கேட்டால் போதும், பெற்ற மனம் பூரித்துப் போகும்.

''எனக்குப் பெண் குழந்தை இல்லை என்கிற குறையும் உன்னாலே தீர்ந்து போச்சு. பெண்போலப் பொறுமையா நிதானமா நடந்துக்கிறே. ஆண்மகனா பொறுப்பா துணிச்சலா தலை நிமிர்ந்து நடக்கிறே,'' அடிக்கடி தன் மகனைப் புகழ்வாள்.

தாத்தா காலமான பின்னரோ தாயின் போக்கில் தளர்வைக் கண்டான் மகன்.

அடிக்கடி ஒய்ந்துபோய்ப் படுக்கையில் துவண்டு விழுந் தாள். அவனும் என்னென்னவோ வைத்தியம் செய்து பார்த்தான். தோட்டத்துப் பச்சிலை வீட்டுக்குதவாது என்பார்கள். அதனால் தன் தாயைக்கூட அழைத்துச்

MITHRAVINTHA

சென்று, தலைவரிடம்கூடக் காண்பித்துச் சிகிச்சை செய்து பார்த்தான்.

அவளுக்கு லேசாக ஆரம்பித்திருந்த ரத்த அழுத்தம் நாளுக்கு நாள் ஓங்கிக்கொண்டு போனது...இறங்க மறுத்தது.

அதனாலோ என்னவோ அவள் அடிக்கடி கோபப் பட்டாள்.

எரிந்து விழுந்தாள். சின்ன விஷயங்களுக்கெல்லாம் அழுதாள். ஒரு நாள் அவனிடம்கூட எக்கச்சக்கமாகச் சண்டை போட்டு, அழுது ரகளை செய்து விட்டாள்.

அன்று இரவுதான் அம்மாவுக்கு நெஞ்சுவலி சிறிதளவு ஏற்பட்டது.

எழுந்து வந்து...சிறிய அறையில் படுத்திருந்த மகனை மெள்ள எழுப்பினாள். "என்னவோ நெஞ்சை அடைக்குது—"

உடனடியாகத் தான் வேலை பார்த்த மருத்துவ மனைக்குத் தாயை டாக்ஸியில் வைத்து இரவோடு இரவாக அழைத்துக்கொண்டு போனான். தீவிரக் கவனிப்பு அறையில் வைத்து, கண்ணும் கருத்துமாக இரண்டு வார சிகிச்சைக்குப்பின் அவள் குணமாகி வீடு திரும்பியிருந்தாள்.

மகனேதான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டான். அவளை அடுப்பருகில் போகக்கூட விடவில்லை. விடியுமுன் எழுந்து, தானே காப்பி பலகாரம் தயாரித்து அம்மாவுக்குக் கொடுத்துவிட்டு, சமையலையும் ஓரளவு முடித்து விட்டுத்தான் வேலைக்குக் கிளம்பினான். நாள் முழுவதும் அவன் திரும்பும் வரை வீட்டில் அவளுடன் தங்கியிருக்க, பல காலம் அவர்கள் வீட்டில் வேலை பார்த்த தாயம்மாவைக் காவலுக்கு வைத்துவிட்டுப் போனான். தாத்தா காலத்திலேயே வைத்த தொலைபேசி



அதன் இணைப்பை அம்மாவின் படுக்கையறை தலை மாட்டில் பொருத்த ஏற்பாடு செய்திருந்தான். அவன் என்னதான் செய்வான்?

ஒரு தாய்க்குத் தலைமகனாகவும், வீட்டை நிர்வகிக்கும் பெண்ணாகவும், அன்புடன் கவனிக்கும் வைத்திய னாகவும், கனிந்து பேசி ஆறுதல் சொல்லும் நண்பனாக வும்—தன் தாய்க்காகப் பாடுபட்டான்.

ஆனால் விளைவு?

தன் தகப்பனின் இழப்பை மனதில் பெரியதாக எடுத் துக்கொண்டதாலோ என்னவோ அம்மாவின் மனதில் தவிர்க்க முடியாத ஏக்கம். அதுவே வியாதியாகி—வேலை யினின்று விடுப்பு எடுத்துக் கொண்டவள் திரும்பப் போக முடியாது, திரும்பாத உலகிற்கு ஒரு நாள் போய் விட் டாள்.

## 3

பூட்டைத் திறந்துவிட்டு, உள்ளே நுழைந்த பரதன்... அந்த விஸ்தாரமான ஹாலில் எதிர்ப்பக்கத்தில் பெரிய தாக்கப்பட்ட அம்மாவின் படத்தைப் பார்த்தான். திக் கென்ற உணர்வில் கண்கள் கலங்க, புன்முறுவலுடன் மூக்குக் கண்ணாடியின் ஊடே அவனை உற்றுப்பார்த்த அம்மாவை அவன் பார்த்தபடி நின்றான்.

அவன் அம்மா...தாய்க்கு ஒரு இலக்கணம். அவளது இழப்பினால் ஏற்பட்ட சூனியத்தை யாரால் இட்டு நிரப்ப முடியும்? அவனுள்ளத்திலே ஆழமாக அமுக்கிக்கொண்டு நெஞ்சை வெடிக்கச் செய்யும் அந்த அழமுடியாத துயரத்தை அவன் யாரிடம் மனம் விட்டுப் பகிர்ந்து கொள்ள முடியும்?

MITHRAVINTHA

"ஸ்கூட்டர் சத்தம் கேட்கலை. இல்லாட்டா நானே வந்து கதவைத் திறந்திருப்பேன்." ஜெனற்றடியில் துணி களைத் துவைத்துக் கொண்டிருந்த வேலைக்காரக் கிழவி தாயம்மாள் தன் ஈரக் கைகளைப் புடவைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு உள்ளே விரைவாக வந்தாள்.

"என்கிட்டேதான் சாவி இருக்கே...உங்க வேலையை விட்டு ஏன் வறீங்க...?"

"பாலைக் காய்ச்சி வச்சிருக்கேன். டிகாஷ்ஷனும் தயார். குளிச்சுட்டு வந்தீன்னா, காப்பி பலகாரம் எடுத்து மேசை மேலே வைக்கிறேன்."

அவனுக்காக அம்மா தன் நகைகளை விற்றுச் சீர்திருத்திய வீடு. குளியலறையில் ஹீட்டர் இருந்தது. தண்ணீர் நன்றாகச் சுட்டுக்கொண்டு சில்லென்று வீசிய குளிருக்கு இதமாக இருந்தது. மெல்லக் குளித்தபோது அவனையுமறியாது, கண்களிலிருந்து பொங்கிய கண்ணீர், கன்னத்தில் பட்டு வாயில் உப்புக் கரித்தது.

சே! சே! ஆண் பிள்ளை அழலாமா? அம்மா போய் வருஷம் ஒன்று ஆகி விட்டது. தன்னந் தனியாகத்தான் வாழக் கற்றுக் கொண்டிருந்தான். பள்ளிக்கூடம் போகச் சண்டித்தனம் செய்யும் சிறுவன் போல, தனியே வாழ்க்கையில் போராடத் துணிவின்றி அவன் அம்மாவின் துணைக்கு ஏங்கிக் கண்ணீர் வடிப்பது, சுத்தக் கோழைத்தனம். தன்னையே கடிந்துகொண்டு பிளாஸ்டிக் மூக்கு போகிணியிலிருந்து தண்ணீரைத் தன்மீது வேகமாக மொண்டு ஊற்றிக் கொண்டான்.

தண்ணீரை உதறிவிட்டுத் தலையைத் துண்டில் அவசரமாகத் துடைத்துக் கொண்டான்.

ஆனால் அம்மாவின் நினைப்பை மனதிலிருந்து அத்தனை சுலபமாக உதற இயலவில்லை.



இறப்பதற்குச் சில தினங்களுக்கு முன்னர்—ஒரு நாள் இரவு அம்மா அவனைத் தன் அறைக்குள் அழைத்தாள்.

ஒரு சில நாட்கள் ஆஸ்பத்திரியில் நோயாளியாகக் கிடந்த அம்மா பாதியாகி விட்டிருந்தாள்.

வயது தெரியாத இளமையில் எப்பொழுதும் பொலிந்த அவளது முகம் வெளேரென்று களையிழந்து காணப்பட்டது.

கண்களில் ஒரு மிரட்சி.

"இப்படி உட்கார், உன்கிட்ட பேசணும்."

பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அம்மா படுத்திருந்த கட்டிலருகே மகன் வந்து உட்கார்ந்து கொண்டான்.

அவன் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது. அம்மா என்ன பேச விரும்புகிறாள்?

"எத்தனையோ செய்யணும்னு ஆசை. ஆனால் முடியலை. இந்த வீட்டை உன் தாத்தா காலத்திலேயே உன் பேருக்கு ரிஜிஸ்டர் பண்ணி வச்சிட்டது நல்லதாப் போச்சு. இதைத் தவிர உனக்கு நான் சொத்து ஏதும் வைக்க முடியலை. ஆனா ஒண்ணு, கடன் உடன் ஏதும் வச்சிட்டுப் போக மாட்டேன். அது நிச்சயம்."

"என்னம்மா இப்படி ஒரு பேச்சு?" அதட்டினான் பரதன்.

"பேச வேண்டிய வேளை வந்துட்டுது, பேசறேன். குறுக்கே பேசாதே, சொல்றதைக் கேள்."

பரதன் வாயடைத்துப் போனான். ஆனால் என்னவோ இனம் புரியாததொரு துயரம் நெஞ்சைக் கவ்வுவதை உணர்ந்தான்.

"என் நகைகளிலே நான் போட்டுக்கிட்டு இருக்கிற வைரத்தோடு, இரட்டை வடம் சங்கிலி, ஒரு ஜோடி கை

MITHRAVINTHA

வளையல்கள்—இதுதான் மிச்சமிருக்கு. உங்கப்பா போனதும் கழட்டிப் போட்ட வைர மூக்குத்தி இரும்பு பீரோ லாக்கரில் ஒரு சின்ன சந்தனப் பெட்டிக்குள்ளே கிடக்கு. இதுதான் எங்கிட்ட மிச்சமிருக்கிற சொத்து...''

''இப்ப இதெல்லாம் யார் கணக்குக் கேட்டா!''

''இதுகளைப் பத்திரமா வச்சிக்கிட்டு உனக்கு வரப் போகிறவளுக்கு மாமியாரின் பரிசாகக் கொடு...''

''என்னம்மா இதெல்லாம் பேசிகிட்டு?''

''என் ஒரே மகன் கல்யாணத்தைச் சீக்கிரம் பண்ணிப் பார்க்கணும்னு ஆசைப்பட்டேன். ஆனால் அது சாத்யப் படாத சங்கதி. இருந்தாலும் மனதிலே இருக்கிறதைச் சொல்லிடறேன். பிறகு உன் இஷ்டம். நம் மாமா சதாசிவம் இருக்காரில்லையா?''

''பெங்களூரிலே இருக்கிற உங்க ஒண்ணுவிட்ட அண்ணனைத்தானே சொல்றீங்க?''

''அவர் விடும் வாசலுமா, கார் அது இதுன்னு வசதியா இருக்கார் தெரியுமில்லையா?

''வியாபார சம்பந்தமாக இங்கே அடிக்கடி வருவார். இரண்டொரு தடவை நம்மையும் பெரிசா நினைச்சுப் பார்க்க வந்திருக்கிறார்...இப்போ அவருக்கென்ன?''

''அவர் எனக்குக் கடுதாசி போட்டிருந்தார். நானும் பதில் போட்டேன். அதுக்குப் பிறகுதான் தாத்தா திடீர்னு போக எனக்கு உடம்புக்கு வர, எல்லாம் ஒரே கோளாறாயிட்டது. அவர் மகள் நளினியை நீ பார்த்ததில்லை. போன வருஷம் நான் புட்டபர்த்தி பாபாவைப் பார்க்கப் போயிருந்தப்போ வழியிலே அண்ணன் வீட்டுக்குப் போயிருந்தேன். நளினி கொடி போல உயரமா, எப்படி அழகாக வளர்ந்திருக்கா தெரியுமா?''

''நளினியா?''



''என்ன அப்படிக் கேட்கிறே. அவருடைய மூத்த மகநளினி எம். ஏ. முடிச்சிட்டு வீட்டிலேதான் சும்மா இருக்காளாம். கொள்ளை அழகு போ அந்தப் பொண்ணு.''

''மேலே படிக்கட்டும். இல்லாட்டி மாடலிங்-அது இதுன்னு வேலையா கிடைக்காது? ஏதாவது ஒண்ணைத் தேடிக்கிடட்டும்.''

''நான் சொல்ல வர்றதைத் திசை திருப்பாதே. கவனமா கேட்டுக்கோ. அண்ணனுக்கு எழுதிக் கேட்டேன். அவருக்குச் சம்மதம்தானாம். அந்தப் பொண்ணை உனக்குக் கட்டி வைக்க ஆசைப்படறேன். சதாசிவம் செல்வாக்கு நிறைய உடையவர். போதாதற்கு உறவு. உன் வருங்காலத்துக்கு இந்தச் சம்பந்தம் உதவியா இருக்கும்னு தோணிச்சு.''

''அம்மா முதல்லே உங்க உடம்பு நல்லாகட்டும்... பிறகு என் கல்யாணத்தைப் பத்திப் பேசலாம்.''

''எதுக்கும் ஒரு நடை நீ பெங்களூர் போய் மாமாவோட பேசி, அந்தப் பெண்ணையும் பார்த்துட்டு வர்ரது நல்லது. உனக்கு அவளைப் பிடிக்கணும். அவளுக்கு உன்னைப் பிடிக்கணும். இல்லையா! ரெண்டு பேருக்கும் பிடிச்சுப் போனால் நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சொந்தம் விட்டுப் போகாமல் கல்யாணத்தை முடிச்சுடணும். அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்.''

''கல்யாணம் வரை பேசிட்டீங்க. பேரன் பேத்தி எத்தனை வேண்டும் என்கிற அறிவுரை சொல்ல மறந்துட்டீங்களே.''

பரதன் சிரிக்க முயன்றான். நெஞ்சு வேதனையில் கனத்தது.

''பரதன்! நான் வற்புறுத்தலை. என் ஆசையைச் சொன்னேன். உனக்கு நளினியைப் புடிக்காட்டி வேறு இடமா பார்த்துச் சீக்ரமா காலதாமதம் செய்யாம கல்

MITHRAVINTHA

யாணம் பண்ணிக்கோ. எனக்குப் பிறகு உன்னையும் இந்த வீட்டையும் பார்த்துக்க ஒரு துணை வேணும்பா..."

"நான் பச்சை பாப்பா—பூச்சாண்டி பிடிச்சுக்குவான்னு பயப்படுறீங்க" சிரிக்க முயன்றான் பரதன். ஆனால் கண் இமைகளை நீர் கட்டுது.

இந்தத் தாய்க்கு—அவன் மேல்தான் எத்தனை பாசம்! தனக்குப் பிறகும் அவன் நிம்மதியாக மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்கிற ஆதங்கம்...நெஞ்சு நெகிழ்ந்து போனான்.

"அம்மா இப்போ உங்களுக்குத் தூக்க மாத்திரை ஒன்னு கொடுக்கப் போறேன். பலதும் பேசி மனதை அலட்டிக்காம நிம்மதியா நீங்க தூங்கணும். அப்பத்தான் உடம்பு சீக்கிரம் குணமாகும்."

"நான் சொல்றதைப் பத்திக் கொஞ்சம் யோசிச்சுப் பார். சதாசிவம் அண்ணன் வீட்டுக்குப்போய்ப் பார்க்கிறேன்னு ஒரு வார்த்தை சொல்லேன். அதுவே எனக்குத் தூக்க மாத்திரை போல நிம்மதியைக் கொடுக்கும்."

'அத்தை மகன்—மாமன் மகள் என்று உறவுக்குள்ளே கல்யாணம் செய்து கொள்வது நல்லதில்லே. அதனால் பிறக்கும் குழந்தைகள் ஊனமுற்றவர்களாகப் போக வழியுண்டுன்னு நினைக்கிறாங்க. விஞ்ஞான அறிவு வளர்ந்திருக்கும் இந்தக் காலத்தில் உறவு, சொந்த பந்தம் இதற்குள் டாக்டருக்குப் படித்த நானே தெரிந்துகொண்டு தப்புச் செய்யக் கூடாதம்மா' சொல்ல நா துடித்தது.

நோயாளி அம்மாவுடன் தர்க்கம் ஏன்? புன்முறுவலுடன் தலையை ஆட்டி விட்டு, போர்வையை, உதறிக் கழுத்துவரை போர்த்தி, விடிவிளக்கை மட்டும் எரிய விட்டு, மெள்ள அறையைவிட்டு நகர்ந்தான் பரதன்.

அம்மா அந்தப் படுக்கையினின்று எழுந்து குணமடைந்தவளாக நடமாடவேயில்லை. ஒரு சில தினங்



களுக்குப் பின், ஏற்பட்ட ரத்தக் கொதிப்பில் மகன் தன் வைத்தியத் திறமைகளைக் காட்டுமுன் மூளையிலிருந்த ஒரு நாளம் வெடித்து வினாடியில் மயங்கி விழுந்தவள் எழுந்திருக்காது போய் விட்டாள்.

"தம்பி! காப்பி பலகாரம் எடுத்து வைக்கவா..." கிழவி தாயம்மாளின் உரத்த குரல் உலுப்பியது. பழைய நினைவுகளினின்று விழித்துக் கொண்டான்.

"இதோ வந்துட்டேன்" அவசரமாக ஓங்கி, பனியனை அணிந்து கொண்டு பூஜை அலமாரியைத் திறந்தான். பராசக்தி படத்தருகே அம்மாவும்—தாத்தாவும் தெய்வமாகச் சிறு படங்களில் காட்சி தந்தனர். இன்னொரு பக்கம், நிழலைப் போலக் கனவாக அவனுக்குத் தோன்றிய தந்தை, சின்ன வயதிலேயே இழந்து விட்ட அப்பா, இன்னொரு சிறிய படத்திற்குள் அடக்கமான புன்னகையுடன் அவனை அன்போடு பார்த்தார்.

"விளக்கேத்த வீட்டுக்கு ஒரு மகராசி வந்துட்டா, உனக்கு இந்தத் தொல்லையெல்லாம் குறைஞ்சுடும்" சொல்லிக் கொண்டே அலமாரித் தட்டின்மேல் தோட்டத்திலிருந்து பறித்து வந்த மல்லிகைப் பூக்களை வைத்தாள் தாயம்மாள்.

பராசக்தி படத்தருகே இருந்த சிறு குத்து விளக்கின் திரியை நிமிண்டிச் சரிசெய்து விட்டு ஏற்றினான்.

மல்லிகை மலர் ஒன்றை அம்பாள் படத்தில் வைத்து விட்டு அம்மா படத்திற்கொன்றைச் சூட்டினான் பரதன்.

கீழ்த்தட்டிலிருந்த ஊதுபத்திக் கட்டிலிருந்த சிலவற்றை உருவிப் பற்றவைத்துச் சலவைக் கல் ஊதுபத்தி பீடத்தில் சொருகினான்.

சில வினாடிகளில் அந்த ஹால் முழுவதையும்... கஸ்தூரியின் வாசனை நிறைத்துக் கொண்டது.

MITHRAVINTHA

''சாப்பிட வா தம்பி. இன்னிக்கு நீ ரொம்ப நேரம் கழிச்சு வந்திருக்க. மறுபடியும் திரும்ப ஓடணும். வா, எல்லாம் ஆறிப் போகும்...'' கனிவுடன் தாயம்மாள் அழைத்தாள்.

சமையலறையை ஒட்டியிருந்த அந்தச் சிறு பகுதி தான் சாப்பாட்டறையாக ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் போட்டிருந்த சிறிய சன்மைக்கா பாவிய மேஜை மேல் தாயம்மாள் தட்டைத் தயாராக எடுத்து வைத்திருந்தாள்.

''மல்லிகைப்பூப் போல இட்லி இன்னிக்கு நல்லாவே அமைஞ்சுடுச்சு.'' சொல்லிக் கொண்டே பாத்திரத்திலிருந்து இரண்டு இட்லிகளை எடுத்துத் தட்டின் மீது வைத்து நெய் சிறிது ஊற்றி...வீடு முழுதும் மணம் பரப்பிய வெங்காய சாம்பாரைச் சூடாக ஆவிபொங்க ஊற்றினாள் தாயம்மாள்.

''இன்னிக்கு இட்லியா செய்திருக்கீங்க?''

''தொட்டுக்கத் தேங்காய்ச் சட்னிகூட நல்லா காரமா அரைச்சிருக்கேன் தம்பி. ஏன் அப்படிக் கேட்கிறே? நேத்திக்கு இடியாப்பம் செய்தேன். முந்தா நேத்து உப்புமா—அதுக்கு மொதநாள் தோசை...'' அவள் அடுக்கிக் கொண்டு போனபோது குபீரென்று சிரித்து விட்டான் பரதன்.

''அதுக்கில்லை தாயம்மா. எங்க ஆஸ்பத்திரிலே ஒரு நோயாளிப் பெரியவர் இருக்கார். அவருக்கு இட்லியைக் கண்டா ஆகிறதில்லை. இன்னிக்கு அவரால்தான் நான் வரக் கொஞ்ச நேரமாச்சு தெரியுமா?''

''ஆவியிலே வைத்த பண்டம் உடம்புக்கு நல்லதாச்சுதே. அது யாரு அந்த மகராஜன் இட்லியை வெறுக்கிறவன். ஒரு சமயம் அமெரிக்கா போல் வெளி தேசத்திலே பல வருசமா இருந்துட்டு, காஞ்ச ரொட்டியைக் கடிச்சித் தின்ன பழக்கமோ என்னவோ? உடம்பு நல்லானதும் அந்தப் பெரியவரை நம்ப வீட்டுக்கு ஒரு தபா கூட்டியா. என் கையாலே வார்த்த இட்லியில் ஒண்ணைச் சாப்பிட்டுட்டு பிறகு பேசட்டும்''—சவால் விட்டுக் கொண்டு அவள் சட்டுவியை எடுத்துவர உள்ளே சென்று விட்டாள்.



தாயாரின் மறைவுக்குப்பின் அவன், தானே தன்னைக் கவனித்துக் கொள்ளத் தொடங்கியபோது அவர்கள் வீட்டில் முப்பது ஆண்டுகளாக வேலை செய்து நன்றியுள்ள நாய்போல ஒட்டிக் கொண்டிருந்த தாயம்மாள் மனமுருகிப் போனாள்.

''தம்பி! எனக்கு மட்டும் யார் இருக்காங்க—ஒன்னு விட்ட அக்கா மகன் வீட்டிலே, ஒரு அறையிலே ஒதுங்கிக் கிடக்க வாடகை கொடுத்துட்டு, சோத்துக்குப் பணம் கட்டிக்கிட்டுக் கிடக்கேன். என் மகளைப் புதுச்சேரியில் கட்டிக் கொடுத்து விட்டதாலே—அடிக்கடி அங்கே போக முடியலை. உனக்கு மறுப்பு இல்லேன்னா சமையலுக்கு உதவி செய்துகிட்டு சாமான் போட்டுக்கிடக்கிற பின் அறையிலே நான் படுத்துக்கிறேன். வீட்டையும் கவனிச்சுப்பேன். உன்னையும் கவனிச்சுப்பேன். உனக்குன்னு ஒரு மகராசி வந்த பிறகு—எனக்கு விடுதலை கொடுத்துடு. போயிடறேன். எனக்கும் ரொம்ப வயசு ஆயிடுச்சு...பாவம் நீ தனியா கஷ்டப்படுவியேன்னுதான் பார்க்கிறேன்...''

வீட்டையும் கவனித்துக் கொண்டு வேலையையும் திறமையுடன் கவனிப்பது எளிதான காரியமல்ல என்பதை உணர்ந்த பரதன்...

''ரொம்ப நன்றி தாயம்மா. அம்மா கொடுத்த சம்பளத்துக்கு மேலே ஒரு பங்கு போட்டுத் தரேன். கவலைப்படாதீங்க...'' என்றான்.

அந்த ஒப்பந்தத்தில் தாயம்மாள் தான் வசித்த அண்ணன் மகன் வீட்டிலிருந்து தன் சிறு மூட்டையுடன் பரதன் வீட்டு சாமான் அறைக்குள் குடியேறி விட்டாள்.

MITHRAVINTHA

அம்மாவைப் போன்ற திறமைசாலியல்ல அவள். சமையலும் சுமாராகத் தானிருந்தது. ஆனாலும் வேளைக்கு ஏதோ சூடாகக் கிடைத்தது. அவன் இரவு பணி—பகல் பணி என்று வேலைக்குப் போன போதெல்லாம் வீட்டைக் கவனித்து, கூட்டிப் பெருக்கி, சுத்தப்படுத்தி, அழுக்கு உடைகளைத் துவைத்துக் காய வைத்து ஏதோ ஒரு சோறு குழம்பு பொங்கி வைத்துத் தனக்குத் தெரிந்த வரையில் அவள் நிர்வகித்துக் கொண்டு போனாள். அது போதும் என்ற மனதுடன் மிகவும் நிம்மதியாகத் தானிருந்தான். கிடைத்த சாப்பாட்டைக் குறை சொல்லாது சாப்பிட்டான்.

தந்தையோடு கல்விபோம்—தாயோடு அறுசுவை உண்டிபோம் என்றபடி, அவனது வாழ்க்கையில் தந்தையாகவும் தாயாகவும் நின்ற அம்மா போனது எல்லாமே போய் விட்ட வெறுமையில் ஓரளவு அவன் மனநிலே விரக்தி ஏற்பட்டிருந்தது.

இட்லி அப்படி ஒன்றும் மல்லிகைப் பூவாக இருக்கவில்லை. பிட்டுத் தின்ன கொஞ்சம் கல்லுப்போல் தானிருந்தது. சாம்பாரின் சூட்டில் அதை இளகவிட்டு விண்டு, தாயம்மாள் பரிமாறிய சட்டினியுடன் வாயில் போட்டுக் கொண்டு விழுங்கிவிட்டு, தானே சிரித்துக் கொண்டான்.

முப்பத்து மூன்றாம் நம்பர் அறை தணிகைவேலனுக்கு இட்லி பிடிக்காத ரகசியம் என்னவோ?... ஆனால் அவர் மட்டும் இப்போது அவன் வீட்டுக்கு வந்து தாயம்மாள் தயாரித்ததைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டால் கட்டாயம் எட்டு ஊர் ஓட்டம் பிடிப்பார், நிச்சயம்.

சிரித்த சிரிப்பில் அவனுக்குப் புரை ஏறிக் கொண்டு விட்டது. தம்ளரில் நிறைத்து வைத்திருந்த தண்ணீரைப் பட்டென இரண்டு வாய் பருகினான்.

# 4

அன்று வழக்கம்போல விடியுமுன் நர்ஸிங்ஹோமை விட்டுப் புறப்பட அவன் ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது ஒரு அவசரக் கேஸ் வந்துவிட்டது. குடிபோதை தெளியாத நிலையில் கழிவறைக்குள் போக நுழைந்தவன் கால் வழுக்கி இடுப்பிலும் தோள்பட்டையிலும் பலத்த அடியுடன் கொண்டு வரப்பட்டிருந்தான்.

பணக்கார வீட்டுப் பிள்ளை...வீடே படையாகக் கூடத் திரண்டு வந்து விட்டிருந்தது. மூக்கிலும் காதிலும் வைரமாக ஜொலித்த அம்மா, பட்டுப் புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவனைப் பரிதாபமாகப் பார்த்தபோது, அந்தக் கேஸைக் கவனித்து ஆவன செய்ய வேண்டிய நிர்பந்தத்தில் நேரம் போவதே தெரியாது, உற்சாகத்துடன் சிகிச்சையில் ஈடுபட்டு விட்டான்.

கையைக் கழுவிக்கொண்டு... டாக்டர் கோட்டைக் கழற்றி நாற்காலி கைமேல் போட்டுவிட்டு, கைகளை உயரத் தூக்கிச் சோம்பல் முறித்தபடி அவன் கிளம்பத் தயாரானபோதுதான் நர்ஸ் ராதிகா ஓடி வந்தாள் மூச்சிறைக்க.

வயதிலும் பருமனிலும் அனுபவத்திலும் மிக்க ராதிகா தான் அன்று இரவுப் பணியின் பொறுப்பான நர்ஸ். அவள் பதை பதைக்கிறாள் என்றால் காரணம் ஏதாவது இருக்குமென்று பரபரப்புடன் நாற்காலி கையிலிருந்த கோட்டைத் திரும்ப எடுத்துப் போட்டுக் கொண்டான். ''டாக்டர் பரதன்! தயவுசெய்து, நீங்க முப்பத்தி மூன்றாம் நம்பர் அறைக்கு வரணும். அந்தக் கிழவன் ரொம்பப் படுத்தறான்'' என்றாள்.



MITHRAVINTHA

கைக்கடிகாரத்தை உற்றுப் பார்த்தான். ஆறு மணி, நன்றாகவே விடிய ஆரம்பித்து விட்டது.

முப்பத்து மூன்றாம் எண் அறையில் கோபாவேசமாக நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் தணிகைவேல்.

காப்பிக்கெட்டிலும் கப்பும் கீழே விழுந்து உடைந்து தூளாகிக் கிடந்தன. பீங்கான் பிளேட் ஒன்று அறை மூலைவரை ஓடி இரண்டாகப் பிளந்துகொண்டு அது தாங்கியிருந்த இட்லிகளை மூலைக்கொன்றாகச் சிதற விட்டிருந்தது. அறை முழுவதும் காப்பி ஆறாக ஓடிக் கொண்டிருந்தது.

''ஆரம்பிச்சுட்டீங்களா! அப்படிக் கோபப்படறது உங்க உடம்புக்கு ஆகாதுன்னு எத்தனை வாட்டி சொல்வது'' சிரித்துக்கொண்டே அவரை அணுகி அன்புடன் அவரது தோளைத் தட்டினான் பரதன்.

''உடைஞ்சு போன சாமான்களுக்கு உண்டான தொகையை பில்லோட அபராதமா போடச் சொல்லி டுங்க. இந்த நர்ஸ் அம்மாளுக்கு வயசாச்சே யொழிய புத்தியில்லை. நான்தான் கிளிப்பிள்ளையாட்டம் எனக்கு காப்பி பலகாரத்துக்கு இட்லி அனுப்பாதீங்க, பிடிக்கா துன்னு சொல்லி இருக்கும்போது—''

''டாக்டர் பரதன்! சாதாரணமாக நாம் இந்த விடியக் கால வேளையிலே நோயாளிகளுக்கு ஒரு கப் காப் பியும் ரெண்டு பிஸ்கெட்டுந்தானே கொடுப்போம்? அதைக் கொண்டுவந்த பையனை இவர் விரட்டி அடிச் சார். அவன் என்கிட்ட வந்து முறையிட்டான். நான் ஓடிவந்து கேட்டப்போ, தனக்குப் பசிக்குது, வெறும் பிஸ்கெட் பத்தாது காப்பியோட பலகாரம் ஏதாச்சும் அனுப்பணும். சர்க்கரை வியாதிக்காரன், அடிக்கடி பசிக் கும் என்பது தெரியாதான்னு கத்தினார். நான் உடனே நம்மோட சமையற்கட்டுக்குப் போய் அப்பத்தான்



சமையற்காரர் இறக்கிக் கொண்டிருந்த இட்லிகள் இரண்டை எடுத்து வச்சு சாம்பார் கிண்ணத்தையும் வச்சு சாப்பாட்டுத் தட்டில் இதுகளோட பையன்கிட்ட அனுப்பி வச்சுட்டு அடுத்த அறை நோயாளியைப் பார்க்கப் போனேன். அதற்குள்ளே இங்கே ஒரு இடியோசை கேட்க, பயந்து வந்து பார்த்தா இட்லி, காப்பி கொண்ட தட்டை எட்டி உதைச்சு, தள்ளி உடைச்சு யார் இட்லி அனுப்பிச்சது? எனக்குப் பிடிக்காதுன்னு தெரியாதா? அந்த மர மண்டையை வரச் சொல்லுன்னு எட்டு வீடு கேட்கிறாப்பல கத்தத் தொடங்கிவிட்டார். என்னாலே சமாளிக்க முடியலை. உங்களைக் கூட்டி வந்தேன்.'' படபடவென்று பொரிந்து தள்ளினாள் நர்ஸ் ராதிகா. இடையே தணிகைவேலைத் தனது கண்களால் பலமுறை கோபத்துடன் வெட்டினாள்.

''பெரியவரே, ஏதோ தப்பு நடந்துடுச்சு, மன்னிக் கணும். அதுக்காக நீங்க உணர்ச்சிவசப்பட்டு, நர்ஸிங் ஹோமுக்குச் சொந்தமான பொருளை உடைச்சுப் பாழாக் கிறது தப்பில்லையா? மேலும் நர்ஸ் அம்மாளைக் கண்ட படி திட்டுகிறது உங்களைப் போல பெரியவங்களுக்கு ஏத்த செய்கையா... அனாவசியமான கோபத்துக்கு இடம் கொடுத்தா உங்களுக்குத்தானே ஆபத்து...?''

''ஆபத்து வரட்டும்... அப்படியே நான் போனால் எனக்காகப் பரிதாபப்படப் போறவங்க யாரும் கிடை யாது. முதல்லே இந்த நர்ஸ் அம்மா— தொலைஞ்சான் கிழவன்னு சந்தோஷப்பட்டுக்குவாங்க.'' தணிகைவேல் தணியாத கோபத்திலே உறுமினார்.

''அப்படியெல்லாம் பேசக்கூடாது. உங்களோட பழகினவன் என்கிற முறையிலே உங்களைப்பத்தி அக்கறை கொள்ள நான் இருக்கேன். அனாவசியமா கத்திக் கூச்சலிட்டு உடம்பைக் கெடுத்துக்கிட்டீங்கன்னா நான் ரொம்ப வருத்தப்படுவேன். இப்போ நான் உங்க

MITHRAVINTHA

ளுக்கு வேறே ஏதாவது சாப்பிடக் கொண்டு வரச் சொல்றேன். அவசரப்படாதீங்க'' என்று கூறிவிட்டு நர்ஸ் அருகே வந்து பரதன் கிசுகிசுத்தான்.

சிறிது பொழுதில் அறையைச் சுத்தம் செய்யும் ஆள் வந்து உடைந்த கோப்பை, தட்டு, கெட்டில் சிதறல்களை அப்புறப்படுத்தி அறையைச் சுத்தம் செய்துவிட்டு நகர்ந் தான். அதற்குள் ஒரு பையன் மரத் தட்டில் கெட்டிலில் சூடான காப்பியும் ஊற்றிச் சாப்பிடக் கோப்பையும் சுட்ட ரொட்டியும், வெண்ணையும் கொண்டுவந்து வைத் தான்.

கத்தியால் வெண்ணையைத் தொட்டு ரொட்டி மீது லேசாகப் பூசி இரண்டாகத் துண்டமிட்டுத் தட்டைப் பெரியவரிடம் நீட்டினான் பரதன்.

''இப்போ சாப்பிடுங்கோ என் கையால் கொடுக் கிறேன்.'' சிறு குழந்தையிடம் கொஞ்சுவது போன்று தணித்த குரலில் தணிகைவேலுக்கு உபசரித்தான்.

ரொட்டியை மென்று தின்றபடி தணிகைவேல் தன் அருகே புன்முறுவலுடன் அமர்ந்திருந்த பரதனை...பல முறை ஓரக்கண்ணால் பார்த்தார். கோப்பையில் அவன் ஊற்றிக் கொடுத்த காப்பியை வாங்கிக் குடித்தார். அவர் செய்கைபற்றி அவருக்கே வெட்கமாகி விட்டது போலும்...

சுற்றும் முற்றும் பார்த்தார்...அறையில் அவர் களிருவர் மட்டுமிருந்தனர்.

''டாக்டர் பரதன்!...கையை நீட்டுங்க'' சொல்லிய படி தணிகைவேல் அவனது கரத்தைப் பற்றினார்.

''இந்த நர்ஸிங்ஹோமில் எனக்குப் பிடிச்சவர் நீங்க ஒருத்தர்தான். முதல் நாள் பார்த்ததிலிருந்து எனக்கு என்னவோ உங்க மேலே ஒரு ஈர்ப்பு. முந்திய பிறவியிலே நீங்க எனக்கு ஒரு மகனாக இருந்திருக்கணும், அல்லது என்



அன்புக்குகந்த மருமகனாக இருந்திருக்கணும். அப்படி ஒரு நெருக்கமான உறவின் தொடர்புதான் இப்போ என்னை உங்கமேலே அன்பு வைக்கச் செய்தது.

''உலகமே வெறுத்து, வாழ்வின் கசப்பைத் தாங்க முடியாம, சாகுமட்டும் சௌகர்யமா ஒரு இடத்திலே கிடந்து உசிரை விடணும்னு எண்ணிக் கொண்டு இங்கே வந்து கிடக்கிறேன். உங்களைக் கண்ட மட்டும் மனசிலே ஒரு தெம்பு ஏற்பட்டது. நான் பிழைச்சு யாருக்கு என்ன லாபம்? அது வேற விஷயம்.''

மெல்ல தன் கையை விடுவித்துக்கொண்டு பரதன் அவரது தோளைத் தட்டினான்.

''கொஞ்சம் படுக்கையிலே சாஞ்சுக்கோங்க. உங் களைக் குமாய் வச்சுப் பரிசோதனை பண்ணிட்டுப் போறேன். எனக்கு டியூட்டி முடிஞ்சு போச்சு. வீட்டுக்குப் போய் மறுபடி திரும்பணும்.''

''பிறகு வந்து பரிசோதனை பண்ணிக்கோங்க டாக்டர். முதல்லே நீங்க வீட்டுக்குப் போங்க. பாவம், உங்களைப் பெத்த தாய் வாசலில் நின்றுகிட்டு உங்க வரவுக்குக் காத்திருப்பாங்க.''

''மிஸ்டர் தணிகைவேல், என் தாயார் காலமாகி ஓராண்டு ஓடிவிட்டது.''

''அடபாவமே. அப்போ வீட்டிலே...?''

''ஒரு வேலைக்கார அம்மா இருக்காங்க. என் வரைக்கும் நான் தனியாள்தான். அது கிடக்கட்டும். இப்ப கேட்டா கோவிச்சுக்க மாட்டீங்களே. ஆமாம் உங்களுக்கு இட்லியைக் கண்டால் ஏன் அப்படி ஒரு வெறுப்பு?''

''காசிக்குப் போய்விட்டு வரவங்க, தங்களுக்கு பிடிச்ச ஒரு பழம் ஒரு காய் இவைகளை உணவிலிருந்து விலக்கிக் கொண்டு விடுவாங்களாம்.''

MITHRAVINTHA

''என் தாயார் கூட ஒரு தடவை காசிக்கு ஒரு சுற்றுலாப் பயணக் கோஷ்டியுடன் போய் வந்தாங்க. அவங்களுக்கு அவரைக்காயும், மல்கோவா மாம்பழமும் ரொம்பப் பிடிக்கும். இது ரெண்டையும் அதுக்குப் பிறகு சாப்பிடறதேயில்லை. எங்க வீட்டுத் தோட்டத்திலே அவரையை தாங்க வளர்க்கறதேயில்லையினா பார்த்துக் கோங்க—அம்மாவுக்கு ரொம்ப வைராக்கியம். எத்தனை ஆசை காட்டினாலும் மாம்பழ சீஸனில் அந்தப் பழங்கள் பக்கமே திரும்பிப் பார்க்க மாட்டாங்க.''

மெல்லச் சிரித்தான் பரதன்.

''எனக்குக் காலை காப்பி பலகாரத்துக்கு இட்லி சாப் பிடறது ரொம்பப் பிடிச்ச விஷயம்தான். ஒரு தடவை நான் வடநாட்டுச் சுற்றுப் பயணத்தில் அகப்பட்டுக் கொண்டப்போ ஒரு வார காலம் இட்லி சாம்பார் சாப்பிடாமே பூரியும் சப்பாத்தியும் சாப்பிட்டுத் தவிச்சுப் போனேன். அத்தனை பிரியமான உணவை நான் வெறுக் கிறேன்னா அதுக்கு ஒரு கசப்பான சம்பவம் காரணமாக இருக்கும்னு உங்களால் ஊகிக்க முடியலையா டாக்டர்?

''காலை பலகாரத்துக்கு இட்லி, காப்பி சாப்பிட்டு அஞ்சு வருஷமாகப் போகுது.

''கடைசியாகச் சாப்பிட்ட அந்த நாள் நடந்த சம்ப வத்தை இப்ப நினைச்சாலும் என் நெஞ்சு கொதிக்குது...''

''வேண்டாம். சொல்ல வேண்டாம். உங்க மனது கஷ்டப்படும் கதைகளை என்னிடம் நீங்கள் விவரிக்கத் தேவையில்லை.''

''டாக்டர் பரதன்! உங்ககிட்ட கட்டாயம் சொல்ல விரும்பறேன். ஆனால் இன்னிக்கல்ல. ஒரு நாள் சொல்லு வேன். அப்போ நீங்க எனக்காகக் கட்டாயம் அனுதாபப் படுவீங்க...''



கோபமும் தாபமுமாக மின்னிய அவரது கண்களை அனுதாபத்துடன் பார்த்த பரதன் எழுந்து அவர் தோள் களை மீண்டும் பரிவுடன் தட்டினான்.

''நடந்ததை மறந்து விடுவோம். நான் வீட்டுக்குப் போய்விட்டு விரைவில் வந்துடறேன்.'' விடை பெற்றுக் கொண்டான்.

''என்ன தம்பி சிரிக்கிற!'' தாயம்மாள் தாங்க முடியாத ஆவலில் கேட்டாள்.

''ஒன்றுமில்லை. எங்கள் நர்ஸிங்ஹோமில் பலகாலமா வேலை செய்து, தான் அனுபவசாலி, தலைவரின் மதிப் புக்கு உகந்தவள் என்று கர்வம் பிடிச்ச நர்ஸ் இருக் கிறாங்க. மத்த நர்ஸ்—ஆள்படைகளை ஓட ஓட விரட்டும் வீராங்கனை.

''அந்தம்மாளை முப்பத்து மூணாம் நம்பர் அறை நோயாளி இன்னி காலையிலே அழ வச்சுட்டார். ஆட்டிப் படைச்சுட்டார். மரமண்டைன்னு மட்டந் தட்டிட்டார். அதை நினைச்சேன், சிரிக்கிறேன்.''

சொல்லிக்கொண்டே சிரித்தபடி கை கழுவ எழுந் தான். ''ஆனாலும் தணிகைவேலு பொல்லாததொரு கிழவன்'' என்று சொல்லியபடி மீண்டும் சிரித்தான்.

வேலைக்கு மறுபடி கிளம்புமுன் சிறிது ஓய்வாக இருக்க அவன் தன் அறைக்குள்ளே சென்று படுக்கை மீது சாய்ந்து கொண்டான். நிற்க நேரமின்றி இரவு முழுவதும் கண் விழித்து உழைத்தநின் அலுப்பு உடம்பை யாரோ அடித்துப் போட்டது போல வலித்தது. மறுபடி வேலைக்குக் கிளம்ப இன்னும் இரண்டு மணி நேரமிருக் கிறது. அதற்குள் ஒரு குட்டித் தூக்கம் போட்டால்—?

''தம்பி! இந்தக் கடுதாசியைக் கொடுக்க மறந் துட்டேனே. நேத்து சாயங்காலம் நீ ரொம்ப சீக்கிரமா

MITHRAVINTHA

ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிப் போயிட்டதினாலே சாயங்காலத் தபாலில் வந்ததை அலமாரியிலே எடுத்து வச்சிருந்தேன்.'' தாயம்மாள் ஒரு தபால் உறையை அவனிடம் கொண்டு வந்து நீட்டினாள்.

அவன் அதைப் பிரிக்கும்முன் தொலைபேசி அலறியது...

மறுமுனையில் அபிராமி நர்ஸிங்ஹோமின் ரெஸிடெண்ட் டாக்டர் பேசினார்.

''டாக்டர் பரதன் இன்னிக்குத் தலைவருக்கு நல்ல மூட்டு வலி-அதனால் ஆபரேஷன்களைக் கான்ஸல் பண்ணிவிட்டோம். எமர்ஜன்சி ஏதும் இப்ப சந்நியா இல்லை...நீங்க நேத்து ராத்திரி உறங்காம பல கேஸ்களைக் கவனிச்சிங்களாம். நர்ஸ் ராதிகா சொன்னாங்க... அதனாலே உங்களுக்கும் நர்ஸ் ராதிகாவுக்கும் சாயங்காலம் ஐந்துமணிவரை ஓய்வு. பிறகு வந்து உங்க வார்டை ஒரு தடவை சுத்திப் பார்த்துட்டுப் போகலாம். அதுவரை நல்லா படுத்துத் தூங்குங்க. நாளைக்குத் திடீர்னு தலைவர் வேற யாரையாவது வச்சு ஆபரேஷன்களை நடத்தணும்னு உத்தரவிட்டாலும் ஆச்சரியப்படரத்துக் கில்லை. அதனாலே காத்துள்ள போதே தூத்திக் கோங்கோ. வேலையில்லாத சமயம் நல்ல ஓய்வு எடுத்துக் கோங்க. என்ன...?''

மறு பக்கம் உரத்த குரலில் சிரித்தார்.

பரதனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. வகுப்புகளில் உட்கார்ந்ததும் வாத்தியாருக்கு உடம்புக்குச் சுகமில்லை. உங்களுக்கெல்லாம் இன்னிக்கு வகுப்பு கிடையாது. வீட்டுக்குப் போகலாம் என்று தலைமை ஆசிரியர் வந்து சொன்னால் பள்ளிச் சிறுவர்கள் எப்படி ஆர்ப்பரித்துக் கொண்டு வெளியே ஓட முயலுவார்களோ அதுபோல அவன் உள்ளம் சின்னப் பையனாக மாறி மகிழ்ச்சியில் துள்ளியது.



அப்பாடா, தாயம்மாளை நல்ல காரமா வெந்தயக் குழம்பு வைக்கச் சொல்லிச் சாப்பிட்டுட்டு ஒரு நல்ல தூக்கம் போடலாமே...

தூக்கம் வரும் வரை புல்லாங்குழல் ரமணியின் 'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா' டேப்பில் பதிவானதைப் போட்டுக் கேட்டு மகிழலாம். டைஜஸ்டில் வந்த புத்தகத் தொகுதியான ''தி இன்டர்ன்'' என்பதை மறுபடியும் ஒரு தடவை படிக்கலாம்.

ஏ. ஜே. க்ரேன் எழுதிய ''பியாண்ட் த பிளேஸ்'' என்பதை இன்னொரு தடவை படித்துச் சுவைக்கலாம். வாயிலில் அம்மா நட்டு வைத்து விட்டுப்போன ரோஜாச் செடியில் எத்தனை பூ மொட்டுக்கள் என்று கணக்கிட்டுப் பார்க்கலாம். அம்மா அலமாரியிலிருந்து அந்தப் போட்டோ ஆல்பத்தை எடுத்து மறுபடியும் படங்களைப் பார்த்து அம்மாவோட திருக்கழுக்குன்றத்திலே, மகாபலிபுரத்திலே, குற்றாலத்திலே பள்ளிச் சிறுவனாக இருக்கையில் எடுத்த படங்களைப் பார்த்து அந்த நாட்களுக்குள் நுழைந்து தனிமையை மறக்கலாம். அப்பப்பா!...இந்தச் சிலமணி நேரங்களில் அவன் எத்தனையோ செய்ய முடியும்—? என்று எண்ணியபடி முதலில் கடிதத்தைப் பார்ப்போம்...என்று உறையைக் கிழித்தான்.

பெங்களூர் மாமா சதாசிவம் எழுதியிருந்தார். மிகவும் சுருக்கமான கடிதம்.

''அம்மாவும் நானும் அடிக்கடி கடிதமூலம் தீர்மானித்துக் கொண்ட சங்கதியைப் பற்றி நேரில் உன்னுடன் வெளிப்படையாகக் கலந்து பேச விரும்புகிறேன். நீ அன்று தொலைபேசியில் சொன்ன கெடு தாண்டி விட்டது. சாரதா மறைந்து ஒரு ஆண்டு காலமாகி விட்டதால் இனி, நாம் மங்களகரமான விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பதில் தடை ஏதுமில்லை. வருகிற புதன் நான் சென்னைக்கு ஒரு காரியமாகப் பறந்து வரப் போகிறேன்.

MITHRAVINTHA

உன்னை எங்கே எப்பொழுது சந்திக்க முடியும் என்பதைத் தொலைபேசி மூலம் அறிவிக்க முடியுமா? உன் அன்புள்ள மாமா சதாசிவம்.''

கடிதத்தை மடித்து மேஜைமீது வைத்து அது பறந்து விடாதிருக்க ஒரு பேப்பர் வெயிட்டை வைத்தான்.

அதன் கனத்தை விடப் பன்மடங்கு அவன் மனம் சங்கடத்தில் கனத்தது.

மாமாவின் மகள் நளினி, அம்மா சொன்னபடி அழகி தான். ஒடிய உயரமாகக் கொடி போலத் தானிருந்தாள்.

மிதமான ஒப்பனையில் கண்களால் சிரித்துக் கவர்ந்து கொண்டு விடும் ஒரு தனி அழகு அவளிடம் ஒளிர்ந்தது உண்மை.

ஆனால் அவன் நளினியைக் கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று ஏற்கனவே முடிவு எடுத்து விட்டிருந்தான்.

அவளது அழகும்—அவள் அப்பாவின் செல்வாக்கும்—பணமும் அவனை ஈர்க்கவில்லை.

அம்மா காலமான பின்பு அவளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற அவன் தன் நர்ஸிங்ஹோம் பணியிலின்று இரண்டு நாள் லீவு எடுத்துக்கொண்டு மாமாவைக் கண்டு பேச பெங்களூருக்குப் புறப்பட்டான்.

மாமா சென்னைக்கு வரும்போதெல்லாம் ஒட்டலில் தங்கிக் கொள்வது வழக்கம்.

அவன் மட்டும் கௌரவத்தை விட்டுக் கொடுப்பானேன்? பெங்களூர் கன்டோன்மென்ட் ஸ்டேஷனில் இறங்கியதும் முன்பு ஒரு தடவை அல்சூர் பகுதியில் தங்கியிருந்த ஓட்டல் அபர்ணாவில் அறை எடுத்துக் கொண்டான்.



பகல் உணவுக்குப்பின் தூங்கிவிட்டு எழுந்தான். முகத்தைக் கழுவி, உடைகளை மாற்றிக்கொண்டு மாமா வீட்டுக்குத் திடீர் விஜயம் செய்யப் புறப்பட்டான்.

மாமா இந்திரா நகரில் சொந்த வீட்டில் வசித்துக் கொண்டிருந்தார். முதல் முதலாகப் போகும்போது வெறும் கையுடனா போவது? நீலகிரி ஸூப்பர் மார்க்கெட்டிற்குள்... பிஸ்கெட், கேக் வாங்கப் புகுந்தான்.

கவுண்டர் அருகே நின்ற அந்த உயரமான பெண்மீது படிந்த பார்வையை அவனால் சட்டென்று எடுக்க இயலவில்லை. பெல்பாட்டமும்... டாப்புமாக... நாகரீக அலங்காரத்திலிருந்தாள் அவள். இருபது வயதுக்குச் சற்றுக் கூடுதலாக இருக்கும் என்று மனம் கணித்துக்கொண்டது.

வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு அவன் வெளிப்பட்ட அதே சமயம் அவளும் வெளியே வந்தாள். இடுப்பு வரை தொங்கிய கூந்தலை, ஒரே மட்டத்தில் நுனியில் வெட்டி விட்டுக் கொண்டிருந்தாள். முடிக்காது நீர்வீழ்ச்சி போல அவள் முதுகிலே சீராகப் பரவிக்கிடந்த அந்தக் கூந்தலின் செழுமையை வியந்தபடி மெல்லக் கடைக் கண்ணால் அவளைப் பார்த்தான்.

''நளினி! உன்னைக் கடைக்குள்ளே தேடிக் கொண்டிருந்தேன். அதுக்குள்ளே நீ எல்லாம் வாங்கிட்டியா?'' கேட்டபடி ஒரு இளைஞன் கருப்புக் கண்ணாடியணிந்தவன் ரஜனி ஸ்டைல் நடையில் வெளியே வந்து மிகவும் உரிமையோடு அவள் தோளை அணைத்துக் கொண்டான்.

''நளினி!''... தலைக்குள்ளே மத்தாப்பு வெடித்த உணர்வு...

மாமா பெண் ஒருத்தியின் பெயர்தான் நளினியோ, பெங்களூரில், எத்தனையோ நளினி இருக்கக்கூடும். ஏன் மனம் இப்படிப் படபடக்கிறது. அவளை அன்பாக அணைக்கிற அந்த ஆடவனைக் கண்டு வியப்படைகிறது.

MITHRAVINTHA

''உங்கப்பா ஊரில் இல்லை. அதுதான் இத்தனை சுதந்தரமா கிளம்பிட்டே'' —அந்த வாலிபன் கேட்ட போது முடியெல்லாம் முன்னால் பறக்க வெடுக்கென்ற கோபத்துடன் அவள் திரும்பினாள்.

''அப்பாவைப் படச்ச பிரம்மதேவன் வந்தாக் கூட என் சுதந்திரத்திலே குறுக்கிட முடியாது. அப்பாவும் அம்மாவும் பேசிக்கிட்டதைக் கேட்டுக் கிட்டிருந்தேன். விஷயம் கிட்டக்க வரட்டும். பிறகு பார்க்கலாம்னு நான் பேசாம இருக்கேன்.'' அவள் சொல்லிக்கொண்டே நடைபாதையில் அவனுடன் நடந்தாள்.

திக்கென்ற உணர்வுடன் டாக்டர் பரதன் அவனையு மறியாத ஒரு வேகத்திலே வந்து தூரத்திலிருந்தபடி அவர்களைப் பின்பற்றினான்.

''நாளைக்குக் காலையிலே அப்பா வந்துடுவார். அவர் மெட்ராசுக்குப் போயிருக்கிற நோக்கம் என்னன்னு எனக்குத் தெரியும். அவருடைய ஒண்ணுவிட்ட சகோதரி மகனுக்கு என்னைக் கட்டி வைக்கப் பேச்சு வார்த்தை நடத்தப் போயிருக்கார். அவன் அம்மா செத்து இன்னும் சில மாசம் கூட ஆகலை. அதனாலே அவன் வருஷத்துக் குள்ளே கல்யாணத்துக்கு ஒப்புவானாங்கிறது சந்தேகம்.''

ஓங்கி பலமானதொரு தடியால் யாரோ தலைமீது அடித்த வேதனை பரதனுக்கு.

இதென்ன ஆச்சரியம். அவன் கேட்பது உண்மை யானால் அந்தப் பெண், அந்த உயரமான அழகி, பெல்பாட்டம், அவனது மாமா சதாசிவத்தின் மூத்த மகள் எம்.ஏ. பட்டதாரி நளினியா?

''அப்போ...நம் விஷயம்...'' அடிக்குரலில் கோபத் துடன் கேட்டான் அந்த வாலிபன்.

''ரங்கா! நீ ஏன் இப்படிக் கோவிச்சுக்கிறே. உயிர் போனாலும் உன்னைத்தவிர வேறே யாரையும் நான்



கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். நம்ம காதல் விஷயத்தை இன்னும் வெளிப்படையா அப்பாகிட்டே பேசலை.''

''அத்தை மகன் மெட்ராசில என்ன வேலை பார்க் கிறான். உங்க அப்பாவுக்கு அப்படி என்ன ஒரு சார்ப்பு?''

''டாக்டருக்குப் படிச்சிருக்கான். எம். எஸ். பாஸ் செய்திருக்கிறான். இப்போ எங்கேயோ ஒரு நர்ஸிங் ஹோமில் ஒரு பிரபல சர்ஜன் கீழே வேலை பார்க்கிறா னாம்.''

''பணம்...பதவி...பட்டம் இதெல்லாம் கண்டு உன் அப்பா மயங்கிட்டார் போல இருக்கு.''

''ப்பூ! பட்டத்தோட சரி, அந்தஸ்திலே எங்க அத்தை எங்களுக்குச் சமதையில்லை.''

''நான் கூடத்தான்'' சிணுங்கினான் அந்த வாலிபன்.

''நீ என் சிநேகிதன். நாம ரெண்டு பேரும் காலேஜ் நாட்களில் இருந்து மனம் விட்டுப் பழகினவங்க. எனக்கு நீ, உனக்கு நான்னு சத்யம் பண்ணிட்டிருக்கோம். அப்பா அந்த சர்ஜனை எனக்குக் கல்யாணம் செஞ்சுவச்சு ஒரு நர்ஸிங்ஹோம் கட்டிக்கொடுத்து அவனை பெங்களூரில் ஓகோன்னு பண்ணணும்னு திட்டம் போட்டிருக்கார். ஆனால் என் திட்டம் வேறே. நாளைக்கு அப்பா திரும்பி வந்ததும் என் மனசிலிருக்கிறதைச் சொல்லிடுவேன். அப்பா ஒத்துக்காட்டா நாம என்ன செய்யணும்னு மேற் கொண்டு யோசிக்க வேண்டியதுதான்.''

''நளினி! உனக்கு அத்தனை துணிவு இருக்கா?''

''ரொம்பவே துணிவு உண்டு. நான் ஒரு காரியத்தை நினச்சா முடிச்சுவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன். பிடிவாதக்காரின்னு அப்பாவுக்குத் தெரியும். நம்ம காதல் விஷயம் அம்மாவுக்குக்கூட லேசாத் தெரியும்னு நினைக்

MITHRAVINTHA

கிறேன். அதனாலேதான் அம்மா அப்பாவைப் பட்டணத்துக்கு ஏவி விட்டிருக்காங்க!''

''உங்க அத்தை மகன், அவனை நீ பார்த்திருக்கியோ?''

''சொந்த அத்தையில்லை. கொஞ்சம் தூர உறவு. எப்பவோ சின்ன வயதிலே பார்த்தது. அதுக்கிப்ப என்ன?'' கோபத்துடன் சீறினாள் அவள்.

''அவன் பேர் கூடத் தெரியாதா?''

''பெயரிலே என்ன இருக்கு சொல்லு ரங்கா? பரதன்னு பேர். அவன் பரதனா இருந்தா என்ன? ராமனா இருந்தா எனக்கென்ன? எனக்குக் கணவனா வரவேண்டியவன் இந்த ரங்கன், போதுமா?''

காது மடல்கள் சூடாகி முகமெல்லாம் ஜிவ்வென்ற உணர்வில் தகிக்க, அவமானமும் கோபமுமாகப் பின்னால் நடந்த பரதன், தனது திசையைச் சட்டென்று மாற்றிக் கொண்டான்.

அந்தப் பெண் அவனது ஒன்றுவிட்ட மாமன் சதாசிவத்தின் மகள் நளினி என்பது திட்டவட்டமாகப் புரிந்து விட்டது.

இந்த எதிர்பாராத சந்திப்பிலே ஒரு உண்மையும் விளங்கி விட்டது. அவள் வேறு ஒருத்தனைக் காதலிக்கிறாள். வற்புறுத்திப் பெண்ணை தனக்கு மாமன் கட்டி வைத்து மகள் வாழ்வையும் மருமகன் வாழ்க்கையையும் பாழடிக்கப் போகிறார்.

நல்லவேளை. அவர்கள் வீட்டுக்குப் போகுமுன்னே யார் செய்த புண்ணியமோ அவனுக்கு நிலைமை தெரிந்து விட்டது.

வாங்கிய கேக் பிஸ்கட்டை ஹோட்டல் அறைப் பையனுக்குச் சாப்பிடக் கொடுத்துவிட்டு இரவு கிளம்பிய



பஸ்ஸில் இடம் பிடித்துச் சென்னைக்குத் திரும்பி விட்டான்.

ஒருநாள் முழுவதும் ஓய்வாக வீட்டில் தங்கியும் அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி முற்றிலும் அடங்கவில்லை.

அண்ணன் உறவு விட்டு போகக்கூடாது என்று அம்மா எண்ணியது எத்தனை பெரிய பிசகு!

பெருத்த அவமானத்திலிருந்து அவன் அதிசயமாகத் தப்பிக் கொண்டானே? பலமுறை-பெங்களூர் நிகழ்ச்சியை நினைத்துத் தன்னுள் வியப்படைந்தான்.

அம்மா அவன் காலில் போட்டு விட்டுப் போன பலமான கால்கட்டு, தானே அவிழ்ந்து கொண்டு, அவனைச் சுதந்திர மனிதனாக—எந்தக் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டவனாக இல்லாத ஒரு தனி மனிதனாக நிம்மதியாக்கி விட்டது போன்றிருந்தது அந்த சம்பவம்.

மறுநாள் வேலைக்குப் போனபோது ரிஸப்ஷனிஸ்ட் தகவல் தந்தாள்.

''உங்களைத் தேடிக்கொண்டு அவசரமாகப் பார்க்க ஒரு மனிதர் வந்தார். அவர் இந்த விசிட்டிங் கார்டைத் தந்து விட்டுப் போனார்.''

கார்டை வாங்கிப் பார்த்தான். பெங்களூர் மாமாவின் முகவரி—தொலைபேசி எண்—இத்யாதி முன் பக்கத்திலிருந்தது. பின்னால் மாமா இரண்டு வரி எழுதி இருந்தார்.

''வீட்டுக்குப் போனேன். வேலைக்காரிக்குத் தகவல் கொடுக்கத் தெரியலை. வெளியூர் போயிருப்பதாக இங்கே சொன்னார்கள். இரவு வீட்டுக்கு போன் பண்ணு.''

அன்று இரவு அவன் தொலைபேசியில் மாமா சதாசிவத்தை அழைத்தான்.

MITHRAVINTHA

மாமா மூச்சு விடாது பேசினார். இரண்டே வார்த்தைகளில் பரதன் தன் முடிவைச் சொல்லி விட்டான். "அம்மாவுக்கு திவசம் ஆனபிறகுதான் கல்யாணத்தைப் பற்றி நினைக்க முடியும்—"

மாமா சதாசிவம் அவனை உடும்புப் பிடியாகவல்லவா பிடித்துக் கொண்டிருக்கிறார். வருஷம் எப்பொழுது முடியும் என்று காத்திருந்தவர் போல இப்போது கடிதம் எழுதி விட்டிருக்கிறாரோ?...மனிதன் புதன்கிழமை வந்து தொலைத்தால்—அப்படியென்றால் இன்னமும் நளினி தன் காதல் விவகாரத்தை ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறாள் என்று அர்த்தம்.

சீ! இந்தப் பழம் புளிக்கும் என்று அவனை உதாசீனப் படுத்திப் பேசும்...அவளை அவன் ஒரு போதும் கட்டிக் கொள்ளப் போவதில்லை. அவள் காதலில் ஏன் குறுக்கிட வேண்டும்?...அந்த ரங்கனையே அவள் பேஷாகக் கல்யாணம் செய்து கொள்ளட்டும். அவசரமாக எழுந்து உட்கார்ந்தான் மேசையருகே. மாமாவுக்கு விரைவில் ஒரு கடிதம் எழுதினான்.

"தங்கள் கடிதம் கிடைத்தது. நன்றி, தாங்கள் வியாபார விஷயமாகச் சென்னைக்கு வருவது குறித்து மகிழ்ச்சி. ஆனால் மங்களகரமான விஷயங்கள் பேச எனக்கு இப்போது அவகாசம் கிடையாது.

"மேற்படிப்பைத் தொடர வெளிநாட்டிற்குப் போக உத்தேசித்திருக்கிறேன். படிப்பு முடியும் வரை கல்யாணம் என்ற பேச்சே தேவையில்லை என்பது என் அபிப்ராயம். எனக்காகத் தாங்கள் தங்கள் மகளின் கல்யாணத்தை ஒத்திப் போட்டுக் காத்திருப்பதில் பயன் இல்லை. மன்னிக்கவும்—இங்ஙனம் பரதன்."

கடிதத்தைத் தபாலில் சேர்த்துவிட்டு வீட்டிற்குள் வந்து படுக்கைமீது சாய்ந்தான்.



மாமாவுக்குப் பணத்திமிர் கொஞ்சம் அதிகமாகவே உண்டு. இதற்குப் பின்னர் அவர் அவனைக் கெஞ்சிக் கொண்டிருக்க மாட்டார். கடிதம் கிடைத்தவுடன் துள்ளிக் குதிப்பார். அவனையும் அம்மாளையும் மனம் கொள்ளும் மட்டும் திட்டுவார்...பின்னர் தமது மகளுக்கு வேறு இடம் பார்க்கத் துரிதப்படுவார்.

அப்பாடி விட்டது வம்பு. நளினி எனும் நங்கையின் உபத்திரவம் இல்லாது அவன் தனி மனிதனாக சுதந்திரத்தையடைந்து—நிம்மதியாக வாழப் போகிறான்.

பரவாயில்லையே? தாயம்மாள் தயாரிக்கத் தொடங்கிய...வெந்தயக் குழம்பின் வாசனை—பசியைக் கிளப்பத் தொடங்கவே—தூங்கும் யோசனையை விட்டு அவன் சாப்பிடத் தயாரானான்.

புல்லாங்குழல் ரமணி—"சின்னஞ்சிறு கிளியே" என்று டேப்பில் இசைத்துக் கொண்டிருந்தார். கேட்கப் பரவசமாக இருந்தது.

## 5

ஒரு வார காலம் தலைவர் நர்ஸிங்ஹோமில் தலை காட்ட முடியவில்லை. அவரது காய்ச்சல் குறைந்து சளியும் இருமலும் அடங்கிய பின்தான் அவர் அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும். எனவே அதுவரை நர்ஸிங்ஹோமின் பொறுப்பை உதவி வைத்தியர்கள் ஏற்று நடத்திக்கொண்டு போனார்கள்.

தான் இல்லாமல் நர்ஸிங்ஹோம் எவ்விதக் குழப்பமுமின்றி நன்றாக நடக்கிறது என்பதை டாக்டர் பூபதியால் ஏற்கவே முடியவில்லை.



MITHRAVINTHA

அடிக்கடி தொலைபேசி மூலம் ரெஸிடெண்ட் டாக்டரிடம் நிலைமையைத் தெரிந்து கொண்டிருந்தார். கோபமும் பொறாமையுமாகப் படுக்கையில் வெறுப்புடன் புரண்டார்.

அவரில்லாது அங்கே அணுவும் அசையாது என்ற இறுமாப்பிலே இருந்தவருக்கு இந்தக் காய்ச்சல் ஒரு சோதனையாகி விட்டிருந்தது.

"மனிதர்கள் வருவார்கள்—மனிதர்கள் போவார்கள்-ஆனால் நான் எப்பொழுதும் ஓடிக்கொண்டே இருக்கிறேன்" என்றதாமே ஒரு நதி—அதுபோல அபிராமி நர்ஸிங்ஹோம் அவருக்குச் சில உண்மைகளைச் சொல்லாமல் சொல்லியது.

டாக்டர் பூபதி—இந்தச் சென்னையில் நீ ஒருத்தன் மட்டுமே திறமை மிக்க சர்ஜன் இல்லை. பலர் இருக்கிறார்கள். இருக்கப் போகிறார்கள்.

டாக்டர் பரதனே பொறுப்பேற்று எட்டாம் அறை வயிற்றுவலி நோயாளிக்கு காஸ்டிரோ ஜிஜீனாஸ்டமி என்ற பெரிய அறுவை சிகிச்சை செய்தான். நோயாளி திருப்தியான நிலையில் இருக்கிறார்.

முதல் நாள் இரவு திடீரென்று வந்து சேர்ந்த அப்பெண்டிசைட்ஸ் கேஸ் ஒன்றை பரதன்தான் அறுவைச் சிகிச்சை செய்தான். நோயாளிச் சிறுவன் இப்போது சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

அந்த ஹேர்னியா கேஸ் அதிகக் குடல் முறுக்கம் ஏற்பட்டது போன்ற அறிகுறி தோன்றவே கடந்த இரவு ஒரு எமர்ஜென்சி ஆபரேஷன் செய்து பரதன் நோயாளியைக் காப்பாற்றினான்.

அவர் இல்லாதபோது இந்தக் குட்டிப் பசங்கள் அவரது நர்ஸிங்ஹோமில் அட்டகாசமாக விளையாடுகிறார்களே- அவருக்கு எரிச்சலாகத்தானிருந்தது.



ஆனால் டாக்டர் பரதன் மகிழ்ச்சிக் கடலில் மிதந்து கொண்டிருந்தான்.

அவனிடம் இத்தனை திறமை ஒளிந்து கொண்டிருந்தது இப்போதல்லவா தெரிகிறது. தலைவரின் தலையீடு இல்லாமல் அவரது கழுகுப் பார்வையின் பாதிப்பில்லாமல் தானே பொறுப்பேற்றுப் பெரிய ஆபரேஷன்களைத் திறமையுடன் அவனால் செய்து முடிக்க முடிகிறதே... பலே! பலே! இனி அவனுக்கு வேலை போனாலும் கவலையில்லை.

ஒரு மரத்தடியில் ஓலைக் கொட்டகை போட்டுக் கொண்டு தனது வைத்தியத் தொழிலைத் தனியே துவங்க இயலும்.

அவனுக்குச் செயல் திறமை இருக்கிறது... பல ஏழை மக்களுக்கு அவனால் சேவை செய்ய இயலும்.

அதே சமயம் தன்னையும் பட்டினி பற்றாக் குறைகளின்று காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று எண்ணிப் பெருமையில் பூரித்துப் போனான்.

ஆனால் இப்போது அவசரப்படக் கூடாது. எத்தனை திறமையும் தன்னம்பிக்கையும் இருந்தும், புகழும் பொருளும் சேர்க்க வைத்தியன் கொஞ்சம் காத்துக் கொண்டிருக்க வேண்டும்.

அதனால் இன்னும் கொஞ்ச காலம் இந்த அபிராமி நர்ஸிங்ஹோமில் அட்டகாசமிக்க தலைவரின்கீழ் பொறுமையோடு வேலை செய்வோம் என்று தன்னுள்ளே எண்ணிக் கொண்டான்.

அன்று காலை காய்ச்சலிலிருந்து குணமடைந்துவிட்ட தலைவர் வேலைக்கு வந்திருந்தார். வழக்கம்போல நர்ஸிங்ஹோம் திமிலோகப்பட்டது. இண்டர்காமில் அடிக்கடி அவர் வைத்தியர்களையும் நர்சுகளையும் அழைத்த மயமாக இருந்தார்.

MITHRAVINTHA

அவரது ஆணைக்குத் தலைபணிய, அவர்கள் எல்லோரும் வார்டு முழுவதும் விழுந்தடித்துக்கொண்டு அவரது அறைக்கு ஓடிக் கொண்டிருந்தனர். எல்லோரும் தங்களது வேலைகளை ஒழுங்காகச் செய்திருந்த போதிலும் அடக்க மாட்டாத ஒரு எரிச்சலில் அவர் ஏதாவது ஒரு குற்றம் கண்டுபிடித்துக் கத்தினார்.

வார்டுகளைச் சுத்தும்போது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க நோயாளிகளைக் கடுமையாகப் பார்வையிட்ட வண்ணம் நடந்தார்.

அன்று பிற்பகல் முப்பத்து மூன்றாம் அறை தணிகை வேலுவைப் பார்க்க பரதன் சென்றபோது மனிதன் படுக்கைமீது சாய்ந்துகொண்டு உட்கார்ந்தபடி ஒரு நாளேட்டைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

பரதனைக் கண்டதும் பத்திரிக்கையை மடித்துத் தூரப் போட்டுவிட்டுச் சட்டையின் கையை மடக்கிக் கொண்டு ஊசி மருந்தை ஏற்றிக் கொள்ள ஆயத்தமானார்.

மருந்தைத் தோள்பட்டைச் சதையில் ஊசிமூலம் ஏற்றியதும் சிரஞ்சை அருகிலிருந்த பீங்கான் கிண்ணத்தில் வைத்துவிட்டு பரதன் ஊசி ஏற்றிய தோள்பட்டைப் பகுதியைக் கையால் தேய்த்து விட்டான்.

"இப்போ வலி போயிருக்குமே?—கொஞ்சம் நல்லா தூங்கிட்டு சாயங்காலம் பையன் கொண்டுவந்து கொடுக்கிற காப்பியைச் சாப்பிடணும். ஆமாம் நீங்கள் செய்யிறது நியாயமா? சர்க்கரை வியாதிக்காரர் நீங்கள். காப்பி தேநீரில் சர்க்கரை சேர்த்துக் கொள்ளக் கூடாது. உணவும் அளவோடு பத்தியமா இருக்கணும்னு நாங்கள் பாடுபடுகிறோம். உங்களைப் பார்க்க வந்த வக்கீலிடம் சொல்லி, டாக்டருக்குப் பிறந்த நாள் பரிசு கொடுக்கணும். அகர்வாலிலிருந்து அரைக் கிலோ ஜாங்கிரி வாங்கி அனுப்புங்கன்னு சொன்னீங்களாம். அவர் யாரோ பையன்கிட்டே



கொடுத்து அனுப்பினதை அலமாரிக்குள்ளே திருட்டுத்தனமா வச்சுக்கொண்டு—வேளைக்கு ரெண்டா தின்னுகிட்டிருந்தீங்களாமே. நல்ல வேளை மேட்ரன் அம்மா கவனிச்சுட்டு அப்படியே அந்த ஸ்வீட் பெட்டியைத் தூக்கிட்டுவந்து என் கிட்டக் காட்டினாங்க. அத்தனையையும் தின்னு விட்டிருந்தீங்கன்னா இப்போ அங்கே இருந்திருக்க மாட்டீங்க." அதட்டினான்.

"மனிதன் ஒரே ஒரு தடவைதான் இறக்கிறான்—அதனாலே—" தத்துவம் பேசினார் தணிகைவேல்.

"நீங்க செய்யிறது கொஞ்சமும் நியாயமில்லை." அன்புடன் கடிந்து கொண்டான் பரதன்.

"உங்க தலைவர் டாக்டர் பூபதி செய்கிறதெல்லாம் நியாயமா? இந்த நர்ஸிங்ஹோமில் தப்பித் தவறி வந்து மாட்டிகிட்டா மனிதன் பில்மேல் பில்போட்டு ஆளைப் பிழிஞ்சு எடுத்துடறாரே..."

"அப்படிக் கொடுக்கக் கட்டுபடியாகாதவங்க இங்கே வரக் கூடாது"—

"நான் இங்கே வரத்துக்கு முந்தி ஒரு பிரபல பாடகர் மாரடைப்புக்குச் சிகிச்சை செய்துக்கிட்டிருந்தாரே."

"ஆமாம். அவர் பூரண குணமடைந்து இப்போ மேடைக் கச்சேரிகள் நடத்திக்கிட்டிருக்காரே. போன வாரம்கூட அவர் கச்சேரி மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸிலே இருந்திச்சே. எனக்குத்தான் போக முடியலை. அன்னிக்கின்னு பார்த்து இங்கே டியூட்டி வந்து விட்டது."

"கடவுள் கருணையால் பாவம் மனுஷன் பிழைச்சு வாழறான். உங்களுக்குத் தெரியுமா டாக்டர். இங்கே நடந்த சிகிச்சைக்கு அவருக்குக் கிடைச்ச பில்லைப் பார்த்ததும் அந்தப் பாடகருக்கு மறுபடி ஒரு ஹார்ட் அட்டாக் வந்துவிடும் போல இருந்ததாம். மூணு வாரத்துக்குள்ளே மனுஷன் இருபதாயிரம் வரை செலவழிச்சுட்டான்."

MITHRAVINTHA

"நீங்க அப்படி ஒண்ணும் இங்கே பணத்தை வாரி இறைக்கலியே?" பரதன் வேடிக்கையாகக் கேட்டுச் சிரித்தான்.

"நான் என் சுகத்துக்குச் செலவழிக்கிறேன். கூடக் குறைய பில் வந்தால் ஒண்ணும் தலைமுழுகிப் போயிடாது."

பேச்சை மாற்றும் நிமித்தம் பரதன் சட்டென்று கேட்டான்..."ஆமாம், உங்க முகவரியிலே கொடுக்கப்பட்டிருக்கும் விருதபுரம் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமந்தானே? அங்கே உங்க உறவினர்கள் இருப்பாங்களே?"

"டாக்டர் பரதன்—இப்ப சத்தியா சென்னைதான் என் ஊர். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று நினைக்கிறவன் நான்."

"உங்களைப் பார்க்க வந்த உங்கள் குடும்ப வக்கீல் படிச்சவர். உங்க உடம்பு நிலை தெரிந்திருக்க வேண்டும். இனிப்பை அவர் உங்களுக்கு அனுப்பியிருக்கக் கூடாது."

"உங்களுக்குக் கொடுக்கவேணும்னு நான் அவர்கிட்டே ஒருபொய் சொல்லி வாங்கிட்டேன். உண்மையைச் சொல்லப்போனால் அவர் என்னைப் பார்க்க வரலை. நான்தான் வரச் சொல்லி ஆஸ்பத்திரியின் பொதுத் தொலைபேசி மூலம் அவரை அழைச்சேன்."

எதுக்கு என்னத்துக்கு என்று மேலே அந்தக் கிழவரைக் கேட்பது முறையல்ல. அது அவரது சொந்த விஷயம் என்று எண்ணிய பரதன், லேசாக முறுவலித்தான்.

"உங்கள் ரத்தத்திலே இப்போ சர்க்கரை ரொம்ப அதிகமாயிருக்கு. அதனாலே மருந்து மாற்றம் செய்திருக்கேன். உணவிலே ரொம்பக் கட்டுப்பாடு ஏற்படுத்தியிருக்கேன். சாப்பாடு கொண்டு வர்ர பையனிடம் சண்டை போடாதீங்க. சாமான்களைப் போட்டு உடைக்காதீங்க. எனக்காகக் கொஞ்சம் பொறுமையா இருக்க முடியுமா...? உங்க ரத்த அழுத்தத்துக்குக் கோபம் ஆகவே ஆகாது."



"என்னைப் பத்தி ரொம்பக் கவலைப்படுறீங்களே டாக்டர். நீங்க இப்படித்தான் ஒவ்வொரு நோயாளி கிட்டேயும் அன்பா நடத்துப்பீங்களா?"

"நோயாளிங்க உபாதையைத் தணிச்சிக்க சிகிச்சை பெற்றுக் குணமாக நம்மை நாடி வர்ராங்க. சிகிச்சை கொடுக்கிறதுக்கு முதல்லே அன்பா அவங்ககிட்ட ரெண்டு வார்த்தை பேசினா அதுவே அவங்களுக்குப் பெரிய மருந்துன்னு என் அபிப்ராயம்."

"இத்தனை புத்திசாலித்தனமும் அடக்கமும்—அன்புமுடைய இளைஞரான நீங்கள் சொந்தமாக ஏன் நர்ஸிங் ஹோம் ஆரம்பிக்கக் கூடாது. முதல் நோயாளியா நான் அங்கே வந்து படுத்துக் கிடப்பேனே?" பாதி கேலியும் பாதி உண்மை உணர்வுமாகக் கேட்டார் தணிகைவேல்.

"நர்ஸிங்ஹோம் கட்டுவது—அதை நடத்திக் கொண்டு போவது என்பது விளையாட்டுச் சங்கதியல்ல. பணம், பக்க பலம், மனித சகாயம் என்று பல விஷயங்கள் தேவைப்படும்" என்று பெருமூச்செறிந்தான் பரதன்.

"என் யோசனையைக் கேட்பீர்களா டாக்டர்? பணக்காரர்களுக்கும் வசதி உள்ளவங்களுக்கும் நம்மூரில் பல பெரிய நர்ஸிங்ஹோம்கள் இருக்கு—இந்த ஏழை எளியவங்களுக்குன்னு இன்னும் யாரும் கட்டி நடத்துறதாக எனக்குத் தெரியலை. நீங்க ஏன் அப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் செய்யக் கூடாது—"

"எனக்கும் அப்படிச் செய்யணும்னு ஒரு கொள்கை—ஆசை உண்டு. ஏணிப்படி மேலே மெள்ள ஏறுகிறது போல நான் படிப்படியா உயர்ந்து பணம் சேர்த்துத்தான்

MITHRAVINTHA

இந்தக் காரியத்தில் ஈடுபடமுடியும். சில சமயங்களில் அதிகமா பணம் சேர்த்து என் ஆவலைப் பூர்த்தி செய்துக்க வெளிநாட்டுக்குச் சொல்லாமப் போயிடலாம்னு கூட நினைச்சதுண்டு.''

''இல்லை டாக்டர்! உங்களைப்போன்று அன்பான, பொறுமை மிக்க திறமையுள்ள டாக்டர்கள் நம் நாட்டு ஏழை மக்களுக்கு ரொம்பத் தேவை. உங்கள் உழைப்பை நம் நாட்டுக்கே கொடுத்து, உங்களையும் உயர்த்திக் கோங்க'' சொல்லிக் கொண்டே...தணிகைவேல் பரதனது கையைப் பற்றி அன்போடு அழுத்தினார்.

லேசாகப் பனித்த கண்ணீரால் அவரது கண்கள் பள பளத்தன.

மனிதனை உணர்ச்சி வசப்படுத்தக் கூடாது, அவர் உடல் நிலைக்கு அது ஒத்துக் கொள்ளாது என்று பரதன் அவரது முதுகை மெல்லத் தட்டினான்.

''இதெல்லாம் பற்றிச் சாவகாசமாகப் பேசலாம். இப்போ நீங்க ஓய்வெடுத்துக்கணும். கொஞ்சம் தூங்கணும். சரியா? நான் வரேன். புறப்படுமுன் ஒரு தடவை வந்து பார்க்கிறேன் ஒகே.'' உத்திரவு பெற்றுக் கொண்டு வெளியே வந்தான்.

நர்ஸிங்ஹோமில் பலருக்குப் பிடிக்காத தணிகை வேலுவை அவனுக்கு ஏனோ மிகவும் பிடித்திருந்தது. நோய்களின் உபாதையினாலும் வாழ்க்கையிலே ஏற்பட்ட ஏதோ ஒரு பாதிப்பினாலும் மனிதன் முன்கோபியாகிக் கத்துகிறாரே ஒழிய, ஊன்றிப் பார்த்தால்—நல்ல அறிவாளியாக, பண்பாளராக, இரக்கமுடையவராகக் காணப்படுகிறார்.

**ஆமாம், இவர் ஏன் தம்மைப் பற்றி அவனிடம் அதிகம் ஏதும் பேச மாட்டேன் என்கிறார்?**



அவரது முகவரியிலுள்ள சொந்த ஊரைப் பற்றிச் சொன்னால்கூட அவரது குரலில் உற்சாகமில்லையே, ஏன்?

ஊரை விட்டு ஓடி வந்திருக்கிறார் போலும். ஏன்?

அடுத்தடுத்துக் கவனிக்க வேண்டிய வேலைகளில் மூழ்கியபோது பரதன் அவரைப் பற்றி மறந்து போனான்.

தலைவர் டாக்டர் பூபதி மறுபடியும் நர்ஸிங் ஹோமுக்கு வரத் துவங்கியதும் எல்லோருடைய வேலையும் இரட்டிப்பாகியது.

தமது ஒரு வார கால விடுப்புக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ள விரும்புகிறவர் போல, அனைவரையும் ஓட ஓட விரட்டிக் கொண்டிருந்தார். வார்டிலிருந்த அத்தனை நோயாளிகளின் வயிறுகளையும் கிழித்து விடவேண்டும் என்று ஆத்திரப்படுகிறவர் போல, அன்று தொடர்ந்து பல ஆபரேஷன்களை மேற்கொண்டார். சாப்பிடப் பொழுது இன்றி அவருக்குத் தியேட்டரில் தொடர்ந்து உதவி செய்து மிகவும் அலுப்புடன் அவன் வீடு திரும்பினான்.

ஸ்கூட்டரை காரேஜில் விட்டு மூடிவிட்டுக் கதவைச் சாவி கொண்டு திறப்பதற்குள் தாயம்மாளே திறந்து விட்டாள்.

''நேத்து ராத்திரி கண்முழிச்சு வேலை செய்தே. இன்னிக்கும் இத்தனை லேட்டா வேலை வாங்கினாக்க... என்ன தம்பி இது? நிற்க நேரமில்லே. சோறு திங்கப் பொழுதில்லேன்னு வேலை. சீக்கிரமா குளிச்சிட்டு வந்துரு. சாப்பாடு தயாரா இருக்கு. முதல்லே தாகத்துக்குக் கொஞ்சம் சூடா ஓவல் கலக்கிட்டு வரேன்'' சமைய லறைக்கு ஓடினாள்.

குளித்தபின் லுங்கியும் பனியனுமாக உடையில் வெளியே வந்தவனுக்கு ஒரே அலுப்பு. உடம்பு முழுவதும்

MITHRAVINTHA

புண்ணாக வலித்தது. ஒரு வாய் உணவை விழுங்கி விட்டுத் தொப்பென்று படுக்கையில் சாயமாட்டோமா என்கிற தவிப்பு.

தாயம்மாள் மிகவும் பாடுபட்டுத்தான் சமைத்திருந்தாள். அவனுக்குப் பிடித்த கத்திரிக்காய், கடலைப் பருப்புக் கூட்டு, மிளகு ரசம், பொறித்த அப்பளம் இத்தியாதி. போதாதற்குத் தயிருடன் நாரத்தங்காய் ஊறுகாய்.

அந்த அலுப்புக்குச் சாப்பாடு ருசியாக இருந்தது. வயிறும் மனமும் குளிர்ந்தவனாய் வாயிற்கதவை நன்றாகத் தாழ்ப்பாள் போட்டு உள்ளே பூட்டிவிட்டு ஜன்னல்களை அடைத்து விட்டுக் கதவுத் தாழ்ப்பாளையும் கவனித்து விட்டு—''தாயம்மா நான் தூங்கப் போறேன்.'' குரல் கொடுத்தான்.

''போய் முதல்லே தூங்கு தம்பி. உடம்பு என்னத்துக் காகும்'' சமையலறைத் தரையை வேகமாகப் பெருக்கிக் கழுவத் தொடங்கினாள் அவள். மின்விசிறி லேசாகச் சுழன்றது. பஞ்சமெத்தை உடம்பை இதமாகத் தழுவியது. தாயம்மாள் மெல்ல நடந்து வீட்டுக்குள் வளையவரும் காலடி ஓசை எங்கேயோ செல்லும் தெரு வாகனங்கள் எழுப்பும் சப்தம் பின்னணியாகத் தாலாட்டுப் பாடுவது போலிருக்க அவன் சிறிது பொழுதில் தூங்கிப் போனான்.

நடுஇரவு வேளை. தலைமாட்டிலிருந்த தொலைபேசி அலறியது. காஷ்மீரில் சுற்றுலா பயணம் செய்துகொண்டிருந்த கனவிலிருந்து திடுக்கிட்டு விழித்து எழுந்து உட்கார்ந்தான் பரதன். ''ஹலோ!'' தூக்கம் கலையாது அவன் குரல் கரகரத்தது. மறுமுனையில் ரெஸிடென்ட் டாக்டர்தான் பேசினார். அவர் பேச்சில் பரபரப்பும் கவலையும் தொனித்தன.

''டாக்டர் பரதன், உங்களை இந்த நடுஇரவில் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கணும்... முப்பத்து மூன்றாம்



அறை நோயாளிக்கு மாரடைப்பு வந்துவிட்டிருக்கு. வலியினால் பாவம் ரொம்பத் துடிச்சிப் போயிட்டார். அவரை இன்டென்சிங் கேர் யூனிட்டுக்கு மாற்ற முயலுகிறோம். அங்கே போக முடியாது. இங்கேயே இந்த அறையிலேயே வச்சுக் கவனியுங்கோன்னு வலியோட கூட இறைஞ்சு கத்துகிறார். அழுகிறார். உங்க பெயரைச் சொல்லிக் கூப்பிடறார்.''

''இதோ வந்துட்டேன்'' திடீரென்று கடமை உணர்வால் உந்தப்பட்டு போனை வைத்தான்.

அவசரமாக உடுத்திக் கொண்டு வெளியே வந்தான்.

''என்ன தம்பியிது...?'' அரைத் தூக்கத்துடன் எழுந்து உட்கார்ந்தாள் தாயம்மாள்.

''நான் அவசரமா ஒரு கேஸ் கவனிக்க ஆஸ்பத்திரிக்குப் போகணும். வாசல் கதவோட உள் பூட்டைப் பூட்டிக் கோங்கோ.''

''என்ன வேலையோ இது? ராத்தூக்கம், பகல் தூக்கமில்லாது. இந்தப் புள்ளையாண்டானை ஆஸ்பத்திரிக் காரங்க வேலை வாங்கியே வாயில் போட்டுக்குவாங்க போலிருக்கு. நான் சொன்னா கேட்குமா தம்பி.'' முணுமுணுத்தபடி மெல்ல எழுந்து வந்து வாயிற்கதவைப் பூட்டிக் கொண்டாள்.

முப்பத்து மூன்றாம் அறையில் ரெஸிடென்ட் டாக்டர், நர்ஸ், இரவுப் பணி செய்த உதவி வைத்தியர்... மேட்ரன் என்று ஒரு படையே நின்று கொண்டிருந்தது. பிராணவாயுக் குழலை மட்டும் மூக்கில் பொருத்தத் தணிகைவேல் சம்மதித்திருந்தார்.

''ஊசி மருந்து...உகும்...எனக்கு டாக்டர் பரதன்தான் போடணும்'' என்று பிடிவாதத்துடன் மறுத்து விட்டார்.

நெற்றியில் வியர்வை பொடிக்க, நோவு முகத்தில் திரையிட மூச்சுத் திணறியபடி தணிகைவேலு படுக்கை

MITHRAVINTHA

மீது சாய்ந்து கிடந்தார். அவனைக் கண்டதும் அவரது கண்களில் ஒளி பளிச்சிட்டது. மெல்லத் தம் கரத்தை நீட்டினார். அவனது கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டார்.

"நீங்க வந்துட்டீங்க! இனி நான் பிழைச்சுக்குவேன். இந்த அறையை விட்டுப் போக மனமில்லை. இந்த எண் எனக்கு ராசியான எண். என்னை விட்டுப் போய்விடாதீங்கோ. கூட இருங்கோ டாக்டர். உங்க முகத்தைப் பார்த்தாலும் போதும். என் நோவு பாதியளவா குறைஞ்சுடும்..." திணறினார் தணிகைவேல்.

"சரி...சரி...அலட்டிக்காதீங்க...பேசாம இருங்கோ, நான் இங்கேயே உங்க பக்கத்திலே இருப்பேன்." குழந்தைக்கு ஆறுதல் சொல்வதுபோலக் கூறிக்கொண்டு செயல்படத் தொடங்கினான்...

சிறிது பொழுதில் தணிகைவேல் மருந்தின் மயக்கத்தில் தூங்கத் தொடங்கி விட்டார். இடை இடையே புரண்டு படுத்தபோது அவரது வாய் "டாக்டர் பரதன், நீங்க போன ஜன்மத்திலே எனக்கு ரொம்ப நெருங்கின உறவு அப்பா. மகராசனா இருங்க"...என்னென்னவோ பிதற்றியபடி இருந்தது. நடுவில் ம்...என்று மூச்சுத் திணறலுடன் முனகினார்.

பரதனுக்கு அம்மாவின் கடைசி நாட்கள் நினைவுக்கு வந்து நெஞ்சை அழுத்தவே கண்கலங்கிப் போனான்.

இரண்டு மாதப் பழக்கத்திலே இணைந்து விட்ட ஒரு நட்பின் உணவில் அவனுக்குத் தணிகைவேலைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. மனம் வேதனைப் பட்டது...

கிழவர் பிழைத்துக் கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டபடி அன்று விடியும் வரை அவர் அருகே அவன் அமர்ந்திருந்தான்.

# 6

கிழவர் தணிகைவேல் முதல் இருபத்து நான்கு மணி நேரம் தீவிரக் கவனிப்பில்— அந்த ஏ. சி. அறையில் மூக்கில் பிராணவாயுக் குழாய் இணைப்புடன் மயக்க மருந்து வலியைக் குறைக்கத் தூங்கியபடி இருந்தார். அவரது இருதயத் துடிப்பு— நாடியின் போக்கு— ரத்த அழுத்தம் இவைகளைப் பளிச்சென்று ஒவ்வொரு நிமிஷமும் தெரிவித்தபடி டெலிவிஷன் போல இயங்கிய கார்டியாக் மானிட்டர், அபாயம் வந்தபோது அறிவிக்க நர்ஸ்— அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ள வைத்தியர்கள்— என்று சிகிச்சை முறைகள் தடபுடல் பட்டன.

இருதய நோய் நிபுணர் வந்து பார்த்து— தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்துப் போனார். தலைவர் அடிக்கடி வந்து பார்த்தார்.

ராஜ வைத்தியத்தை அனுபவித்த வண்ணம் தூக்கமும் விழிப்புமாக லேசான பிதற்றலுடன் தணிகைவேல் படுக்கையிலே கிடந்தார்.

நோயின் கடுமை குறைந்துவிட்டிருப்பதாக ஸ்பெஸலிஸ்ட் அபிப்பிராயம் தெரிவித்த பின்னர் மெல்ல அவர் கரத்தைப் பிடித்து நர்ஸ் தூக்கி உட்கார வைக்க முயன்றாள். தணிகைக்கு முழு நினைவு வந்து விட்டிருந்தது.

"அபாய அறிவிப்புன்னு உனக்கு நான் பேர் வச்சிருக்கேன். ஏன் தெரியுமா? கொஞ்சம் நான் முக்கினாலும் முனகினாலும் நீ இண்டர்காமில் டாக்டரைக் கூப்பிட்டு எச்சரிச்சு ஓடிவரச் செய்யரே... எனக்கு இளம் வயது

MITHRAVINTHA

நர்ஸுகளைப் பிடிக்காது. அதுக்காகத்தான் டாக்டர் பரதன் உன்னை இங்கே டியூடியில் போட்டிருக்கிறார்... அவருக்கு நான் ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறேன்.''

கேலியும் கிண்டலுமாகப் பேசிய தணிகையை அந்த நர்ஸ் முறைத்தாள்.

அவளுக்கு அப்படி ஒன்றும் வயதாகி விடவில்லை. நாற்பத்தைந்துதான் நடந்து கொண்டிருந்தது. தலை முடியில் இங்குமங்கும் வரி போடத் தொடங்கியிருந்த நரைக்குச் சாயம் பூசியிருந்தாள். அவ்வளவுதான். இருதய நோயாளியாக இருந்தும் மருந்து மயக்கத்திலே விழிப்பும் தூக்கமுமாக இருந்தும் கிறுக்குப் பிடிச்ச மனிதன் முகத்தைப் பார்த்தே வயதை ஊகித்துக் கொண்டு விட்டிருக்கிறாரே?

படுபோல்லாத கிழம். பற்களைக் கடித்துக் கொண்ட போதிலும் அவளால் நோயாளியிடம் கோபத்தைக் காட்ட முடியவில்லை.

''என் வயதைப்பத்தி இப்ப என்ன ஆராய்ச்சி? உங்க உடம்பு குணமாகணும். கொஞ்சம் என் கையைப் பிடிச்சுக்கிட்டு எழுந்து நில்லுங்க. இந்தச் சாய்வு நாற்காலியிலே கொஞ்சம் சாய்ந்தபடி படுங்க. இதுமாதிரி கொஞ்சம் கொஞ்சமா உடற்பயிற்சி பண்ணணும்னு ஸ்பெஷலிஸ்ட் உத்தரவு.'' மெல்லிய குரலில் அதட்டினாள்.

''என் கையை நீ தொடாதே. நானே எழுந்திருக்கிறேன். முடியாட்டா...டாக்டர் பரதனை வரச் சொல்லு. அவர் கையைப் பிடிச்சுக்கிட்டு எழுந்திருக்கிறேன்'' தணிகைவேல் பிடிவாதம் செய்தார்.

''இதென்ன பெரிய ரோதனையாயிடுச்சு. டாக்டர் பரதன் நினைச்சபோது ஓடி வரமுடியாது. அவருக்கு ஓ. பி. இருக்கும். ஆபரேஷன் தியேட்டரில் வேலை



யிருக்கும். அவர் நர்ஸ் இல்லே! ஒரு டாக்டர். நீங்க கூப்பிட்ட குரலுக்கு ஓடியாந்திட முடியாது. முட்டாள் தனமா பேசாதீங்க''. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு மெல்லிய குரலில் அதட்டிப் பார்த்தாள்.

உஹும்... அவரிடம் அவளது மிரட்டல் உருட்டல் பலிக்கவில்லை.

''நீதான் முட்டாள்தனமா பேசறே. டாக்டர் பரதன் நான் கூப்பிட்டால் ஓடி வருவார். அவர் என் உறவுக்காரர். கூப்பிட்டுப் பார்.'' சவால் விட்டார்.

கோபத்துடன் நர்ஸ் இண்டர்காமில் பரதனுக்குச் செய்தி அனுப்பினாள். சில நிமிடங்களில் ஆஸ்பத்திரி கேட் காற்றில் பறக்க கனவேகமாக பரதன் முப்பத்து மூன்றாம் அறைக்குள் வந்தான். ''பாத்தியா நான் சொன்னபடி ஓடி வருகிறார் டாக்டர்'' மகிழ்ச்சியும் பெருமையுமாக நர்ஸை விரைத்துப் பார்த்தார் தணிகை.

''எழுந்து சாய்வு நாற்காலியில் உட்கார வேணுமாம். என் கையைப் பிடிச்சு உட்கார வச்சுட்டுப் போங்க. அப்பத்தான் எனக்குச் சட்டுனு குணமாகும். இவங்களெல்லாம் என்னை ரொம்ப அலட்டுறாங்க. இந்த மருந்தைச் சாப்பிடு, இப்படித் திரும்பு, அங்கே பாருன்னு சித்த நேரம் சும்மா விடாமத் தொந்தரவு செய்கிறாங்க.'' குற்றப் பத்திரிக்கை படித்தார் தணிகைவேல்.

தனக்குள் எழுந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு பரதன் அவரது கையைப் பிடித்து மெள்ள அவரைச் சாய்வு நாற்காலியில் உட்கார வைத்தான்.

தணிகை அவன் காதருகே கிசுகிசுத்தார். ''இந்த நர்சைக் கொஞ்சம் வெளியில் போய் இருக்கச் சொல்லுங்கள்'' என்றார். பரதன் சைகை செய்ததும் முகமெல்லாம் கோபத்தில் சிவக்க, அந்த நர்ஸ் வெளியே விர் என்று சென்று கதவை மெல்லச் சாத்தி மூடினாள்.

MITHRAVINTHA

தனியே தாமிருவர் மட்டுமே அந்த அறைக்குள் இருப்பதை உணர்ந்த தணிகை டாக்டர் பரதனை சைகையில் அழைத்தார். இன்னமும் அவருக்கு லேசாக மூச்சுத் திணறியது.

ஏதோ சொல்ல விரும்புவதுபோல உதடுகளும் மூக்கும் உணர்ச்சி வசத்தில் துடித்தன.

''என்ன, சொல்லுங்க. நிதானமாப் பேசுங்கோ—வீணாக் கோபப்படாதீங்க. உங்களை மாரடைப்பு வந்த முதல் மூன்று வாரம் பத்திரமா பார்த்துக்கணும்—பிறகு—கொஞ்சம் கொஞ்சம் உடற்பயிற்சி கொடுத்து அறைக்குள்ளேயே எழுந்து நடக்க வைக்கணும்—ஆறுவாரம் தாண்டின பிறகு—''

''டாக்டர் ஆறு வாரத்தை யார் பார்க்கப் போறா—அதுக்குள்ளே எல்லாம் முடிஞ்சுடும். நீங்களும் என் தொந்திரவுகளிலிருந்து விடுதலை அடைவீங்க.'' விரக்தியாகச் சிரித்தார்.

''சே, சே? அப்படியெல்லாம் நீங்க மனம் தளரக் கூடாது. பிழைப்பேன். நீண்ட நாள் வாழப் போகிறேன் என்று பாஸிட்டிவ் திங்கிங் வேணும். எங்களுடன் உங்கள் துணிச்சலான உணர்வுகள் ஒத்துழைக்கணும். உயிருக்கு நீங்களும் எங்களோடு சேர்ந்து போராடணும்.''

''எனக்கு இப்ப என் வக்கீலைப் பார்க்கணும். அவரது முகவரி என் அலமாரியிலே இருக்கற டைரியில் 'வி' என்னும் எழுத்துள்ள பக்கத்தில் என். வரதராஜன் என்று இருக்கும். எனக்காக அவரைத் தொலைபேசியில் கூப்பிடுங்கள்.

''ஏற்கெனவே அவரிடம் ஒரு சங்கதி சொல்லியிருந்தேன், அதை முடிச்சுட்டாரான்னு தெரியணும்.''

''அதுக்கென்ன கூப்பிட்டு வரச் சொல்றேன். ஆனா நீங்க அவர்கிட்ட ரொம்ப நேரம் வளவளவென்று பேசக்



கூடாது. உண்மையைச் சொல்லப் போனா இருதய நோயாளியாகத் தீவிர சிகிச்சையில் இருப்பவர்களுக்கு விசிட்டர் யாருமே கிட்டவே வரக்கூடாது. போனால் போகிறதுன்னு உங்களுக்காக.''

''இவர் பார்வையாளர் இல்லை. என் குடும்ப வக்கீல்... சாகப்போகிற மனிதன் பார்க்க வேண்டிய அவசரம்?''

''நீங்க சாகப் போகிறீங்கன்னு யார் சொன்னா?'' செல்லமாக அதட்டினான் பரதன்.

''நீங்க டாக்டர். நான் நோயாளி. உங்களுக்கு என் நாடித் துடிப்பையும் இருதய ஓட்டத்தையும் பார்த்து நிலையைப் புரிஞ்சிக்க முடியும். நோயாளியான எனக்கு என் உள் உணர்வு சொல்றதினாலே நிலைமையைப் புரிஞ்சிக்க முடியும்.''

''நீங்க ஏன் இப்படி எப்பவும் வக்கிரமாத் தர்க்கம் பண்ணிக்கிட்டுப் பொழுதை கழிக்கிறீங்களோ தெரியலை. சரி ஒத்துக்கிறேன். வக்கீலை உடனடியா வரச் சொல்றேன். அதுக்குப் பிறகு ஒழுங்கா மருந்துகளைச் சாப்பிட்டுட்டுப் பத்ய ஆகாரத்திலே நர்ஸ் சொன்னதைக் கேட்டுகிட்டு இருப்பீங்கன்னு எனக்கு வாக்குக் கொடுக்கணும்.''

''ஓ. கே. கொடுக்கிறேன். ஆனால் இன்னும் ஒண்ணு; நீங்க உதவணும். எனக்குப் படிக்க பகவத் கீதையும் திருவாசகம் ஒண்ணும் கொண்டாந்து கொடுக்கணும். எனக்கேற்பட்ட பாதிப்பில் நான் கொஞ்ச காலம் கடவுளைக் கூட வெறுத்து மனதினின்று ஒதுக்கிவிட்டு நாஸ்திகனாக இருந்தேன். ஆனால் சில நாட்களாக என்னவோ எனக்குத் திரும்ப முன்போல பக்தி சிரத்தையா இருக்கணும்னு தோணிடுச்சு.

''ஒரு காலத்தில் நான் காலையிலே ஸ்நானம் செய்ததும் ஊர் சிவன் கோவிலுக்குப் போய் விருதநாதரையும்—விருதாம்பிகையையும் வணங்கிட்டு வந்துதான் காலைப்



MITHRAVINTHA

பலகாரத்தைக் கையால் தொடற பழக்கம். தேவாரத் திருவாசகம் இதுகளில் சில பதிகங்கள் மனப்பாடமா தெரியும்.'' தணிகைவேலின் கண்களில் கடந்த காலத்து நினைவுகள் அழுத்தமான உணர்ச்சிகளாகப் பளிச்சிட்டன.

''ஏற்பாடு செய்கிறேன்... கவலைப்படாதீங்க. என் தாயாரின் புத்தக அலமாரியைத் தேடினாலே நீங்க கேட்டவை கிடைக்கலாம். அம்மாவுக்குத் தெய்வ பக்தி அதிகம். காலையிலே குளிச்சு முடிச்சதும் கொஞ்சநேரம் தோத்திரப் புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருப்பது வழக்கம்.'' அன்போடு அவர் தலையைத் தடவிவிட்டு விடைபெற்றுக் கொண்டான்.

பகல் உணவு நேரத்தில் அவருக்காக ஒரு நடை வீடு வரை அவன் சென்று வந்தான். அம்மா சாரதாவின் அலமாரியில் விநாயகர் தோத்திரமாலை என்பதிலிருந்து பகவத் கீதைவரை பல புத்தகங்கள் அவள் வைத்துப் போன அதே நிலையில் கலைக்கப்படாது அப்படியே இருந்தன.

அவர் கேட்ட புத்தகங்கள் கிடைத்தன. அவைகளைப் பத்திரமாக ஒரு பிளாஸ்டிக் பையில் சுற்றி எடுத்துக் கொண்டு வந்து தணிகைவேலிடம் தந்தான்.

அடுத்து இரண்டு வாரங்கள் மிகமிக அமைதியாகக் கழிந்தன. தணிகைவேல் கோபம் தணிந்தவராக நர்ஸ் சொன்னதைக் கேட்டுக்கொண்டு நாற்காலியில் சாய்ந்தபடி நாள் முழுவதும் பகவத்கீதையையும் திருவாசகத்தையும் படித்த வண்ணமிருந்தார். கொடுத்த மருந்துகளை முரண்டு பண்ணாது சாப்பிட்டார்.

ஓய்வெடுக்க வேண்டுமென்று உத்தரவிட்ட நேரத்தில் படுக்கையில் சுருண்டு கொண்டார். காலை வேளையில் நர்ஸ் கொடுத்த ஸ்பான்ஸ் பாத்துக்குப் பிறகும்—மாலையில் பேஸின் தண்ணீரில் முகத்தைக் கழுவிக் கொண்ட



பின்னரும் அலமாரி அடித்தட்டில் வைத்திருந்த திருத்தணி வாசனை விபூதியை அள்ளி நெற்றி முழுவதும் பூசிக் கொண்டார். விருதுநாதா, விருதுநாயகி என்று தம் முன்னோர்—ஊர் தெய்வத்தின் திருநாமங்களைக் கூப்பிட்டு தியானித்தார்.

மனிதர் முற்றிலும் மாறிப் போயிருந்தது எல்லோருக்கும் அதிசயமாகத்தானிருந்தது.

இடையே அவரைப் பார்க்க தலைவர், டாக்டர் பரதன் இருவரின் அனுமதியின் பேரில் வக்கீல் வரதராஜன் இருமுறை வந்து போனதாக வார்டு பாய்வரை பேசிக் கொண்டனர். பரதன் அதைப்பற்றி அவரிடம் எதுவுமே கண்டு கொள்ளவில்லை.

வக்கீலுடன் அவர் பேச விரும்பியது அவரது சொந்த விஷயம். அதைப்பற்றி அவன் தலையிடுவது சரியல்ல என்று மவுனமாக இருந்தான்.

வாரத்து இறுதியில் நர்ஸிங்ஹோம் கணக்கர் தரும் பில்லுக்கு உண்டான தொகைக்கு உடனடியாக வக்கீலிடமிருந்து காசோலை வந்து கொண்டிருந்தது. தலைவர் டாக்டர் பூபதி திருப்தியாக இருந்தார். அவர் வரைக்கும் பொன் முட்டையிடும் வாத்துபோலப் பணத்தைக் கறாராக கொடுத்துவிடும் தணிகைவேலுக்கு கொஞ்சம் முரட்டு சுபாவம். அதை ஏன் கண்டு கொள்ளவேண்டும்? அவரும் ஏதும் கூறாமல் நாளைக்கு ஒரு முறையாவது முப்பத்து மூன்றாவது அறையின் நடவடிக்கைகளை நேரிடையாகப் பார்வையிட்டு விட்டுப் போய்க் கொண்டிருந்தார்.

அன்று டாக்டர் பரதன் பகல் பணிக்குப் பின்னர் அரைமணி நேரம் முன்னதாகவே வீட்டிற்கு வந்துவிட்டிருந்தான்.

தினம்போலில்லாது நிதானமாக—ஷவரைத் திருப்பி விட்டுக்கொண்டு பூவாகத் தெளித்த நீரில் ஆனந்தமாகக் குளித்தான்.

MITHRAVINTHA

உடம்பைத் துடைத்துக் கொண்டு தாயம்மாள் துவைத்து மடித்து வைத்திருந்த பட்டுக்கரை வேஷ்டியும் வெள்ளை ஷர்ட்டும் அணிந்து கொண்டு வாயில் வராந்தாவில் உட்கார்ந்தபோது அப்பாடி என்றதொரு நிம்மதி.

வைத்தியப் பத்திரிகைகளைப் படிக்கவே பொழுதில்லாமல் ஓடிக்கொண்டிருந்தவனுக்கு இன்று அமைதியாக ஏதாவது படிக்க நேரம் நிறையவே இருந்தது.

இரவல் புத்தகம் கொடுக்கும் நூலகமொன்றிலிருந்து அவன் ராபின் குக் எழுதிய 'ஸ்பிங்க்ஸ்' எனும் நாவலை எடுத்து வந்திருந்தான். புத்தகத்தைத் திறக்கப் பொழுதில்லாமல் திருப்பிக் கொடுக்கும் நிலை. அன்று இரவு படுக்கு முன் பாதியாவது படித்துவிட வேண்டுமென்ற ஆவலுடன் புத்தகத்தைத் திறந்தான்.

டு டென் கமான் எனும் எகிப்திய இளவயது மன்னனின் கல்லறையில் உள்ள விலையுயர்ந்த பொருள்களைக் களவாட எமினி என்பவன் எப்படி மெல்லச் சுவரை உடைத்துக்கொண்டு, சுண்ணாம்புத் தூள் எழுப்பிய தூசியில் மூச்சுத் திணற இருட்டில் விரல்களால் தடவிக்கொண்டு போனான் என்ற இடத்தை சுவாரஸ்யமாகப் படித்து முடிக்கு முன்னர் டெலிபோன் கிணுகிணுத்தது.

சமையலறையிலிருந்து சிணுங்கியபடி தாயம்மாள் வெளிப்பட்டாள்.

''ஓயாது ஒழியாது இந்தத் தொல்லை பெரிய தொல்லையாயிடுச்சி. உட்கார்ந்து ஒரு வாய் நிதானமா சாப்பிட விட மாட்டாங்க போலிருக்கு...இன்னும் ராச் சமையலும் முடியலை.'' அலுப்புடன் பேசியபடி தொலைபேசியை எடுத்தாள்.

''தம்பி! ஆசுபத்திரியிலிருந்து நர்ஸ் கூப்பிடுது.''

உரத்த குரலில் கூவிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்க உள்ளே போய் விட்டாள்.



முப்பத்து மூன்றாம் அறையை இன்னமும் அடிக்கடி கண்காணித்துக் கொண்டிருந்த நர்ஸ்தான் மறுமுனையில் பேசினாள்.

''டாக்டர், நீங்க உடனே கொஞ்சம் வர முடியுமா? மிஸ்டர் தணிகைவேலுக்கு...மறுபடியும் இரண்டாவது முறையாக மாரடைப்பு ஏற்பட்டிருக்கு...''

தன் அறைக்குள் நாற்காலி கை மீது மடித்துப் போட்டிருந்த சபாரி ஸுட்டை வேகமாக அணிந்து கொண்டான்.

''தாயம்மா உள் கதவைப் பூட்டிக்கோங்கோ'' குரல் கொடுத்து விட்டு வாயிற் கதவை இழுத்துப் பூட்டியபடி ஸ்கூட்டரை எடுக்க காரேஜிற்கு ஓட்டமும் நடையுமாக விரைந்தான்.

தணிகைவேல் முகத்திலே வியர்வை ஆறாக வழிந்தோடப் படுக்கைமீது திணறிக் கொண்டு படுத்திருந்தார். அவரது நெஞ்சைக் குடைந்த வேதனையின் அளவு கண்களில் தெரிய பரிதாபத்துக்குரியதொரு மனிதராகத் தென்பட்டார்.

தலைமாட்டிலே அவர் படித்துக் கொண்டிருந்த திருவாசகம் பிரித்த நிலையில் கிடந்தது.

நர்ஸை அப்பால் போகச் சொல்லி விட்டுக் கதவை மூடச்சொல்லிக் கையால் சைகை செய்தார். அவருக்கு மூச்சு திணறியது. நாடித்துடிப்பை உணரக் கையைப் பற்றிய பரதன் மனதில் கலவரம் தீவிரமாகியது.

நாடி மெல்லிய நூலிழையாகத் துடிப்பதை உணர்ந்தான். மனிதருக்கு 'இந்த முறை மாரடைப்பு ரொம்ப அழுத்தமாகவே வந்திருக்கு. அட கடவுளே!'...அவன் மனம் இரக்க வசப்பட்டுப் போயிற்று.

அபாய நிலையைக் கடந்தாயிற்று என்று இருதய நிபுணர்கள் ஆறுதல் சொன்ன ஆறுவாரக் கெடு

MITHRAVINTHA

இன்னமும் முடியவில்லை. அதற்குள் இரண்டாவது முறை பெரிய அளவில் மாரடைப்பு என்றால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியது அவசியம்.

''மிஸ்டர் தணிகைவேல் உங்களை இன்டென்ஸிங்கேர் யூனிட்டில் அனுமதிக்கப் போகிறேன். இந்த முறை மறுக் காதீங்க...'' என்றான் பரதன்.

தணிகைவேல் தலையை லேசாக ஆட்டினார். ''வேண் டாம். இங்கேயே என் காலம் முடியட்டும்'' திணறி விட்டுத் தலைமாட்டிலிருந்த திருவாசகப் புத்தகத்தைச் சுட்டிக் காட்டினார்.

என்ன சொல்ல இதைக் காட்டுகிறார்? பரதனுக்கு ஒரே குழப்பம்.

ஆனாலும் புத்தகத்தை எடுத்துப் பார்த்தான்.

வாழாப்பத்து என்ற பகுதியில் முத்தியபாயம் என்ற தலைப்பின்கீழ் ஆசிரியவிருத்தம் என்று இருந்தது. படித் தான்.

''பாரோடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே பற்று நான் மற்றிலேன் கண்டாய்.

''சீரோடு பொலி சிவபுரத்து அரசே திருப்பெருந் துறையுறை சிவனே.''

ஆமாம்—இதற்கும் இவர் சொல்லப் போவதற்கும் என்ன சம்பந்தம்? அவன் முகத்தில் பரவிய சந்தேகத்தை உணர்ந்து கொண்டவர் போலத் தணிகை தன் அருகில் அவனை வரப் பணித்தார்.

''என் மகள் யாமினிக்கு இனிமையான குரல் உண்டு. பி. ஏ. பட்டம் பெற்றவள். தமிழ் மொழியில் பற்று அதிகம். வீணையும் வாசிப்பாள். அவள் திருவாசகத்தைப் பாட நான் கேட்டு உருகிப்போனநாட்கள் எத்தனையோ'' திணறினார் அவர்.



''சரி, இப்போ உங்களுக்கு உங்க மக யாமினியைப் பார்க்கணும். அதுதானே சொல்ல வந்தீங்க?''

''ஆமாம். அவள் இதைப்பாட, கேட்டுக் கொண்டே நான் உயிரை விடணும் டாக்டர் பரதன்! யாமினியை நான் பார்க்கணும். உன்னை நான் மன்னிச்சுட்டேன் குழந்தேன்னு ஒரு வார்த்தை சொல்லணும். அவள் இந்த வரிகளை என் காதுகளுக்கும் மனதுக்கும் இதமாக மெல்லப் பாடணும். இது என் கடைசி ஆசை. இதை நீங்க நிறை வேத்தி வைப்பீங்கன்னுதான்'' ......பேச முடியாது— திணறிய தணிகைவேலின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென்று கொட்டியது. சட்டென்று படுக்கை யில் கிடந்த துண்டை எடுத்து அவரது கண்ணீரை மெல்லத் துடைத்துவிட்டான் பரதன்.

''மிஸ்டர் தணிகைவேல், நீங்க இங்கேயே முன்போல இருங்க. முன்போலத் தீவிர சிகிச்சைக்கு உடனடியாக ஏற் பாடுகள் செய்கிறேன். உங்கள் மகள் யாமினியின் முக வரியை மட்டும் கொடுங்க. உடனடியா அழைத்து வர ஏற்பாடு பண்ணுகிறேன்.''

கிழவர் பேச முடியாது வேதனையை விழுங்க விரும்பு கிறவர் போல வாயைக் கூட்டிக் கழுத்துத் தசைகளை அசைத்தார். அலமாரியைச் சுட்டிக் காட்டினார்.

ஜாடையைப் புரிந்துகொண்டு அவர் காட்டிய தட்டின் மேல் பகுதியில் முன்னால் தெரிந்த சிவப்பு டைரியைக் கையில் எடுத்து அவருக்குத் தரவேண்டிய சிகிச்சை முறை களுக்கு அவசரமாக ஏற்பாடு செய்து முடித்து விட்டு அறைக்குள் வந்து அந்த டைரியை அவர் முன் பிரித்தான்.

'கடைசிப் பக்கத்தில் இருக்கும் முகவரியில்தான் யாமினி இருக்கிறாள்.'' அவர் அதற்குமேல் பேச முடியாது கண்களை மூடிக் கொண்டார். ''சூப்பிரெண்ட்'' அரசினர் மகளிர் காப்பகம், சென்னை-4 என்ற முகவரியைப் படித் தவன் திடுக்கிட்டுப் போனான்.

MITHRAVINTHA

'வசதியாகத் தென்படும் தணிகைவேலின் மகள் அரசினர் மகளிர் காப்பகத்தில் இருக்கிறாள் என்றால் அவள் ஒரு—' அவனுக்குள் தாங்கமாட்டாத அதிர்ச்சி.

மகள் தவறான பாதையில் போய் விட்டாள் என்பதினால் ஏற்பட்ட மனக்கசப்பால்தான் மனிதன் இப்படி வக்கிர குணமான வகையில் மாறிவிட்டார் போலும்!

தணிகைவேல்மீது அவனுக்கு அனுதாபம் அதிகமாகியது. முன்பின் பார்த்தறியாத அந்த யாமினியின் மேல் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

தணிகைவேல் எத்தனை நல்லவர்! தனக்கு அவமானம் இழைத்துவிட்ட மகளை மன்னித்து விட்டதாக நேரில் சொல்ல விரும்புகிறார். பாவம் இதை அவன் எப்படியாவது முடித்துக் கொடுக்க வேண்டும். அவனுக்கு இதுதான் இனி முதல் வேலை—தன்னுள்ளே ஒரு சவாலை ஏற்றுக் கொண்டான்.

## 7

அன்று இரவு பரதன் வெகுநேரம் உறக்கமின்றிப் படுக்கையில் வேதனையுடன் படுத்துக் கொண்டிருந்தான்.

மேற்கொண்டு யாமினியைப் பற்றி அவன் விசாரிக்க முடியவில்லை. இரண்டாவது முறை தணிகைக்கு மாரடைப்பு வந்து விட்டதைக் கேள்விப்பட்டு டாக்டர் பூபதி விரைந்து நேரே வந்து விட்டார்.

''ஊகும் முடியாது. இங்கிருந்து இவரை உடனடியாக இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் சேர்க்க வேண்டும். அறையில் கவனிப்புப் போதாது!'' கூச்சலிட்டார்.



தணிகைவேலின் மறுப்பைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

வலியினால் நோயாளிக்கு ஏற்பட்டிருக்கும் அதிர்ச்சிக்கு உடனடியாக ஊசி மருந்து போட்டுப் பிராண வாயுவைச் செலுத்த ஏற்பாடு செய்து அந்த நிலையிலேயே உருளும் பலகை வண்டியில் படுக்கவைத்து அவரைத் தீவிரக் கவனிப்புப் பகுதிக்குக் கொண்டு சேர்த்து விட்டார்.

அங்கே அவர் வருகைக்கு ஸ்பெஷலிஸ்ட் உடனடியாக வந்து காத்திருந்தார். சிகிச்சைகள் மும்முரமாயின. கிழவருடன் எதுவும் பேச முடியாது. தலைவர் இட்ட ஆணைக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டுக் கொண்டிருந்தான் பரதன்.

அவனுக்கு மிக்க ஆதங்கமாக இருந்தது. அன்று அவனுக்கு இரவுப் பணிகூட இல்லை. அந்தச் சாக்கிலாவது தணிகையைப் பலமுறை எட்டிப் பார்த்துக் கவனித்துக் கொள்ள முடியும். இன்று வேறு ஒரு வைத்யரின் டியூடி நாள். அதில் தலையிடுவது முறையில்லை.

இரவு ஒன்பது மணி வரை நர்ஸிங்ஹோமிலேயே பொழுதைக் கழித்துவிட்டு மெள்ளத் தீவிர சிகிச்சைப் பகுதியிலிருந்து அவரை எட்டிப் பார்த்துவிட்டுக் கையசைத்து கவலைப்பட வேண்டாம் என்று ஜாடை காட்டி விட்டுக் கிளம்பினான்.

மருந்து மயக்கத்திலே அரை உறக்கத்திலே ஆழ்ந்து விட்டிருந்த தணிகைக்குப் புரிந்ததோ புரியவில்லையோ? லேசாகத் தலையை மட்டும் அசைத்தார்.

இரவு அவனுக்குச் சாப்பிடவே முடியவில்லை.

''என்ன தம்பி, ஆஸ்பத்திரியிலே ஏதாச்சும் சாப்பிட்டு வந்துட்டியா? சாப்பாட்டு நேரம் தாண்டிடுச்சுன்னு பசியில்லையா...?'' தாயம்மா அனுதாபத்துடன் விசாரித்தபோது திடுக்கிட்டுத் தட்டினின்று நிமிர்ந்தான். வெகு

MITHRAVINTHA

நேரமாக அவன் சாப்பாட்டை யோசனையுடன் அளைந்து கொண்டிருந்தது உண்மை.

"இல்லை வயிறு மந்தமாயிருக்கு" என்று சொல்லி விட்டு எழுந்து கையைக் கழுவிக்கொண்டு வீட்டைப் பத்திரப்படுத்தும் தன் அன்றாட வேலைகளை நொடியில் கவனித்து விட்டுப் படுக்கையில் விழுந்தான்.

தணிகைவேல் தமது மகளைச் செல்லமாகத்தான் வளர்த்திருக்க வேண்டும். அந்த யாமினி மகளிர் பாது காப்பு இல்லத்தில் இருக்க நேர்ந்த காரணம்?

பணத்தைத் தண்ணியாகச் செலவழிக்கும்—தணிகை வேலின் மகளுக்கு ஏன் அந்த இடத்தில் அடைக்கலம்?

அவனுக்குத் தலையைச் சுற்றியது. வேதனை பாறாங்கல்லாக மனதை இறுக்கியது. தனக்கிழைக்கப் பட்டதொரு துயரம் போல அவன் அதைப் பார்த்துத் துடித்தான். படுக்கையில் பலமுறை திரும்பிப் படுத்தான். உறக்கமே வரவில்லை. நடு இரவில் இருமுறை நர்ஸிங் ஹோமின் தீவிரக் கவனிப்புப் பகுதிக்கு போன் செய்து மேட்டர்னிடம் விசாரித்தான்.

தணிகைவேலின் நிலைமையில் அபிவிருத்தியும் தெரிய வில்லை. மோசமாகவும் போகவில்லை. ஒரே சீராக அப்படியே தானிருக்கிறது என்ற பதிலில் சிறு துளி நம்பிக்கை.

பாவம் மகளின்மேல் எத்தனை பாசம்! பிழைத்துக் கொள்ளட்டும். மகளைப் பார்த்துப் பேசட்டும். முதலில் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மறுநாள் காலை அவன் நர்ஸிங்ஹோம் ரெஸிடெண்ட் டாக்டரிடம் அனுமதி கேட்டு அரை நாள் லீவு எடுத்துக் கொண்டான்.

காலை பத்து மணி அளவில்தான் காப்பகத்தின் தலைவி அவரது அலுவலக அறைக்கு வருவார் என்று



அறிந்துகொண்டு காலைக் குளியல் பலகாரம் எல்லாவற் றையும் முடித்துக் கொண்டான். புறப்படுமுன் நர்ஸிங் ஹோமுக்கு போன் செய்து தணிகையின் உடல்நிலை பற்றிக் கேட்டுவிட்டு ஸ்கூட்டரில் புறப்பட்டான்.

"என்ன பேசுவது? எப்படி ஆரம்பிப்பது" என்று முன் கூட்டியே மனதில் நிர்மானித்துக்கொண்டு புறப்பட் டிருந்த போதிலும் காப்பகத்திற்குள் நுழைந்ததுமே அவன் மனதில் ஒரு பதட்டம்.

தலைவிக்கு நாற்பது வயதிருக்கும். அனுபவம் தந்த அறிவின் களை முகத்தில் மிளிர்ந்தது. மூக்குக் கண்ணாடி வழியே அவனைப் பரிவுடன் பார்த்தார் "உட்காருங்கள் டாக்டர்" ஒரு நாற்காலியைக் காட்டி உபசரித்தார்.

"நீங்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்திருக்கிறேன். நான் தனியாகப் பேசப்போகிறேன்." கூறிவிட்டு தலைவி யின் அலுவலக அறையைச் சுற்றிலும் பார்வையை ஓட விட்டான்.

உதவித் தலைவியும் செயலாளரும் குறிப்பறிந்து அப்பால் சென்று விடவே துணிவுடன் ஆரம்பித்தான்.

"இங்கே உங்கள் பாதுகாப்பில் யாமினி என்கிற பெண் இருக்கிறாள் அல்லவா?"

"ஆமாம் இருக்கிறாள். என்னால் அவளைப்பற்றி இப்படி எடுத்த எடுப்பிலேயே டக்கென்று எப்படிச் சொல்ல முடியும் என்று ஆச்சரியப்படுறீங்க இல்லையா— யாமினி என்ற பெயரில் ஒரே ஒரு பெண்தான் கடந்த ஐந்து வருஷங்களாக இங்கே இருக்கிறாள்," லேசாக முறுவலித் தார் தலைவி.

"அந்தப் பெண்ணை நான் பார்க்க வேண்டும். அவளது தந்தையின் சார்பில் வந்திருக்கிறேன். அவள் தந்தை நான் வேலை பார்க்கும் நர்ஸிங்ஹோமில் அனு

MITHRAVINTHA

மதிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு இரண்டாவது முறையாக மாரடைப்பு வந்து தீவிர சிகிச்சைப் பகுதியில் கவனிக்கப்படுகிறார். மகளைப் பார்த்து ஒரு வார்த்தை பேசவேண்டும் என்று ஆசை தெரிவித்து என்னை அனுப்பியிருக்கிறார். அவர் உடல்நிலை மிக மோசமாக இருப்பதால்...'' அதற்குமேல் பேசமுடியாது, பரிதாபமாக பரதன் தலைவியின் முகத்தைப் பார்த்தான்.

''டாக்டர் புரிகிறது. இருங்கள் வருகிறேன்'' கூறிவிட்டுத் தலைவி எழுந்து அலமாரியிலிருந்த ஒரு தடிமனான புத்தகத்தை எடுத்துவந்து உட்கார்ந்தபடி பக்கங்களைக் கவனமாகப் புரட்டினார்.

''யாமினியைப் பற்றிய விவரக் குறிப்புகள் எல்லாம் ரெக்கார்டில் இருக்கின்றன. இங்கே அவள் வந்தபோது வயது இருபது. பி.ஏ. படித்தவள். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தணிகைவேல் என்கிற பிரபல மிராசுதாரின் ஒரே மகள். ஊரில் நல்ல மதிப்போடு வாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்,'' தலைவி நிறுத்தினாள்.

''மேடம், நீங்கள் கூறும் விவரம் சரியானதுதான். இதோ பாருங்கள் திரு. தணிகைவேலின் டைரி. இதில் கடைசிப் பக்கத்தில் தமது கையால் மகளின் தற்போதைய முகவரியை அவரே எழுதி வைத்திருக்கிறார்.'' சட்டைப் பையிலிருந்த அந்தச் சிவப்பு டைரியைத் தலைவியிடம் பரபரப்புடன் பரதன் நீட்டினான்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தார் தலைவி. வந்தவன் கூறுவதெல்லாம் உண்மை என்று உணர்ந்த திருப்தியில் லேசாகச் சிரித்தார்.

''இருங்கோ. நான் முதலில் யாமினியை வரவழைக்கிறேன். பிறகு நீங்கள் வந்திருப்பதின் காரணத்தை நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள்.

''எங்கள் இல்லத்தில் உள்ள பெண்களை நான்கு பகுதியினராகப் பிரித்து, அவர்களுக்குள் ஒற்றுமை உணர்வை



ஏற்படுத்த, ஒவ்வொரு பகுதியினரும் ஒரு குறிப்பிட்ட வீட்டைச் சேர்ந்தவர்கள் என்று சீதா ஹவுஸ், சாவித்திரி, காயத்திரி, தமயந்தி என்று அந்தப் பகுதிகளுக்கு வீடுகள் என்ற பெயர் சூட்டியிருக்கிறோம்.

''யாமினி காயத்திரி ஹவுசைச் சேர்ந்தவள். இப்போது தையல் வகுப்பில் இருப்பாள். இங்கே வந்ததும் அவளைத் தையல் வகுப்பில் சேர்த்துத் துணிகளை வெட்டித் தைப்பது, மேஜை விரிப்பில் பூ வேலை செய்வது போன்றவைகளைக் கற்றுக் கொடுத்து, அதில் மேல் பகுதிப் பரீட்சையில் அவளை வெற்றி பெற உற்சாகப்படுத்தினோம். அவள் தேர்வில் வெற்றி பெற்று நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருப்பதால் அவளை இங்கு நாங்கள் தையல் வகுப்பில் ஆசிரியையாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சமயம் அவள் வகுப்பில் பெண்களுக்குத் தையல் பாடம் போதித்துக் கொண்டிருப்பாள். கொஞ்சம் காத்திருந்தால் வந்து விடுவாள்'' என்று கூறிவிட்டு மேஜை மணியை அடித்தார்.

உள்ளே ஓடி வந்தாள் காப்பகத்திலிருக்கும் ஒரு சிறு பெண்.

''காயத்திரி ஹவுஸ் யாமினி தையல் வகுப்பில் இருப்பாள். அம்மா அவசரமா ஆபீசுக்கு வரச்சொன்னாங்கன்னு சொல்லு'' உத்தரவிட்டார். சிறிது பொழுதில் தன் பின்னால் காலடிச் சத்தம் கேட்டதை உணர்ந்த பரதனின் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது.

தனக்கு மிக நெருங்கிய உறவினரைச் சந்திக்கப் போகும் ஒரு எதிர்பார்ப்பு உணர்வில் இனம் விளங்காத அச்சத்தில் முகத்தில் வியர்வை அரும்புவதை உணர்ந்து கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

''கூப்பிட்டீங்களா மேடம்?''

MITHRAVINTHA

தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. எத்தனை இனிய குரல்! தணிகைவேல் சொல்லியது உண்மைதான். இவள் பாடினால் மிகவும் இனிமையாகத்தானிருக்கும்.

''இப்படி வா.'' தலைவி அவளை அழைத்தாள். தன் எதிரே வந்து நின்ற அவளை அவன் அதிசயமாக நிமிர்ந்து பார்த்தான்.

கைத்தறிச் சிவப்பு நூல் சேலையும் பல வண்ணப் பூக்கள் அச்சிட்ட வெள்ளை ரவிக்கையும் அணிந்திருந்த உயரமான ஒரு பெண்.

அழகு தேவதை பதுமைக் கோலத்திலே நிற்பது போல கையும்-கழுத்தும்-காதும் வெறுமையில் பளபள என்ற தங்க ரதத்தில் பதுமை போல நிற்பதை மறுபடியும் கண்களை அமைத்துக் கொட்டி ஊன்றிப் பார்த்தான் பரதன் வியப்புடன். ''யாமினி, டாக்டர் பரதன் உன்னோடு தனியே கொஞ்சம் பேச வந்திருக்கிறார். ரொம்ப முக்கியமான சங்கதி. அந்த வேப்பமரத்தடியிலே கிடக்கிற நாற்காலியில் உட்கார்ந்து பேசுங்கள்'' என்று உத்தரவிட்டார் தலைவி.

சந்தேகமும் சினமும் கண்களில் வழிய... உதட்டைக் கடித்துக் கொண்டு பரதனை ஒரு கணம் வெறித்துப் பார்த்தாள் யாமினி...

''சரி மேடம் அப்படியே செய்கிறேன். ''கூறிவிட்டு வேப்பமரங்களும் மகிழமரங்களும் சூழ்ந்த மையப் பகுதியான இடத்தில் ஒரு ஓரம் கிடந்த நாற்காலிகளில் ஒன்றை அவனுக்குக் காட்டிவிட்டுத் தானும் இன்னொன்றில் அமர்ந்து கொண்டாள்.

எதிர்ப்பக்கத்தில் தெரிந்த நீண்ட கட்டிடத்திலிருந்து பச்சை, நீலம், சிவப்பு, ரோஜா என்ற வண்ணங்களில் உடை அணிந்த பெண்கள் கும்பல் கும்பலாகத் தங்கள் பணிகளைக் கவனிக்க நகர்ந்து கொண்டிருந்தனர்.



தலைவி குறிப்பிட்ட நான்கு ஹவுஸ்களுக்கும் நான்கு விதச் சீருடை போலும். அதனால்தான் சேலைகளின் நிறத்தில் பேதம். இப்படித் தனக்குள் எண்ணியபடி தன் எதிரே உட்கார்ந்து கொண்டு துணிச்சலுடன் அவனை ஏற இறங்கப் பார்த்த யாமினி பக்கம் திரும்பினான்.

''நீங்க வந்த காரணத்தைச் சொல்லலையே டாக்டர் பரதன்!'' கேட்டபோது அவன் லேசாகச் சிரித்தான். பளிச்சென்று ஒளியிட்ட பற்கள் வரிசையாக இருப்பதை அவள் கவனிக்கத் தவறவில்லை.

''நான் உங்களுக்கு அறிமுகமில்லாதவன். ஆனால் உங்கள் தந்தையோடு கொஞ்ச காலமாக பழக்கம் உண்டு. நான் வேலை பார்க்கும் நர்ஸிங்ஹோமில் அவர் உடம்பு சுகமில்லாமல் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு இரண்டு தடவை மாரடைப்பு ஏற்பட்டுவிட்டிருக்கு. இப்போ நிலைமை மோசமாக இருக்கு. உங்களைப் பார்க்கணும். நீங்கள் திருவாசகத்திலிருந்து ஒரு சில வரிகளைப் பாடக் கேட்கணும்னு ரொம்ப ஆசைப்படுகிறார்.''

அவள் முகத்தை ஆவலுடன் பார்த்தான் பரதன். அவள் மௌனமாக அவனை வெறித்தாள்.

''தயவு செய்து உங்க தலைவியிடம் அனுமதி கேட்டுக் கொண்டு என்னோட கூட அபிராமி நர்ஸிங்ஹோமுக்கு உடனே வரணும். ரொம்ப அவசரம். உங்கள் தந்தை மரணத்துடன் போராடிக்கிட்டிருக்கிறார்.''

''என் தந்தை தணிகைவேல் இறந்துபோய் ஐந்து வருஷங்களாகின்றன. எனக்கு இன்று காப்பகந்தான் வீடு—தலைவிதான் அப்பா அம்மா எல்லாம்.''

''நீங்கள் வெறுப்போடு பேசுகிறீங்க. ஆயிரம் நடந்திருக்கும். ஆனால் நீங்க அதையெல்லாம் பாராட்டக் கூடாது...தயவுசெய்து...''

''டாக்டர் பரதன்!...மறுபடியும் சொல்கிறேன். என் தந்தை தணிகைவேல் இறந்துபோய் ஐந்து வருஷமாச்சு...

MITHRAVINTHA

நீங்கள் சொல்லும் இந்த மனிதனுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது...அதனால் நான் உங்கள் பின் யாரோ ஒரு மனிதனைப் பார்க்க வரமுடியாது. தயவு செய்து போய் விடுங்க." அதற்கு மேலே பேச விருப்பமற்றவனாகக் குபீரென்று எழுந்து வணக்கம் செய்துவிட்டு விர் என்று அப்பால் நடந்தான்.

கோபத்தில் அவன் முகம் அவள் அணிந்திருந்த சேலையை விடச் சிவப்பாக மாறிவிட்டதை வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றான் பரதன்.

## 8

வெளியே லேசாக மழை தூறத் தொடங்கியது. மழை பெய்யப்போகிற நேரமும் குழந்தை பொறக்கப் போற நிமிஷமும் அந்த மகாதேவனுக்கே தெரியாதும்பாங்க. சரியாத்தான் சொன்னாங்க. பின்பக்கம் துவைத்துக் கொடியில் காயப் போட்டிருந்த துணிகள் மழையில் நனையுமுன் வாரி எடுத்துவரச் சென்ற தாயம்மாள் தனக்குள் பேசிக் கொண்டே ஓடினாள்.

அன்று டாக்டர் பரதனுக்கு ஓய்வுநாள். ஜன்னல் வழியே தெருவைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். மழை வேகமாகப் படபடவென்று பலக்கத் தொடங்கியதைக் கவனித்தான்.

அவனது மனம் துயரத்தில் கனத்தது.

தாயம்மாள் கூறிய பழமொழி மழைக்கும் பொருந்துமோ என்னவோ? மாரடைப்பு நோய்க்கு முற்றிலும் பொருந்தும். ஆறுவார காலம் ஓய்வாக இருந்து மேற்கொண்டு நெஞ்சுவலி வராதிருந்தால் நோயாளி குணமடைந்துவிட்டதாக முடிவு செய்யலாம். பின்னர் சர்வ



ஜாக்கிரதையுடன் தன்னைப் பாதுகாத்துக் கொண்டால் அதற்குப் பின் நோயாளி ஐந்து அல்லது பத்து, ஏன் இருபது வருஷங்கள் கூட வாழ முடியும் என்பது வைத்தியரின் கணிப்பு.

ஆனால் மாரடைப்பு நோயைப் பாம்பென்றும் தாண்ட முடியாது பழுதென்றும் மிதிக்க முடியாது. எக்கச்சக்கமானதொரு நோய். இந்த நேரத்தில் இன்னாருக்கு வலிவரும், மரணம் ஏற்படலாம் என்று நிச்சயமாகச் சொல்லவும் இயலாது.

செத்து விடுவார் என்று மூட்டை கட்டி வைத்திருந்த அந்தப் பிரபல பாடகர் எழுந்து உட்கார்ந்து குணமடைந்து, மனிதன் தொண்டை கிழியப் பல இடங்களில் உற்சாகமாகக் கச்சேரி செய்து கொண்டிருக்கிறான்.

"பூரண குணமடைந்து விட்டீங்க. மறுபடி ஒரு இரண்டு மாசத்துக்குப் பிறகு ஒரு செக்கப்புக்கு வாங்க..." என்று தலைவர் கைகுலுக்கி அனுப்பிவைத்த மிராசுதார் வெங்கடரத்னம் நர்ஸிங்ஹோம் வாயிலைக்கூடத் தாண்டவில்லை. மார்பைக் கையில் தாங்கியவராகக் கார் அருகில் மயங்கி சுருண்டு விழுந்தவர் எழுந்திருக்கவில்லை.

இப்படிப் பலவிதமாக அந்த நோயின் வக்கிரத்தைச் சந்தித்திருக்கிறான் பரதன்.

இப்போது தணிகைவேலுவுக்கு இரண்டாம் முறையாக வந்துள்ள மாரடைப்பைப் பற்றி எந்த முடிவும் அவனால் எடுக்க முடியவில்லை. ஆறுவாரத்திற்குள் அடுத்தடுத்து வந்தால் ஆபத்து என்பதை அறிவான்.

மனிதர் மயக்க நிலைக்குள் புகுமுன்...ஞாபகம் இருக்கும்போது பேசும் சக்தி இருக்கையிலேயே தம் மகனைக் காண விரும்புகிறார். மரணத்தின் வாயிலில் நிற்கும் ஒருத்தனின் கடைசி வேண்டுகோள்...அதை அவனால் நிறைவேற்றி வைக்க இயலவில்லையே?



MITHRAVINTHA

இந்த யாமினி அத்தனை ஒரு பிடிவாதமாக இருக்கிறாளே ஏன்? தவறான காரியத்தைச் செய்துவிட்டுத் தந்தை மேல் கோபம் ஏன்?

ஒருசமயம் அவனைத் தவறான பாதையில் தள்ளிவிட்டவர் தணிகைவேலாக இருக்குமோ?

சே இருக்காது...பணவசதியுடையவராக இருக்கிறார். தம் மகளைக் கல்யாணம் செய்து கொடுத்து வாழவைக்கத் தான் முயன்றிருப்பார். இதில் எங்கேயோ ஒரு சிக்கல் இருக்கிறது. அது மட்டும் தெரிந்தால்...

மழை சோவென்று கோஷத்துடன் பொழியத் தொடங்கவே வெளியே செல்லவேண்டுமென்ற நோக்கத்தைவிட்டு—மழைச் சாரலைத் தவிர்க்க முன்னறை ஜன்வல் கதவுகளை மூடினான்.

அருகே மேஜைமேல் அவனது ஆஸ்பத்திரி கேட்டருகே அந்தச் சிவப்பு டைரி கண்களில் பட்டது.

பிறர் கடிதங்களையோ—டைரியையோ பிரித்துப் படிக்கும் குணம் அவனுக்கு என்றுமே கிடையாது.

விவரமாக அவனிடம் ஏதும் பேச முடியாத நோயுற்ற நிலையில் தணிகைவேல் இருக்கிறார். அவர் அந்த டைரியில் எழுதியிருப்பதைப் படித்து ஏதாவது தெரிந்து கொள்ள முயன்றால் தவறு என்ன?

அவசரமாக அதைக் கையில் எடுத்துப் பிரித்தான். இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன் வெளிவந்த டைரி என்று அதில் அச்சடிக்கப்பட்ட ஆண்டின் எண் சொல்லியது.

ஜனவரி முதல் தேதி என்ற பக்கத்தில் அவர் எழுதியிருந்த சில வரிகளைப் படித்தான்.

''பாவிப் பெண்ணே! உன்னால் நான் எந்த நிலைக்கு வந்து விட்டிருக்கிறேன் தெரியுமா? சொந்த வீட்டையும் தஞ்சை நிலங்களையும் மாந்தோப்பையும் வீட்டில் மீதமிருந்த உனக்கு அகப்படாத உன் தாயின் விலையுயர்ந்த நகைகளையும் விற்க ஏற்பாடு செய்துட்டேன். நீடித்த காலம் இந்த ஊரில் எல்லோர் முகத்திலும் விழித்தபடி நான் எப்படி வாழ்வேன்?



''பார்த்து ஒவ்வொரு மனிதனும் கேட்காமல் பார்வையிலே என்னைத் துளைக்கிறான். சாப்பிடும் ஒவ்வொரு பிடி சோறும் விஷமாக இருக்கிறது. என்னைச் சீர்குலைக்க நீ எங்கிருந்து வந்து பிறந்தாய் சண்டாளி! யாமினி என்று உனக்கு அழகான பெயர் வைத்தேனே, என் புத்தியை...''

நடுவில் சில பக்கங்களில் ஏதும் எழுதப்படவில்லை. வெறுமையாக இருந்தன. மனிதன் உணர்ச்சி வசப்பட்டுத் துக்கத்தில் துடித்த நாட்களில் அந்தந்தப் பக்கங்களில் மனதிலிருந்ததைச் சில வார்த்தைகளில் கொட்டியிருக்கிறார் போலும்...

ஊகித்துக் கொண்டான் பரதன்.

இன்னொரு பக்கத்திலிருந்த வரிகளை மெல்லப் படித்தான்.

''அமைதியில்லாத நிலையில் ரேடியோவைத் திருப்பினேன். வீணை இசை ஒலித்தது. பட்டென்று ரேடியோவை மூடினேன்.

''நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியிலெறிவதுண்டோ என்று பாரதியார் பாட்டைப் பாடிக் கொண்டே நீ வீணை இசைக்கும் நினைவு நெஞ்சில் நெருப்பாக விழுந்தது. அழமுடியாத ஆழமான ஆக்ரோஷம் கலந்த துயரத்துடன் கூடத்து மூலையைப் பார்த்தேன். தஞ்சாவூரில் உனக்காக நான் தேடி வாங்கிய அந்த வீணை பத்திரமாக உறையில் பெட்டிக்குள் தூங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அதை மீட்டியவள் புழுதியில் விழுந்து பலரால் மிதிக்கப்பட்டு நாசமாக்கப்பட்ட மலராகி விட்டாளே என்று நினைத்த மாத்திரம் ஐயோ

MITHRAVINTHA

ஏன் என் நெஞ்சு பிளக்கவில்லை? இன்னமும் இந்த அவமானத்தைத் தாங்கிக்கொண்டு உயிருடன் இருக்கிறேனே விந்தைதான்!''

இன்னொரு பக்கத்தில் இருந்ததைக் கவனமாகப் படித்தான். ''தாயில்லாத குழந்தை என்று இரக்கப்பட்டு உனக்கு எத்தனை செல்லம் கொடுத்து வளர்த்தேன்? நினைவிருக்கிறதா உனக்கு. பாவி! பத்து வயதுவரை சோற்றை என் கையாலேயே பிசைந்து உன் வாயில் ஊட்டி வளர்த்தேன். நான் ஊட்டாவிட்டால் நீ சாப்பிட மாட்டாய். பிடிவாதம் செய்து அழுவாய். அந்தப் பிடிவாதத்தைச் சோற்றுடன் வைத்துக்கொண்டிருந்தால் விபரீதமாகி விட்டிருக்காது. கானல் நீரைக் காதல் என்று நம்பிக்கொண்டு பிடிவாதமாக உன் வாழ்க்கையையே நீ அழித்துக் கொண்டு விட்டாய்.''

இன்னொரு பக்கத்தில் இன்னும் சில வரிகள்தான் காணப்பட்டன. ''மகனே யாமினி! உன்னை என் உயிராக நினைத்து எத்தனை அன்போடு வளர்த்தேன்? மாற்றாந் தாய் வந்தால் உன் மலர்போன்ற மனம் புண்படுமோ என்று உனக்காக நான் தனிமையைத் தாங்கிக்கொண்டேன். என் மகள் சகலகலாவல்லியாக இருக்க வேணும் என்று வாய்ப்பாட்டும் வீணையும் கற்றுக்கொள்ள வாய்ப்பு அளித்ததுடன், திருச்சி பெண்கள் கல்லூரியில் ஹாஸ்டலில் தங்கி நீ படிக்கவும் அனுமதித்தேன். ஒவ்வொரு வார இறுதியின் போது வெள்ளிக்கிழமை மாலைப் பொழுது அமிழும் முன்பே நம் வீட்டு வில் வண்டியுடன் நான் பஸ் நிலையத்தில் உனக்காகக் காத்திருப்பேன். தன்னம்பிக்கையும், தன்னையே காத்துக் கொள்ளத் திறமையும் உனக்கு ஏற்படவேண்டும் என்று தான் உன்னைக் கல்லூரி ஹாஸ்டலிலிருந்து நமது கிராமத்திற்கு பஸ்ஸில் பயணப்பட்டு வர அனுமதித்தேன்.

''என் நம்பிக்கை நாசமாகியது என்பது பின்னர் தானே புரிந்தது? பஸ் பயணத்தில் அயோக்கியன் நாக



சுந்தரத்தின் நட்பு உனக்கு ஏற்படும், அவனையே கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று பிடிவாதம் பிடிப்பாய், பின்னர் தீராத அவமானத்தைத் தேடித் தருவாய் என்று அப்போதே தெரிந்திருந்தால் அந்தப் பாவியைத் தேங்காய் சீவும் கத்தியால் வெட்டிச் சாய்த்து விட்டுப் போலீசில் சரணடைந்திருப்பேன்.''

கடைசிப் பக்கத்திற்கு முன்னதில் அவசரமாக எழுதியது போன்ற சிலவரிகள் காணப்படவே ஆவலுடன் பரதன் படித்தான்.

''நீ எங்கே போய்ச் சேர்ந்து விட்டாய்? எத்தனை மட்டமான நிலையில் சருக்கி விழுந்து விட்டிருக்கிறாய் என்ற உண்மை சம்மட்டியாக என் உள்ளத்தை உடைத்து விட்டதால் வாழ்க்கையிலே எனக்குப் பிடிப்புப் போய் விட்டது. என்னை மெல்லப் பிடித்துக்கொண்ட நோய்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. உன்னைவிட என்னை உருக்கிக் கொல்லும் நோய் இனி வேறே இருக்கிறதா சொல்லு? கோவிலுக்குப் போவதை ஒழித்து விட்டேன். தேவாரமும் திருவாசகமும் உனக்குச் சொல்லிக் கொடுத்து நான் கண்ட பயன்? போதும்! உணவை வெறுத்து உறவினர்களை ஒதுக்கி—நண்பர்களை விட்டு விலகி—சாவை மட்டுமே எதிர்நோக்கிக் கொண்டு—ஒரு தனி மனிதனாக—எல்லாவற்றையும் இழந்த ஒரு பிச்சைக்காரனாக—வாழ்கிறேன். இந்த வாழ்க்கை எனக்குத் தேவைதானா?

''எனக்குத் திடீர் என்று முடிவு ஏற்பட்டால், இந்த டைரி யார் கையிலாவது அகப்பட்டால், அவர்கள் உன்னிடம் சேர்க்கட்டும் என்று நீ இப்போதிருக்கும் முகவரியைக் கடைசிப் பக்கத்தில் எழுதி வைத்திருக்கிறேன். நீ படித்துப் பார்த்து உன் அன்பான தந்தைக்கு நீ தந்திருக்கும் பரிசை எண்ணி எண்ணிச் சாகும் வரை கண்ணீர் விடு. உன் பாவம் கண்ணீரில் கரையட்டும்.''

MITHRAVINTHA

இந்தக் காரியத்தில் ஈடுபடமுடியும். சில சமயங்களில் அதிகமா பணம் சேர்த்து என் ஆவலைப் பூர்த்தி செய்துக்க வெளிநாட்டுக்குச் சொல்லாமப் போயிடலாம்னு கூட நினைச்சதுண்டு.''

''இல்லை டாக்டர்! உங்களைப்போன்று அன்பான, பொறுமை மிக்க திறமையுள்ள டாக்டர்கள் நம் நாட்டு ஏழை மக்களுக்கு ரொம்பத் தேவை. உங்கள் உழைப்பை நம் நாட்டுக்கே கொடுத்து, உங்களையும் உயர்த்திக் கோங்க'' சொல்லிக் கொண்டே...தணிகைவேல் பரதனது கையைப் பற்றி அன்போடு அழுத்தினார்.

லேசாகப் பனித்த கண்ணீரால் அவரது கண்கள் பளபளத்தன.

மனிதனை உணர்ச்சி வசப்படுத்தக் கூடாது, அவர் உடல் நிலைக்கு அது ஒத்துக் கொள்ளாது என்று பரதன் அவரது முதுகை மெல்லத் தட்டினான்.

''இதெல்லாம் பற்றிச் சாவகாசமாகப் பேசலாம். இப்போ நீங்க ஓய்வெடுத்துக்கணும். கொஞ்சம் தூங்கணும். சரியா? நான் வரேன். புறப்படுமுன் ஒரு தடவை வந்து பார்க்கிறேன் ஒகே.'' உத்திரவு பெற்றுக் கொண்டு வெளியே வந்தான்.

நர்ஸிங்ஹோமில் பலருக்குப் பிடிக்காத தணிகை வேலுவை அவனுக்கு ஏனோ மிகவும் பிடித்திருந்தது. நோய்களின் உபாதையினாலும் வாழ்க்கையிலே ஏற்பட்ட ஏதோ ஒரு பாதிப்பினாலும் மனிதன் முன்கோபியாகிக் கத்துகிறாரே ஒழிய, ஊன்றிப் பார்த்தால்—நல்ல அறிவாளியாக, பண்பாளராக, இரக்கமுடையவராகக் காணப்படுகிறார்.

**ஆமாம், இவர் ஏன் தம்மைப் பற்றி அவனிடம் அதிகம் ஏதும் பேச மாட்டேன் என்கிறார்?**



அவரது முகவரியிலுள்ள சொந்த ஊரைப் பற்றிச் சொன்னால்கூட அவரது குரலில் உற்சாகமில்லையே, ஏன்?

ஊரை விட்டு ஓடி வந்திருக்கிறார் போலும். ஏன்?

அடுத்தடுத்துக் கவனிக்க வேண்டிய வேலைகளில் மூழ்கியபோது பரதன் அவரைப் பற்றி மறந்து போனான்.

தலைவர் டாக்டர் பூபதி மறுபடியும் நர்ஸிங் ஹோமுக்கு வரத் துவங்கியதும் எல்லோருடைய வேலையும் இரட்டிப்பாகியது.

தமது ஒரு வார கால விடுப்புக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ள விரும்புகிறவர் போல, அனைவரையும் ஓட ஓட விரட்டிக் கொண்டிருந்தார். வார்டிலிருந்த அத்தனை நோயாளிகளின் வயிறுகளையும் கிழித்து விடவேண்டும் என்று ஆத்திரப்படுகிறவர் போல, அன்று தொடர்ந்து பல ஆபரேஷன்களை மேற்கொண்டார். சாப்பிடப் பொழுது இன்றி அவருக்குத் தியேட்டரில் தொடர்ந்து உதவி செய்து மிகவும் அலுப்புடன் அவன் வீடு திரும்பினான்.

ஸ்கூட்டரை காரேஜில் விட்டு மூடிவிட்டுக் கதவைச் சாவி கொண்டு திறப்பதற்குள் தாயம்மாளே திறந்து விட்டாள்.

''நேத்து ராத்திரி கண்முழிச்சு வேலை செய்தே. இன்னிக்கும் இத்தனை லேட்டா வேலை வாங்கினாக்க... என்ன தம்பி இது? நிற்க நேரமில்லே. சோறு திங்கப் பொழுதில்லேன்னு வேலை. சீக்கிரமா குளிச்சிட்டு வந்துரு. சாப்பாடு தயாரா இருக்கு. முதல்லே தாகத்துக்குக் கொஞ்சம் சூடா ஓவல் கலக்கிட்டு வரேன்'' சமையலறைக்கு ஓடினாள்.

**குளித்தபின் லுங்கியும் பனியனுமாக உடையில் வெளியே வந்தவனுக்கு ஒரே அலுப்பு. உடம்பு முழுவதும்**

MITHRAVINTHA

புண்ணாக வலித்தது. ஒரு வாய் உணவை விழுங்கி விட்டுத் தொப்பென்று படுக்கையில் சாயமாட்டோமா என்கிற தவிப்பு.

தாயம்மாள் மிகவும் பாடுபட்டுத்தான் சமைத்திருந்தாள். அவனுக்குப் பிடித்த கத்திரிக்காய், கடலைப் பருப்புக் கூட்டு, மிளகு ரசம், பொறித்த அப்பளம் இத்தியாதி. போதாதற்குத் தயிருடன் நாரத்தங்காய் ஊறுகாய்.

அந்த அலுப்புக்குச் சாப்பாடு ருசியாக இருந்தது. வயிறும் மனமும் குளிர்ந்தவனாய் வாயிற்கதவை நன்றாகத் தாழ்ப்பாள் போட்டு உள்ளே பூட்டிவிட்டு ஜன்னல்களை அடைத்து விட்டுக் கதவுத் தாழ்ப்பாளையும் கவனித்து விட்டு—''தாயம்மா நான் தூங்கப் போறேன்.'' குரல் கொடுத்தான்.

''போய் முதல்லே தூங்கு தம்பி. உடம்பு என்னத்துக் காகும்'' சமையலறைத் தரையை வேகமாகப் பெருக்கிக் கழுவத் தொடங்கினாள் அவள். மின்விசிறி லேசாகச் சுழன்றது. பஞ்சமெத்தை உடம்பை இதமாகத் தழுவியது. தாயம்மாள் மெல்ல நடந்து வீட்டுக்குள் வளையவரும் காலடி ஓசை எங்கேயோ செல்லும் தெரு வாகனங்கள் எழுப்பும் சப்தம் பின்னணியாகத் தாலாட்டுப் பாடுவது போலிருக்க அவன் சிறிது பொழுதில் தூங்கிப் போனான்.

நடுஇரவு வேளை. தலைமாட்டிலிருந்த தொலைபேசி அலறியது. காஷ்மீரில் சுற்றுலா பயணம் செய்துகொண்டிருந்த கனவிலிருந்து திடுக்கிட்டு விழித்து எழுந்து உட்கார்ந்தான் பரதன். ''ஹலோ!'' தூக்கம் கலையாது அவன் குரல் கரகரத்தது. மறுமுனையில் ரெஸிடெண்ட் டாக்டர்தான் பேசினார். அவர் பேச்சில் பரபரப்பும் கவலையும் தொனித்தன.

''டாக்டர் பரதன், உங்களை இந்த நடுஇரவில் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கணும்... முப்பத்து மூன்றாம்



அறை நோயாளிக்கு மாரடைப்பு வந்துவிட்டிருக்கு. வலியினால் பாவம் ரொம்பத் துடிச்சிப் போயிட்டார். அவரை இன்டென்சிங் கேர் யூனிட்டுக்கு மாற்ற முயலுகிறோம். அங்கே போக முடியாது. இங்கேயே இந்த அறையிலேயே வச்சுக் கவனியுங்கோன்னு வலியோட கூட இறைஞ்சு கத்துகிறார். அழுகிறார். உங்க பெயரைச் சொல்லிக் கூப்பிடறார்.''

''இதோ வந்துட்டேன்'' திடீரென்று கடமை உணர்வால் உந்தப்பட்டு போனை வைத்தான்.

அவசரமாக உடுத்திக் கொண்டு வெளியே வந்தான்.

''என்ன தம்பியிது...?'' அரைத் தூக்கத்துடன் எழுந்து உட்கார்ந்தாள் தாயம்மாள்.

''நான் அவசரமா ஒரு கேஸ் கவனிக்க ஆஸ்பத்திரிக்குப் போகணும். வாசல் கதவோட உள் பூட்டைப் பூட்டிக் கோங்கோ.''

''என்ன வேலையோ இது? ராத்தூக்கம், பகல் தூக்கமில்லாது. இந்தப் புள்ளையாண்டானை ஆஸ்பத்திரிக்காரங்க வேலை வாங்கியே வாயில் போட்டுக்குவாங்க போலிருக்கு. நான் சொன்னா கேட்குமா தம்பி.'' முணுமுணுத்தபடி மெல்ல எழுந்து வந்து வாயிற்கதவைப் பூட்டிக் கொண்டாள்.

முப்பத்து மூன்றாம் அறையில் ரெஸிடெண்ட் டாக்டர், நர்ஸ், இரவுப் பணி செய்த உதவி வைத்தியர்... மேட்ரன் என்று ஒரு படையே நின்று கொண்டிருந்தது. பிராணவாயுக் குழலை மட்டும் மூக்கில் பொருத்தத் தணிகைவேல் சம்மதித்திருந்தார்.

''ஊசி மருந்து...உகும்...எனக்கு டாக்டர் பரதன்தான் போடணும்'' என்று பிடிவாதத்துடன் மறுத்து விட்டார்.

நெற்றியில் வியர்வை பொடிக்க, நோவு முகத்தில் திரையிட மூச்சுத் திணறியபடி தணிகைவேலு படுக்கை

MITHRAVINTHA

மீது சாய்ந்து கிடந்தார். அவனைக் கண்டதும் அவரது கண்களில் ஒளி பளிச்சிட்டது. மெல்லத் தம் கரத்தை நீட்டினார். அவனது கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டார்.

"நீங்க வந்துட்டீங்க! இனி நான் பிழைச்சுக்குவேன். இந்த அறையை விட்டுப் போக மனமில்லை. இந்த எண் எனக்கு ராசியான எண். என்னை விட்டுப் போய்விடாதீங்கோ. கூட இருங்கோ டாக்டர். உங்க முகத்தைப் பார்த்தாலும் போதும். என் நோவு பாதியளவா குறைஞ்சுடும்..." திணறினார் தணிகைவேல்.

"சரி...சரி...அலட்டிக்காதீங்க...பேசாம இருங்கோ, நான் இங்கேயே உங்க பக்கத்திலே இருப்பேன்." குழந்தைக்கு ஆறுதல் சொல்வதுபோலக் கூறிக்கொண்டு செயல்படத் தொடங்கினான்...

சிறிது பொழுதில் தணிகைவேல் மருந்தின் மயக்கத்தில் தூங்கத் தொடங்கி விட்டார். இடை இடையே புரண்டு படுத்தபோது அவரது வாய் "டாக்டர் பரதன், நீங்க போன ஜன்மத்திலே எனக்கு ரொம்ப நெருங்கின உறவு அப்பா. மகராசனா இருங்க"...என்னென்னவோ பிதற்றியபடி இருந்தது. நடுவில் ம்...என்று மூச்சுத் திணறலுடன் முனகினார்.

பரதனுக்கு அம்மாவின் கடைசி நாட்கள் நினைவுக்கு வந்து நெஞ்சை அழுத்தவே கண்கலங்கிப் போனான்.

இரண்டு மாதப் பழக்கத்திலே இணைந்து விட்ட ஒரு நட்பின் உணர்வில் அவனுக்குத் தணிகைவேலைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. மனம் வேதனைப் பட்டது...

கிழவர் பிழைத்துக் கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டபடி அன்று விடியும்வரை அவர் அருகே அவன் அமர்ந்திருந்தான்.

# 6

கிழவர் தணிகைவேல் முதல் இருபத்து நான்கு மணி நேரம் தீவிரக் கவனிப்பில்— அந்த ஏ. சி. அறையில் மூக்கில் பிராணவாயுக் குழாய் இணைப்புடன் மயக்க மருந்து வலியைக் குறைக்கத் தூங்கியபடி இருந்தார். அவரது இருதயத் துடிப்பு— நாடியின் போக்கு— ரத்த அழுத்தம் இவைகளைப் பளிச்சென்று ஒவ்வொரு நிமிஷமும் தெரிவித்தபடி டெலிவிஷன் போல இயங்கிய கார்டியாக் மானிட்டர், அபாயம் வந்தபோது அறிவிக்க நர்ஸ்— அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ள வைத்தியர்கள்— என்று சிகிச்சை முறைகள் தடபுடல் பட்டன.

இருதய நோய் நிபுணர் வந்து பார்த்து— தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்துப் போனார். தலைவர் அடிக்கடி வந்து பார்த்தார்.

ராஜ வைத்தியத்தை அனுபவித்த வண்ணம் தூக்கமும் விழிப்புமாக லேசான பிதற்றலுடன் தணிகைவேல் படுக்கையிலே கிடந்தார்.

நோயின் கடுமை குறைந்துவிட்டிருப்பதாக ஸ்பெஷலிஸ்ட் அபிப்பிராயம் தெரிவித்த பின்னர் மெல்ல அவர் கரத்தைப் பிடித்து நர்ஸ் தூக்கி உட்கார வைக்க முயன்றாள். தணிகைக்கு முழு நினைவு வந்து விட்டிருந்தது.

"அபாய அறிவிப்புன்னு உனக்கு நான் பேர் வச்சிருக்கேன். ஏன் தெரியுமா? கொஞ்சம் நான் முக்கினாலும் முனகினாலும் நீ இண்டர்காமில் டாக்டரைக் கூப்பிட்டு எச்சரிச்சு ஓடிவரச் செய்யறே... எனக்கு இளம் வயது

MITHRAVINTHA

நர்ஸுகளைப் பிடிக்காது. அதுக்காகத்தான் டாக்டர் பரதன் உன்னை இங்கே டியூடியில் போட்டிருக்கிறார்... அவருக்கு நான் ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறேன்.''

கேலியும் கிண்டலுமாகப் பேசிய தணிகையை அந்த நர்ஸ் முறைத்தாள்.

அவளுக்கு அப்படி ஒன்றும் வயதாகி விடவில்லை. நாற்பத்தைந்துதான் நடந்து கொண்டிருந்தது. தலை முடியில் இங்குமங்கும் வரி போடத் தொடங்கியிருந்த நரைக்குச் சாயம் பூசியிருந்தாள். அவ்வளவுதான். இருதய நோயாளியாக இருந்தும் மருந்து மயக்கத்திலே விழிப்பும் தூக்கமுமாக இருந்தும் கிறுக்குப் பிடிச்ச மனிதன் முகத்தைப் பார்த்தே வயதை ஊகித்துக் கொண்டு விட்டிருக்கிறாரே?

படுபோல்லாத கிழம். பற்களைக் கடித்துக் கொண்ட போதிலும் அவளால் நோயாளியிடம் கோபத்தைக் காட்ட முடியவில்லை.

''என் வயதைப்பத்தி இப்ப என்ன ஆராய்ச்சி? உங்க உடம்பு குணமாகணும். கொஞ்சம் என் கையைப் பிடிச்சுக்கிட்டு எழுந்து நில்லுங்க. இந்தச் சாய்வு நாற்காலியிலே கொஞ்சம் சாய்ந்தபடி படுங்க. இதுமாதிரி கொஞ்சம் கொஞ்சமா உடற்பயிற்சி பண்ணணும்னு ஸ்பெஷலிஸ்ட் உத்தரவு.'' மெல்லிய குரலில் அதட்டினாள்.

''என் கையை நீ தொடாதே. நானே எழுந்திருக்கிறேன். முடியாட்டா...டாக்டர் பரதனை வரச் சொல்லு. அவர் கையைப் பிடிச்சுக்கிட்டு எழுந்திருக்கிறேன்'' தணிகைவேல் பிடிவாதம் செய்தார்.

''இதென்ன பெரிய ரோதனையாயிடுச்சு. டாக்டர் பரதன் நினைச்சபோது ஓடி வரமுடியாது. அவருக்கு ஓ. பி. இருக்கும். ஆபரேஷன் தியேட்டரில் வேலை



யிருக்கும். அவர் நர்ஸ் இல்லே! ஒரு டாக்டர். நீங்க கூப்பிட்ட குரலுக்கு ஓடியாந்திட முடியாது. முட்டாள் தனமா பேசாதீங்க''. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு மெல்லிய குரலில் அதட்டிப் பார்த்தாள்.

உரும்... அவரிடம் அவளது மிரட்டல் உருட்டல் பலிக்கவில்லை.

''நீதான் முட்டாள்தனமா பேசறே. டாக்டர் பரதன் நான் கூப்பிட்டால் ஓடி வருவார். அவர் என் உறவுக்காரர். கூப்பிட்டுப் பார்.'' சவால் விட்டார்.

கோபத்துடன் நர்ஸ் இண்டர்காமில் பரதனுக்குச் செய்தி அனுப்பினாள். சில நிமிடங்களில் ஆஸ்பத்திரி கேட் காற்றில் பறக்க கனவேகமாக பரதன் முப்பத்து மூன்றாம் அறைக்குள் வந்தான். ''பாத்தியா நான் சொன்னபடி ஓடி வருகிறார் டாக்டர்'' மகிழ்ச்சியும் பெருமையுமாக நர்ஸை விரைத்துப் பார்த்தார் தணிகை.

''எழுந்து சாய்வு நாற்காலியில் உட்கார வேணுமாம். என் கையைப் பிடிச்சு உட்கார வச்சுட்டுப் போங்க. அப்பத்தான் எனக்குச் சட்டுனு குணமாகும். இவங்கனெல்லாம் என்னை ரொம்ப அலட்டுறாங்க. இந்த மருந்தைச் சாப்பிடு, இப்படித் திரும்பு, அங்கே பாருன்னு சித்த நேரம் சும்மா விடாமத் தொந்தரவு செய்கிறாங்க.'' குற்றப் பத்திரிக்கை படித்தார் தணிகைவேல்.

தனக்குள் எழுந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு பரதன் அவரது கையைப் பிடித்து மெள்ள அவரைச் சாய்வு நாற்காலியில் உட்கார வைத்தான்.

தணிகை அவன் காதருகே கிசுகிசுத்தார். ''இந்த நர்சைக் கொஞ்சம் வெளியில் போய் இருக்கச் சொல்லுங்கள்'' என்றார். பரதன் சைகை செய்ததும் முகமெல்லாம் கோபத்தில் சிவக்க, அந்த நர்ஸ் வெளியே விர் என்று சென்று கதவை மெல்லச் சாத்தி மூடினாள்.

MITHRAVINTHA

தனியே தாமிருவர் மட்டுமே அந்த அறைக்குள் இருப்பதை உணர்ந்த தணிகை டாக்டர் பரதனை சைகையில் அழைத்தார். இன்னமும் அவருக்கு லேசாக மூச்சுத் திணறியது.

ஏதோ சொல்ல விரும்புவதுபோல உதடுகளும் மூக்கும் உணர்ச்சி வசத்தில் துடித்தன.

''என்ன, சொல்லுங்க. நிதானமாப் பேசுங்கோ—வீணாக் கோபப்படாதீங்க. உங்களை மாரடைப்பு வந்த முதல் மூன்று வாரம் பத்திரமா பார்த்துக்கனும்—பிறகு—கொஞ்சம் கொஞ்சம் உடற்பயிற்சி கொடுத்து அறைக்குள்ளேயே எழுந்து நடக்க வைக்கனும்—ஆறுவாரம் தாண்டின பிறகு—''

''டாக்டர் ஆறு வாரத்தை யார் பார்க்கப் போரா—அதுக்குள்ளே எல்லாம் முடிஞ்சுடும். நீங்களும் என் தொந்திரவுகளிலிருந்து விடுதலை அடைவீங்க.'' விரக்தியாகச் சிரித்தார்.

''சே, சே? அப்படியெல்லாம் நீங்க மனம் தளரக் கூடாது. பிழைப்பேன். நீண்ட நாள் வாழப் போகிறேன் என்று பாஸிட்டிவ் திங்கிங் வேனும். எங்களுடன் உங்கள் துணிச்சலான உணர்வுகள் ஒத்துழைக்கனும். உயிருக்கு நீங்களும் எங்களோடு சேர்ந்து போராடனும்.''

''எனக்கு இப்ப என் வக்கீலைப் பார்க்கனும். அவரது முகவரி என் அலமாரியிலே இருக்கற டைரியில் 'வி' என்னும் எழுத்துள்ள பக்கத்தில் என். வரதராஜன் என்று இருக்கும். எனக்காக அவரைத் தொலைபேசியில் கூப்பிடுங்கள்.

''ஏற்கெனவே அவரிடம் ஒரு சங்கதி சொல்லியிருந்தேன், அதை முடிச்சுட்டாரான்னு தெரியனும்.''

''அதுக்கென்ன கூப்பிட்டு வரச் சொல்றேன். ஆனா நீங்க அவர்கிட்ட ரொம்ப நேரம் வளவளவென்று பேசக்



கூடாது. உண்மையைச் சொல்லப் போனா இருதய நோயாளியாகத் தீவிர சிகிச்சையில் இருப்பவர்களுக்கு விசிட்டர் யாருமே கிட்டவே வரக்கூடாது. போனால் போகிறதுன்னு உங்களுக்காக.''

''இவர் பார்வையாளர் இல்லை. என் குடும்ப வக்கீல்... சாகப்போகிற மனிதன் பார்க்க வேண்டிய அவசரம்?''

''நீங்க சாகப் போகிறீங்கன்னு யார் சொன்னா?'' செல்லமாக அதட்டினான் பரதன்.

''நீங்க டாக்டர். நான் நோயாளி. உங்களுக்கு என் நாடித் துடிப்பையும் இருதய ஓட்டத்தையும் பார்த்து நிலையைப் புரிஞ்சிக்க முடியும். நோயாளியான எனக்கு என் உள் உணர்வு சொல்றதினாலே நிலைமையைப் புரிஞ்சிக்க முடியும்.''

''நீங்க ஏன் இப்படி எப்பவும் வக்கிரமாத் தர்க்கம் பண்ணிக்கிட்டுப் பொழுதை கழிக்கிறீங்களோ தெரியலை. சரி ஒத்துக்கிறேன். வக்கீலை உடனடியா வரச் சொல்றேன். அதுக்குப் பிறகு ஒழுங்கா மருந்துகளைச் சாப்பிட்டுட்டுப் பத்ய ஆகாரத்திலே நர்ஸ் சொன்னதைக் கேட்டுகிட்டு இருப்பீங்கன்னு எனக்கு வாக்குக் கொடுக்கனும்.''

''ஓ. கே. கொடுக்கிறேன். ஆனால் இன்னும் ஒன்னு; நீங்க உதவனும். எனக்குப் படிக்க பகவத் கீதையும் திருவாசகம் ஒன்னும் கொண்டாந்து கொடுக்கனும். எனக்கேற்பட்ட பாதிப்பில் நான் கொஞ்ச காலம் கடவுளைக் கூட வெறுத்து மனதினின்று ஒதுக்கிவிட்டு நாஸ்திகனாக இருந்தேன். ஆனால் சில நாட்களாக என்னவோ எனக்குத் திரும்ப முன்போல பக்தி சிரத்தையா இருக்கனும்னு தோணிடுச்சு.

''ஒரு காலத்தில் நான் காலையிலே ஸ்நானம் செய்ததும் ஊர் சிவன் கோவிலுக்குப் போய் விருதநாதரையும்—விருதாம்பிகையையும் வணங்கிட்டு வந்துதான் காலைப்



MITHRAVINTHA

பலகாரத்தைக் கையால் தொடற பழக்கம். தேவாரத் திருவாசகம் இதுகளில் சில பதிகங்கள் மனப்பாடமா தெரியும்.'' தணிகைவேலின் கண்களில் கடந்த காலத்து நினைவுகள் அழுத்தமான உணர்ச்சிகளாகப் பளிச்சிட்டன.

''ஏற்பாடு செய்யறேன்... கவலைப்படாதீங்க. என் தாயாரின் புத்தக அலமாரியைத் தேடினாலே நீங்க கேட்டவை கிடைக்கலாம். அம்மாவுக்குத் தெய்வ பக்தி அதிகம். காலையிலே குளிச்சு முடிச்சதும் கொஞ்சநேரம் தோத்திரப் புத்தகமொன்றைப் படித்துக் கொண்டிருப்பது வழக்கம்.'' அன்போடு அவர் தலையைத் தடவிவிட்டு விடைபெற்றுக் கொண்டான்.

பகல் உணவு நேரத்தில் அவருக்காக ஒரு நடை வீடு வரை அவன் சென்று வந்தான். அம்மா சாரதாவின் அலமாரியில் விநாயகர் தோத்திரமாலை என்பதிலிருந்து பகவத் கீதைவரை பல புத்தகங்கள் அவள் வைத்துப் போன அதே நிலையில் கலைக்கப்படாது அப்படியே இருந்தன.

அவர் கேட்ட புத்தகங்கள் கிடைத்தன. அவைகளைப் பத்திரமாக ஒரு பிளாஸ்டிக் பையில் சுற்றி எடுத்துக் கொண்டு வந்து தணிகைவேலிடம் தந்தான்.

அடுத்து இரண்டு வாரங்கள் மிகமிக அமைதியாகக் கழிந்தன. தணிகைவேல் கோபம் தணிந்தவராக நர்ஸ் சொன்னதைக் கேட்டுக்கொண்டு நாற்காலியில் சாய்ந்த படி நாள் முழுவதும் பகவத்கீதையையும் திருவாசகத்தையும் படித்த வண்ணமிருந்தார். கொடுத்த மருந்துகளை முரண்டு பண்ணாது சாப்பிட்டார்.

ஓய்வெடுக்க வேண்டுமென்று உத்தரவிட்ட நேரத்தில் படுக்கையில் சுருண்டு கொண்டார். காலை வேளையில் நர்ஸ் கொடுத்த ஸ்பான்ஸ் பாத்துக்குப் பிறகும்—மாலையில் பேஸின் தண்ணீரில் முகத்தைக் கழுவிக் கொண்ட



பின்னரும் அலமாரி அடித்தட்டில் வைத்திருந்த திருத்தணி வாசனை விபூதியை அள்ளி நெற்றி முழுவதும் பூசிக் கொண்டார். விருதுநாதா, விருதுநாயகி என்று தம் முன்னோ—ஊர் தெய்வத்தின் திருநாமங்களைக் கூப்பிட்டு தியானித்தார்.

மனிதர் முற்றிலும் மாறிப் போயிருந்தது எல்லோருக்கும் அதிசயமாகத்தானிருந்தது.

இடையே அவரைப் பார்க்க தலைவர், டாக்டர் பரதன் இருவரின் அனுமதியின் பேரில் வக்கீல் வரதராஜன் இருமுறை வந்து போனதாக வார்டு பாய்வரை பேசிக் கொண்டனர். பரதன் அதைப்பற்றி அவரிடம் எதுவுமே கண்டு கொள்ளவில்லை.

வக்கீலுடன் அவர் பேச விரும்பியது அவரது சொந்த விஷயம். அதைப்பற்றி அவன் தலையிடுவது சரியல்ல என்று மவுனமாக இருந்தான்.

வாரத்து இறுதியில் நர்ஸிங்ஹோம் கணக்கர் தரும் பில்லுக்கு உண்டான தொகைக்கு உடனடியாக வக்கீலிடமிருந்து காசோலை வந்து கொண்டிருந்தது. தலைவர் டாக்டர் பூபதி திருப்தியாக இருந்தார். அவர் வரைக்கும் பொன் முட்டையிடும் வாத்துபோலப் பணத்தைக் கறாராக கொடுத்துவிடும் தணிகைவேலுக்கு கொஞ்சம் முரட்டு சுபாவம். அதை ஏன் கண்டு கொள்ளவேண்டும்? அவரும் ஏதும் கூறாமல் நாளைக்கு ஒரு முறையாவது முப்பத்து மூன்றாவது அறையின் நடவடிக்கைகளை நேரிடையாகப் பார்வையிட்டு விட்டுப் போய்க் கொண்டிருந்தார்.

அன்று டாக்டர் பரதன் பகல் பணிக்குப் பின்னர் அரைமணி நேரம் முன்னதாகவே வீட்டிற்கு வந்துவிட்டிருந்தான்.

தினம்போலில்லாது நிதானமாக—ஷவரைத் திருப்பி விட்டுக்கொண்டு பூவாகத் தெளித்த நீரில் ஆனந்தமாகக் குளித்தான்.

MITHRAVINTHA

உடம்பைத் துடைத்துக் கொண்டு தாயம்மாள் துவைத்து மடித்து வைத்திருந்த பட்டுக்கரை வேஷ்டியும் வெள்ளை ஷர்ட்டும் அணிந்து கொண்டு வாயில் வராந்தாவில் உட்கார்ந்தபோது அப்பாடி என்றதொரு நிம்மதி.

வைத்தியப் பத்திரிகைகளைப் படிக்கவே பொழுதில்லாமல் ஓடிக்கொண்டிருந்தவனுக்கு இன்று அமைதியாக ஏதாவது படிக்க நேரம் நிறையவே இருந்தது.

இரவல் புத்தகம் கொடுக்கும் நூலகமொன்றிலிருந்து அவன் ராபின் குக் எழுதிய 'ஸிஃபிங்ஸ்' எனும் நாவலை எடுத்து வந்திருந்தான். புத்தகத்தைத் திறக்கப் பொழுதில்லாமல் திருப்பிக் கொடுக்கும் நிலை. அன்று இரவு படுக்கு முன் பாதியாவது படித்துவிட வேண்டுமென்ற ஆவலுடன் புத்தகத்தைத் திறந்தான்.

டு டென் கமான் எனும் எகிப்திய இளவயது மன்னனின் கல்லறையில் உள்ள விலையுயர்ந்த பொருள்களைக் களவாட எமினி என்பவன் எப்படி மெல்லச் சுவரை உடைத்துக்கொண்டு, சுண்ணாம்புத் தூள் எழுப்பிய தூசியில் மூச்சுத் திணற இருட்டில் விரல்களால் தடவிக்கொண்டு போனான் என்ற இடத்தை சுவாரஸ்யமாகப் படித்து முடிக்கு முன்னர் டெலிபோன் கிணுகிணுத்தது.

சமையலறையிலிருந்து சிணுங்கியபடி தாயம்மாள் வெளிப்பட்டாள்.

''ஓயாது ஒழியாது இந்தத் தொல்லை பெரிய தொல்லையாயிடுச்சி. உட்கார்ந்து ஒரு வாய் நிதானமா சாப்பிட விட மாட்டாங்க போலிருக்கு...இன்னும் ராச் சமையலும் முடியலை.'' அலுப்புடன் பேசியபடி தொலைபேசியை எடுத்தாள்.

''தம்பி! ஆசுபத்திரியிலிருந்து நர்ஸ் கூப்பிடுது.''

உரத்த குரலில் கூவிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்க உள்ளே போய் விட்டாள்.



முப்பத்து மூன்றாம் அறையை இன்னமும் அடிக்கடி கண்காணித்துக் கொண்டிருந்த நர்ஸ்தான் மறுமுனையில் பேசினாள்.

''டாக்டர், நீங்க உடனே கொஞ்சம் வர முடியுமா? மிஸ்டர் தணிகைவேலுக்கு...மறுபடியும் இரண்டாவது முறையாக மாரடைப்பு ஏற்பட்டிருக்கு...''

தன் அறைக்குள் நாற்காலி கை மீது மடித்துப் போட்டிருந்த சபாரி ஸூட்டை வேகமாக அணிந்து கொண்டான்.

''தாயம்மா உள் கதவைப் பூட்டிக்கோங்கோ'' குரல் கொடுத்து விட்டு வாயிற் கதவை இழுத்துப் பூட்டியபடி ஸ்கூட்டரை எடுக்க காரேஜிற்கு ஓட்டமும் நடையுமாக விரைந்தான்.

தணிகைவேல் முகத்திலே வியர்வை ஆறாக வழிந்தோடப் படுக்கைமீது திணறிக் கொண்டு படுத்திருந்தார். அவரது நெஞ்சைக் குடைந்த வேதனையின் அளவு கண்களில் தெரிய பரிதாபத்துக்குரியதொரு மனிதராகத் தென்பட்டார்.

தலைமாட்டிலே அவர் படித்துக் கொண்டிருந்த திருவாசகம் பிரித்த நிலையில் கிடந்தது.

நர்ஸை அப்பால் போகச் சொல்லி விட்டுக் கதவை மூடச்சொல்லிக் கையால் சைகை செய்தார். அவருக்கு மூச்சு திணறியது. நாடித்துடிப்பை உணரக் கையைப் பற்றிய பரதன் மனதில் கலவரம் தீவிரமாகியது.

நாடி மெல்லிய நூலிழையாகத் துடிப்பதை உணர்ந்தான். மனிதருக்கு 'இந்த முறை மாரடைப்பு ரொம்ப அழுத்தமாகவே வந்திருக்கு. அட கடவுளே!'...அவன் மனம் இரக்க வசப்பட்டுப் போயிற்று.

அபாய நிலையைக் கடந்தாயிற்று என்று இருதய நிபுணர்கள் ஆறுதல் சொன்ன ஆறுவாரக் கெடு

MITHRAVINTHA

இன்னமும் முடியவில்லை. அதற்குள் இரண்டாவது முறை பெரிய அளவில் மாரடைப்பு என்றால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியது அவசியம்.

"மிஸ்டர் தணிகைவேல் உங்களை இன்டென்ஸிங்கேர் யூனிட்டில் அனுமதிக்கப் போகிறேன். இந்த முறை மறுக்காதீங்க..." என்றான் பரதன்.

தணிகைவேல் தலையை லேசாக ஆட்டினார். "வேண்டாம். இங்கேயே என் காலம் முடியட்டும்" திணறி விட்டுத் தலைமாட்டிலிருந்த திருவாசகப் புத்தகத்தைச் சுட்டிக் காட்டினார்.

என்ன சொல்ல இதைக் காட்டுகிறார்? பரதனுக்கு ஒரே குழப்பம்.

ஆனாலும் புத்தகத்தை எடுத்துப் பார்த்தான்.

வாழாப்பத்து என்ற பகுதியில் முத்நியபாயம் என்ற தலைப்பின்கீழ் ஆசிரியவிருத்தம் என்று இருந்தது. படித்தான்.

"பாரோடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே பற்று நான் மற்றிலேன் கண்டாய்.

"சீரோடு பொலி சிவபுரத்து அரசே திருப்பெருந் துறையுறை சிவனே."

ஆமாம்—இதற்கும் இவர் சொல்லப் போவதற்கும் என்ன சம்பந்தம்? அவன் முகத்தில் பரவிய சந்தேகத்தை உணர்ந்து கொண்டவர் போலத் தணிகை தன் அருகில் அவனை வரப் பணித்தார்.

"என் மகள் யாமினிக்கு இனிமையான குரல் உண்டு. பி. ஏ. பட்டம் பெற்றவள். தமிழ் மொழியில் பற்று அதிகம். வீணையும் வாசிப்பாள். அவள் திருவாசகத்தைப் பாட நான் கேட்டு உருகிப்போனநாட்கள் எத்தனையோ" திணறினார் அவர்.



"சரி, இப்போ உங்களுக்கு உங்க மக யாமினியைப் பார்க்கணும். அதுதானே சொல்ல வந்தீங்க?"

"ஆமாம். அவள் இதைப்பாட, கேட்டுக் கொண்டே நான் உயிரை விடணும் டாக்டர் பரதன்! யாமினியை நான் பார்க்கணும். உன்னை நான் மன்னிச்சுட்டேன் குழந்தேன்னு ஒரு வார்த்தை சொல்லணும். அவள் இந்த வரிகளை என் காதுகளுக்கும் மனதுக்கும் இதமாக மெல்லப் பாடணும். இது என் கடைசி ஆசை. இதை நீங்க நிறை வேத்தி வைப்பீங்கன்னுதான்" ......பேச முடியாது—திணறிய தணிகைவேலின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென்று கொட்டியது. சட்டென்று படுக்கையில் கிடந்த துண்டை எடுத்து அவரது கண்ணீரை மெல்லத் துடைத்துவிட்டான் பரதன்.

"மிஸ்டர் தணிகைவேல், நீங்க இங்கேயே முன்போல இருங்க. முன்போலத் தீவிர சிகிச்சைக்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்கிறேன். உங்கள் மகள் யாமினியின் முகவரியை மட்டும் கொடுங்க. உடனடியா அழைத்து வர ஏற்பாடு பண்ணுகிறேன்."

கிழவர் பேச முடியாது வேதனையை விழுங்க விரும்புகிறவர் போல வாயைக் கூட்டிக் கழுத்துத் தசைகளை அசைத்தார். அலமாரியைச் சுட்டிக் காட்டினார்.

ஜாடையைப் புரிந்துகொண்டு அவர் காட்டிய தட்டின் மேல் பகுதியில் முன்னால் தெரிந்த சிவப்பு டைரியைக் கையில் எடுத்து அவருக்குத் தரவேண்டிய சிகிச்சை முறைகளுக்கு அவசரமாக ஏற்பாடு செய்து முடித்து விட்டு அறைக்குள் வந்து அந்த டைரியை அவர் முன் பிரித்தான்.

'கடைசிப் பக்கத்தில் இருக்கும் முகவரியில்தான் யாமினி இருக்கிறாள்." அவர் அதற்குமேல் பேச முடியாது கண்களை மூடிக் கொண்டார். "சூப்பிரெண்ட்" அரசினர் மகளிர் காப்பகம், சென்னை-4 என்ற முகவரியைப் படித்தவன் திடுக்கிட்டுப் போனான்.

MITHRAVINTHA

'வசதியாகத் தென்படும் தணிகைவேலின் மகள் அரசினர் மகளிர் காப்பகத்தில் இருக்கிறாள் என்றால் அவள் ஒரு—' அவனுக்குள் தாங்கமாட்டாத அதிர்ச்சி.

மகள் தவறான பாதையில் போய் விட்டாள் என்பதினால் ஏற்பட்ட மனக்கசப்பால்தான் மனிதன் இப்படி வக்கிர குணமான வகையில் மாறிவிட்டார் போலும்!

தணிகைவேல்மீது அவனுக்கு அனுதாபம் அதிகமாகியது. முன்பின் பார்த்தறியாத அந்த யாமினியின் மேல் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

தணிகைவேல் எத்தனை நல்லவர்! தனக்கு அவமானம் இழைத்துவிட்ட மகளை மன்னித்து விட்டதாக நேரில் சொல்ல விரும்புகிறார். பாவம் இதை அவன் எப்படியாவது முடித்துக் கொடுக்க வேண்டும். அவனுக்கு இதுதான் இனி முதல் வேலை—தன்னுள்ளே ஒரு சவாலை ஏற்றுக் கொண்டான்.

## 7

அன்று இரவு பரதன் வெகுநேரம் உறக்கமின்றிப் படுக்கையில் வேதனையுடன் படுத்துக் கொண்டிருந்தான்.

மேற்கொண்டு யாமினியைப் பற்றி அவன் விசாரிக்க முடியவில்லை. இரண்டாவது முறை தணிகைக்கு மாரடைப்பு வந்து விட்டதைக் கேள்விப்பட்டு டாக்டர் பூபதி விரைந்து நேரே வந்து விட்டார்.

''ஊகும் முடியாது. இங்கிருந்து இவரை உடனடியாக இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் சேர்க்க வேண்டும். அறையில் கவனிப்புப் போதாது!'' கூச்சலிட்டார்.



தணிகைவேலின் மறுப்பைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

வலியினால் நோயாளிக்கு ஏற்பட்டிருக்கும் அதிர்ச்சிக்கு உடனடியாக ஊசி மருந்து போட்டுப் பிராண வாயுவைச் செலுத்த ஏற்பாடு செய்து அந்த நிலையிலேயே உருளும் பலகை வண்டியில் படுக்கவைத்து அவரைத் தீவிரக் கவனிப்புப் பகுதிக்குக் கொண்டு சேர்த்து விட்டார்.

அங்கே அவர் வருகைக்கு ஸ்பெஷலிஸ்ட் உடனடியாக வந்து காத்திருந்தார். சிகிச்சைகள் மும்முரமாயின. கிழவருடன் எதுவும் பேச முடியாது. தலைவர் இட்ட ஆணைக்குக் கீழ்ப்படிந்து செயல்பட்டுக் கொண்டிருந்தான் பரதன்.

அவனுக்கு மிக்க ஆதங்கமாக இருந்தது. அன்று அவனுக்கு இரவுப் பணிகூட இல்லை. அந்தச் சாக்கிலாவது தணிகையைப் பலமுறை எட்டிப் பார்த்துக் கவனித்துக் கொள்ள முடியும். இன்று வேறு ஒரு வைத்யரின் டியூட்டி நாள். அதில் தலையிடுவது முறையில்லை.

இரவு ஒன்பது மணி வரை நர்ஸிங்ஹோமிலேயே பொழுதைக் கழித்துவிட்டு மெள்ளத் தீவிர சிகிச்சைப் பகுதியிலிருந்து அவரை எட்டிப் பார்த்துவிட்டுக் கையசைத்து கவலைப்பட வேண்டாம் என்று ஜாடை காட்டி விட்டுக் கிளம்பினான்.

மருந்து மயக்கத்திலே அரை உறக்கத்திலே ஆழ்ந்து விட்டிருந்த தணிகைக்குப் புரிந்ததோ புரியவில்லையோ? லேசாகத் தலையை மட்டும் அசைத்தார்.

இரவு அவனுக்குச் சாப்பிடவே முடியவில்லை.

''என்ன தம்பி, ஆஸ்பத்திரியிலே ஏதாச்சும் சாப்பிட்டு வந்துட்டியா? சாப்பாட்டு நேரம் தாண்டிடுச்சுன்னு பசியில்லையா...?'' தாயம்மா அனுதாபத்துடன் விசாரித்தபோது திடுக்கிட்டுத் தட்டினின்று நிமிர்ந்தான். வெகு

MITHRAVINTHA

நேரமாக அவன் சாப்பாட்டை யோசனையுடன் அளைந்து கொண்டிருந்தது உண்மை.

''இல்லை வயிறு மந்தமாயிருக்கு'' என்று சொல்லி விட்டு எழுந்து கையைக் கழுவிக்கொண்டு வீட்டைப் பத்திரப்படுத்தும் தன் அன்றாட வேலைகளை நொடியில் கவனித்து விட்டுப் படுக்கையில் விழுந்தான்.

தணிகைவேல் தமது மகளைச் செல்லமாகத்தான் வளர்த்திருக்க வேண்டும். அந்த யாமினி மகளிர் பாது காப்பு இல்லத்தில் இருக்க நேர்ந்த காரணம்?

பணத்தைத் தண்ணியாகச் செலவழிக்கும்—தணிகை வேலின் மகளுக்கு ஏன் அந்த இடத்தில் அடைக்கலம்?

அவனுக்குத் தலையைச் சுற்றியது. வேதனை பாறாங்கல்லாக மனதை இறுக்கியது. தனக்கிழைக்கப் பட்டதொரு துயரம் போல அவன் அதைப் பார்த்துத் துடித்தான். படுக்கையில் பலமுறை திரும்பிப் படுத்தான். உறக்கமே வரவில்லை. நடு இரவில் இருமுறை நர்ஸிங் ஹோமின் தீவிரக் கவனிப்புப் பகுதிக்கு போன் செய்து மேட்டர்னிடம் விசாரித்தான்.

தணிகைவேலின் நிலைமையில் அபிவிருத்தியும் தெரிய வில்லை. மோசமாகவும் போகவில்லை. ஒரே சீராக அப்படியே தானிருக்கிறது என்ற பதிலில் சிறு துளி நம்பிக்கை.

பாவம் மகளின்மேல் எத்தனை பாசம்! பிழைத்துக் கொள்ளட்டும். மகளைப் பார்த்துப் பேசட்டும். முதலில் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மறுநாள் காலை அவன் நர்ஸிங்ஹோம் ரெஸிடெண்ட் டாக்டரிடம் அனுமதி கேட்டு அரை நாள் லீவு எடுத்துக் கொண்டான்.

காலை பத்து மணி அளவில்தான் காப்பகத்தின் தலைவி அவரது அலுவலக அறைக்கு வருவார் என்று



அறிந்துகொண்டு காலைக் குளியல் பலகாரம் எல்லாவற் றையும் முடித்துக் கொண்டான். புறப்படுமுன் நர்ஸிங் ஹோமுக்கு போன் செய்து தணிகையின் உடல்நிலை பற்றிக் கேட்டுவிட்டு ஸ்கூட்டரில் புறப்பட்டான்.

''என்ன பேசுவது? எப்படி ஆரம்பிப்பது'' என்று முன் கூட்டியே மனதில் தீர்மானித்துக்கொண்டு புறப்பட் டிருந்த போதிலும் காப்பகத்திற்குள் நுழைந்ததுமே அவன் மனதில் ஒரு படபடப்பு.

தலைவிக்கு நாற்பது வயதிருக்கும். அனுபவம் தந்த அறிவின் களை முகத்தில் மிளிர்ந்தது. மூக்குக் கண்ணாடி வழியே அவனைப் பரிவுடன் பார்த்தார் ''உட்காருங்கள் டாக்டர்'' ஒரு நாற்காலியைக் காட்டி உபசரித்தார்.

''நீங்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்திருக்கிறேன். நான் தனியாகப் பேசப்போகிறேன்.'' கூறிவிட்டு தலைவி யின் அலுவலக அறையைச் சுற்றிலும் பார்வையை ஓட விட்டான்.

உதவித் தலைவியும் செயலாளரும் குறிப்பறிந்து அப்பாற் சென்று விடவே துணிவுடன் ஆரம்பித்தான்.

''இங்கே உங்கள் பாதுகாப்பில் யாமினி என்கிற பெண் இருக்கிறாள் அல்லவா?''

''ஆமாம் இருக்கிறாள். என்னால் அவளைப்பற்றி இப்படி எடுத்த எடுப்பிலேயே டக்கென்று எப்படிச் சொல்ல முடியும் என்று ஆச்சரியப்படுறீங்க இல்லையா— யாமினி என்ற பெயரில் ஒரே ஒரு பெண்தான் கடந்த ஐந்து வருஷங்களாக இங்கே இருக்கிறாள்,'' லேசாக முறுவலித் தார் தலைவி.

''அந்தப் பெண்ணை நான் பார்க்க வேண்டும். அவளது தந்தையின் சார்பில் வந்திருக்கிறேன். அவள் தந்தை நான் வேலை பார்க்கும் நர்ஸிங்ஹோமில் அனு

MITHRAVINTHA

மதிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு இரண்டாவது முறையாக மாரடைப்பு வந்து தீவிர சிகிச்சைப் பகுதியில் கவனிக்கப்படுகிறார். மகளைப் பார்த்து ஒரு வார்த்தை பேசவேண்டும் என்று ஆசை தெரிவித்து என்னை அனுப்பியிருக்கிறார். அவர் உடல்நிலை மிக மோசமாக இருப்பதால்..." அதற்குமேல் பேசமுடியாது, பரிதாபமாக பரதன் தலைவியின் முகத்தைப் பார்த்தான்.

"டாக்டர் புரிகிறது. இருங்கள் வருகிறேன்" கூறிவிட்டுத் தலைவி எழுந்து அலமாரியிலிருந்த ஒரு தடிமனான புத்தகத்தை எடுத்துவந்து உட்கார்ந்தபடி பக்கங்களைக் கவனமாகப் புரட்டினார்.

"யாமினியைப் பற்றிய விவரக் குறிப்புகள் எல்லாம் ரெக்கார்டில் இருக்கின்றன. இங்கே அவள் வந்தபோது வயது இருபது. பி.ஏ. படித்தவள். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தணிகைவேல் என்கிற பிரபல மிராசுதாரின் ஒரே மகள். ஊரில் நல்ல மதிப்போடு வாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்," தலைவி நிறுத்தினாள்.

"மேடம், நீங்கள் கூறும் விவரம் சரியானதுதான். இதோ பாருங்கள் திரு. தணிகைவேலின் டைரி. இதில் கடைசிப் பக்கத்தில் தமது கையால் மகளின் தற்போதைய முகவரியை அவரே எழுதி வைத்திருக்கிறார்." சட்டைப் பையிலிருந்த அந்தச் சிவப்பு டைரியைத் தலைவியிடம் பரபரப்புடன் பரதன் நீட்டினான்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தார் தலைவி. வந்தவன் கூறுவதெல்லாம் உண்மை என்று உணர்ந்த திருப்தியில் லேசாகச் சிரித்தார்.

"இருங்கோ. நான் முதலில் யாமினியை வரவழைக்கிறேன். பிறகு நீங்கள் வந்திருப்பதின் காரணத்தை நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள்.

"எங்கள் இல்லத்தில் உள்ள பெண்களை நான்கு பகுதியினராகப் பிரித்து, அவர்களுக்குள் ஒற்றுமை உணர்வை



ஏற்படுத்த, ஒவ்வொரு பகுதியினரும் ஒரு குறிப்பிட்ட வீட்டைச் சேர்ந்தவர்கள் என்று சீதா ஹவுஸ், சாவித்திரி, காயத்திரி, தமயந்தி என்று அந்தப் பகுதிகளுக்கு வீடுகள் என்ற பெயர் சூட்டியிருக்கிறோம்.

"யாமினி காயத்திரி ஹவுசைச் சேர்ந்தவள். இப்போது தையல் வகுப்பில் இருப்பாள். இங்கே வந்ததும் அவளைத் தையல் வகுப்பில் சேர்த்துத் துணிகளை வெட்டித் தைப்பது, மேஜை விரிப்பில் பூ வேலை செய்வது போன்றவைகளைக் கற்றுக் கொடுத்து, அதில் மேல் பகுதிப் பரீட்சையில் அவளை வெற்றி பெற உற்சாகப் படுத்தினோம். அவள் தேர்வில் வெற்றி பெற்று நல்ல மதிப்பெண்கள் வாங்கியிருப்பதால் அவளை இங்கு நாங்கள் தையல் வகுப்பில் ஆசிரியையாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சமயம் அவள் வகுப்பில் பெண்களுக்குத் தையல் பாடம் போதித்துக் கொண்டிருப்பாள். கொஞ்சம் காத்திருந்தால் வந்து விடுவாள்" என்று கூறிவிட்டு மேஜை மணியை அடித்தார்.

உள்ளே ஓடி வந்தாள் காப்பகத்திலிருக்கும் ஒரு சிறு பெண்.

"காயத்திரி ஹவுஸ் யாமினி தையல் வகுப்பில் இருப்பாள். அம்மா அவசரமா ஆபீசுக்கு வரச்சொன்னாங்கன்னு சொல்லு" உத்தரவிட்டார். சிறிது பொழுதில் தன் பின்னால் காலடிச் சத்தம் கேட்டதை உணர்ந்த பரதனின் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது.

தனக்கு மிக நெருங்கிய உறவினரைச் சந்திக்கப் போகும் ஒரு எதிர்பார்ப்பு உணர்வில் இனம் விளங்காத அச்சத்தில் முகத்தில் வியர்வை அரும்புவதை உணர்ந்து கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

"கூப்பிட்டீங்களா மேடம்?"

MITHRAVINTHA

தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. எத்தனை இனிய குரல்! தணிகைவேல் சொல்லியது உண்மைதான். இவள் பாடினால் மிகவும் இனிமையாகத்தானிருக்கும்.

''இப்படி வா.'' தலைவி அவளை அழைத்தாள். தன் எதிரே வந்து நின்ற அவளை அவன் அதிசயமாக நிமிர்ந்து பார்த்தான்.

கைத்தறிச் சிவப்பு நூல் சேலையும் பல வண்ணப் பூக்கள் அச்சிட்ட வெள்ளை ரவிக்கையும் அணிந்திருந்த உயரமான ஒரு பெண்.

அழகு தேவதை பதுமைக் கோலத்திலே நிற்பது போல கையும்-கழுத்தும்-காதும் வெறுமையில் பளபள என்ற தங்க ரதத்தில் பதுமை போல நிற்பதை மறுபடியும் கண்களை அமைத்துக் கொட்டி ஊன்றிப் பார்த்தான் பரதன் வியப்புடன். ''யாமினி, டாக்டர் பரதன் உன்னோடு தனியே கொஞ்சம் பேச வந்திருக்கிறார். ரொம்ப முக்கியமான சங்கதி. அந்த வேப்பமரத்தடியிலே கிடக்கிற நாற்காலியில் உட்கார்ந்து பேசுங்கள்'' என்று உத்தரவிட்டார் தலைவி.

சந்தேகமும் சினமும் கண்களில் வழிய... உதட்டைக் கடித்துக் கொண்டு பரதனை ஒரு கணம் வெறித்துப் பார்த்தாள் யாமினி...

''சரி மேடம் அப்படியே செய்கிறேன். ''கூறிவிட்டு வேப்பமரங்களும் மகிழமரங்களும் சூழ்ந்த மையப் பகுதியான இடத்தில் ஒரு ஓரம் கிடந்த நாற்காலிகளில் ஒன்றை அவனுக்குக் காட்டிவிட்டுத் தானும் இன்னொன்றில் அமர்ந்து கொண்டாள்.

எதிர்ப்பக்கத்தில் தெரிந்த நீண்ட கட்டிடத்திலிருந்து பச்சை, நீலம், சிவப்பு, ரோஜா என்ற வண்ணங்களில் உடை அணிந்த பெண்கள் கும்பல் கும்பலாகத் தங்கள் பணிகளைக் கவனிக்க நகர்ந்து கொண்டிருந்தனர்.



தலைவி குறிப்பிட்ட நான்கு ஹவுஸ்களுக்கும் நான்கு விதச் சீருடை போலும். அதனால்தான் சேலைகளின் நிறத்தில் பேதம். இப்படித் தனக்குள் எண்ணியபடி தன் எதிரே உட்கார்ந்து கொண்டு துணிச்சலுடன் அவனை ஏற இறங்கப் பார்த்த யாமினி பக்கம் திரும்பினான்.

''நீங்க வந்த காரணத்தைச் சொல்லலையே டாக்டர் பரதன்!'' கேட்டபோது அவன் லேசாகச் சிரித்தான். பளிச்சென்று ஒளியிட்ட பற்கள் வரிசையாக இருப்பதை அவள் கவனிக்கத் தவறவில்லை.

''நான் உங்களுக்கு அறிமுகமில்லாதவன். ஆனால் உங்கள் தந்தையோடு கொஞ்ச காலமாக பழக்கம் உண்டு. நான் வேலை பார்க்கும் நர்ஸிங்ஹோமில் அவர் உடம்பு சுகமில்லாமல் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு இரண்டு தடவை மாரடைப்பு ஏற்பட்டுவிட்டிருக்கு. இப்போ நிலைமை மோசமாக இருக்கு. உங்களைப் பார்க்கணும். நீங்கள் திருவாசகத்திலிருந்து ஒரு சில வரிகளைப் பாடக் கேட்கணும்னு ரொம்ப ஆசைப்படுகிறார்.''

அவன் முகத்தை ஆவலுடன் பார்த்தான் பரதன். அவள் மௌனமாக அவனை வெறித்தாள்.

''தயவு செய்து உங்க தலைவியிடம் அனுமதி கேட்டுக் கொண்டு என்னோட கூட அபிராமி நர்ஸிங்ஹோமுக்கு உடனே வரணும். ரொம்ப அவசரம். உங்கள் தந்தை மரணத்துடன் போராடிக்கிட்டிருக்கிறார்.''

''என் தந்தை தணிகைவேல் இறந்துபோய் ஐந்து வருஷங்களாகின்றன. எனக்கு இன்று காப்பகந்தான் வீடு—தலைவிதான் அப்பா அம்மா எல்லாம்.''

''நீங்கள் வெறுப்போடு பேசுகிறீங்க. ஆயிரம் நடந்திருக்கும். ஆனால் நீங்க அதையெல்லாம் பாராட்டக் கூடாது...தயவுசெய்து...''

''டாக்டர் பரதன்!...மறுபடியும் சொல்கிறேன். என் தந்தை தணிகைவேல் இறந்துபோய் ஐந்து வருஷமாச்சு...

MITHRAVINTHA

நீங்கள் சொல்லும் இந்த மனிதனுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இடையாது...அதனால் நான் உங்கள் பின் யாரோ ஒரு மனிதனைப் பார்க்க வரமுடியாது. தயவு செய்து போய் விடுங்க." அதற்கு மேலே பேச விருப்பமற்றவனாகக் குபீரென்று எழுந்து வணக்கம் செய்துவிட்டு விர் என்று அப்பால் நடந்தான்.

கோபத்தில் அவன் முகம் அவள் அணிந்திருந்த சேலையை விடச் சிவப்பாக மாறிவிட்டதை வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றான் பரதன்.

## 8

வெளியே லேசாக மழை தூறத் தொடங்கியது. மழை பெய்யப்போகிற நேரமும் குழந்தை பொறக்கப் போற நிமிஷமும் அந்த மகாதேவனுக்கே தெரியாதும் பாங்க. சரியாத்தான் சொன்னாங்க. பின்பக்கம் துவைத்துக் கொடியில் காயப் போட்டிருந்த துணிகள் மழையில் நனையுமுன் வாரி எடுத்துவரச் சென்ற தாயம்மாள் தனக்குள் பேசிக் கொண்டே ஓடினாள்.

அன்று டாக்டர் பரதனுக்கு ஓய்வுநாள். ஜன்னல் வழியே தெருவைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். மழை வேகமாகப் படபடவென்று பலக்கத் தொடங்கியதைக் கவனித்தான்.

அவனது மனம் துயரத்தில் கனத்தது.

தாயம்மாள் கூறிய பழமொழி மழைக்கும் பொருந்துமோ என்னவோ? மாரடைப்பு நோய்க்கு முற்றிலும் பொருந்தும். ஆறுவார காலம் ஓய்வாக இருந்து மேற்கொண்டு நெஞ்சுவலி வராதிருந்தால் நோயாளி குணமடைந்துவிட்டதாக முடிவு செய்யலாம். பின்னர் சர்வ



ஜாக்கிரதையுடன் தன்னைப் பாதுகாத்துக் கொண்டால் அதற்குப் பின் நோயாளி ஐந்து அல்லது பத்து, ஏன் இருபது வருஷங்கள் கூட வாழ முடியும் என்பது வைத்தியரின் கணிப்பு.

ஆனால் மாரடைப்பு நோயைப் பாம்பென்றும் தாண்ட முடியாது பழுதென்றும் மிதிக்க முடியாது. எக்கச்சக்கமானதொரு நோய். இந்த நேரத்தில் இன்னாருக்கு வலிவரும், மரணம் ஏற்படலாம் என்று நிச்சயமாகச் சொல்லவும் இயலாது.

செத்து விடுவார் என்று மூட்டை கட்டி வைத்திருந்த அந்தப் பிரபல பாடகர் எழுந்து உட்கார்ந்து குணமடைந்து, மனிதன் தொண்டை கிழியப் பல இடங்களில் உற்சாகமாகக் கச்சேரி செய்து கொண்டிருக்கிறான்.

"பூரண குணமடைந்து விட்டீங்க. மறுபடி ஒரு இரண்டு மாசத்துக்குப் பிறகு ஒரு செக்கப்புக்கு வாங்க..." என்று தலைவர் கைகுலுக்கி அனுப்பிவைத்த மிராசுதார் வெங்கடரத்னம் நர்ஸிங்ஹோம் வாயிலைக்கூடத் தாண்டவில்லை. மார்பைக் கையில் தாங்கியவராகக் கார் அருகில் மயங்கி சுருண்டு விழுந்தவர் எழுந்திருக்கவில்லை.

இப்படிப் பலவிதமாக அந்த நோயின் வக்கிரத்தைச் சந்தித்திருக்கிறான் பரதன்.

இப்போது தணிகைவேலுவுக்கு இரண்டாம் முறையாக வந்துள்ள மாரடைப்பைப் பற்றி எந்த முடிவும் அவனால் எடுக்க முடியவில்லை. ஆறுவாரத்திற்குள் அடுத்தடுத்து வந்தால் ஆபத்து என்பதை அறிவான்.

மனிதர் மயக்க நிலைக்குள் புகுமுன்...ஞாபகம் இருக்கும்போது பேசும் சக்தி இருக்கையிலேயே தம் மகனைக் காண விரும்புகிறார். மரணத்தின் வாயிலில் நிற்கும் ஒருத்தனின் கடைசி வேண்டுகோள்...அதை அவனால் நிறைவேற்றி வைக்க இயலவில்லையே?



MITHRAVINTHA

இந்த யாமினி அத்தனை ஒரு பிடிவாதமாக இருக்கிறாளே ஏன்? தவறான காரியத்தைச் செய்துவிட்டுத் தந்தை மேல் கோபம் ஏன்?

ஒருசமயம் அவளைத் தவறான பாதையில் தள்ளி விட்டவர் தணிகைவேலாக இருக்குமோ?

சே இருக்காது...பணவசதியுடையவராக இருக்கிறார். தம் மகளைக் கல்யாணம் செய்து கொடுத்து வாழவைக்கத் தான் முயன்றிருப்பார். இதில் எங்கேயோ ஒரு சிக்கல் இருக்கிறது. அது மட்டும் தெரிந்தால்...

மழை சோவென்று கோஷத்துடன் பொழியத் தொடங்கவே வெளியே செல்லவேண்டுமென்ற நோக்கத்தைவிட்டு—மழைச் சாரலைத் தவிர்க்க முன்னறை ஜன்னல் கதவுகளை மூடினான்.

அருகே மேஜைமேல் அவனது ஆஸ்பத்திரி கேட்டருகே அந்தச் சிவப்பு டைரி கண்களில் பட்டது.

பிறர் கடிதங்களையோ—டைரியையோ பிரித்துப் படிக்கும் குணம் அவனுக்கு என்றுமே கிடையாது.

விவரமாக அவனிடம் ஏதும் பேச முடியாத நோயுற்ற நிலையில் தணிகைவேல் இருக்கிறார். அவர் அந்த டைரியில் எழுதியிருப்பதைப் படித்து ஏதாவது தெரிந்து கொள்ள முயன்றால் தவறு என்ன?

அவசரமாக அதைக் கையில் எடுத்துப் பிரித்தான். இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன் வெளிவந்த டைரி என்று அதில் அச்சடிக்கப்பட்ட ஆண்டின் எண் சொல்லியது.

ஜனவரி முதல் தேதி என்ற பக்கத்தில் அவர் எழுதியிருந்த சில வரிகளைப் படித்தான்.

''பாவிப் பெண்ணே! உன்னால் நான் எந்த நிலைக்கு வந்து விட்டிருக்கிறேன் தெரியுமா? சொந்த வீட்டையும் தஞ்சை நிலங்களையும் மாந்தோப்பையும் வீட்டில் மீத



மிருந்த உனக்கு அகப்படாத உன் தாயின் விலையுயர்ந்த நகைகளையும் விற்க ஏற்பாடு செய்துட்டேன். நீடித்த காலம் இந்த ஊரில் எல்லோர் முகத்திலும் விழித்தபடி நான் எப்படி வாழ்வேன்?

''பார்த்து ஒவ்வொரு மனிதனும் கேட்காமல் பார்வையிலே என்னைத் துளைக்கிறான். சாப்பிடும் ஒவ்வொரு பிடி சோறும் விஷமாக இருக்கிறது. என்னைச் சீர்குலைக்க நீ எங்கிருந்து வந்து பிறந்தாய் சண்டாளி! யாமினி என்று உனக்கு அழகான பெயர் வைத்தேனே, என் புத்தியை...''

நடுவில் சில பக்கங்களில் ஏதும் எழுதப்படவில்லை. வெறுமையாக இருந்தன. மனிதன் உணர்ச்சி வசப்பட்டுத் துக்கத்தில் துடித்த நாட்களில் அந்தந்தப் பக்கங்களில் மனதிலிருந்ததைச் சில வார்த்தைகளில் கொட்டியிருக்கிறார் போலும்...

ஊகித்துக் கொண்டான் பரதன்.

இன்னொரு பக்கத்திலிருந்த வரிகளை மெல்லப் படித்தான்.

''அமைதியில்லாத நிலையில் ரேடியோவைத் திருப்பினேன். வீணை இசை ஒலித்தது. பட்டென்று ரேடியோவை மூடினேன்.

''நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியிலெறிவதுண்டோ என்று பாரதியார் பாட்டைப் பாடிக் கொண்டே நீ வீணை இசைக்கும் நினைவு நெஞ்சில் நெருப்பாக விழுந்தது. அழமுடியாத ஆழமான ஆக்ரோஷம் கலந்த துயரத்துடன் கூடத்து மூலையைப் பார்த்தேன். தஞ்சாவூரில் உனக்காக நான் தேடி வாங்கிய அந்த வீணை பத்திரமாக உறையில் பெட்டிக்குள் தூங்கிக் கொண்டிருந்தது. ஆனால் அதை மீட்டியவள் புழுதியில் விழுந்து பலரால் மிதிக்கப்பட்டு நாசமாக்கப்பட்ட மலராகி விட்டாளே என்று நினைத்த மாத்திரம் ஐயோ

MITHRAVINTHA

ஏன் என் நெஞ்சு பிளக்கவில்லை? இன்னமும் இந்த அவமானத்தைத் தாங்கிக்கொண்டு உயிருடன் இருக்கிறேனே விந்தைதான்!''

இன்னொரு பக்கத்தில் இருந்ததைக் கவனமாகப் படித்தான். ''தாயில்லாத குழந்தை என்று இரக்கப்பட்டு உனக்கு எத்தனை செல்லம் கொடுத்து வளர்த்தேன்? நினைவிருக்கிறதா உனக்கு. பாவி! பத்து வயதுவரை சோற்றை என் கையாலேயே பிசைந்து உன் வாயில் ஊட்டி வளர்த்தேன். நான் ஊட்டாவிட்டால் நீ சாப்பிட மாட்டாய். பிடிவாதம் செய்து அழுவாய். அந்தப் பிடிவாதத்தைச் சோற்றுடன் வைத்துக்கொண்டிருந்தால் விபரீதமாகி விட்டிருக்காது. கானல் நீரைக் காதல் என்று நம்பிக்கொண்டு பிடிவாதமாக உன் வாழ்க்கையையே நீ அழித்துக் கொண்டு விட்டாய்.''

இன்னொரு பக்கத்தில் இன்னும் சில வரிகள்தான் காணப்பட்டன. ''மகனே யாமினி! உன்னை என் உயிராக நினைத்து எத்தனை அன்போடு வளர்த்தேன்? மாற்றாந் தாய் வந்தால் உன் மலர்போன்ற மனம் புண்படுமோ என்று உனக்காக நான் தனிமையைத் தாங்கிக்கொண்டேன். என் மகள் சகலகலாவல்லியாக இருக்க வேணும் என்று வாய்ப்பாட்டும் வீணையும் கற்றுக்கொள்ள வாய்ப்பு அளித்ததுடன், திருச்சி பெண்கள் கல்லூரியில் ஹாஸ்டலில் தங்கி நீ படிக்கவும் அனுமதித்தேன். ஒவ்வொரு வார இறுதியின் போது வெள்ளிக்கிழமை மாலைப் பொழுது அமிழும் முன்பே நம் வீட்டு வில் வண்டியுடன் நான் பஸ் நிலையத்தில் உனக்காகக் காத்திருப்பேன். தன்னம்பிக்கையும், தன்னையே காத்துக் கொள்ளத் திறமையும் உனக்கு ஏற்படவேண்டும் என்று தான் உன்னைக் கல்லூரி ஹாஸ்டலிலிருந்து நமது கிராமத்திற்கு பஸ்சில் பயணப்பட்டு வர அனுமதித்தேன்.

''என் நம்பிக்கை நாசமாகியது என்பது பின்னர் தானே புரிந்தது? பஸ் பயணத்தில் அயோக்கியன் நாக



சுந்தரத்தின் நட்பு உனக்கு ஏற்படும், அவனையே கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று பிடிவாதம் பிடிப்பாய், பின்னர் தீராத அவமானத்தைத் தேடித் தருவாய் என்று அப்போதே தெரிந்திருந்தால் அந்தப் பாவியைத் தேங்காய் சீவும் கத்தியால் வெட்டிச் சாய்த்து விட்டுப் போலீசில் சரணடைந்திருப்பேன்.''

கடைசிப் பக்கத்திற்கு முன்னதில் அவசரமாக எழுதியது போன்ற சிலவரிகள் காணப்படவே ஆவலுடன் பரதன் படித்தான்.

''நீ எங்கே போய்ச் சேர்ந்து விட்டாய்? எத்தனை மட்டமான நிலையில் சருக்கி விழுந்து விட்டிருக்கிறாய் என்ற உண்மை சம்மட்டியாக என் உள்ளத்தை உடைத்து விட்டதால் வாழ்க்கையிலே எனக்குப் பிடிப்புப் போய் விட்டது. என்னை மெல்லப் பிடித்துக்கொண்ட நோய்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. உன்னைவிட என்னை உருக்கிக் கொல்லும் நோய் இனி வேறே இருக்கிறதா சொல்லு? கோவிலுக்குப் போவதை ஒழித்து விட்டேன். தேவாரமும் திருவாசகமும் உனக்குச் சொல்லிக் கொடுத்து நான் கண்ட பயன்? போதும்! உணவை வெறுத்து உறவினர்களை ஒதுக்கி—நண்பர்களை விட்டு விலகி—சாவை மட்டுமே எதிர்நோக்கிக் கொண்டு—ஒரு தனி மனிதனாக—எல்லாவற்றையும் இழந்த ஒரு பிச்சைக்காரனாக—வாழ்கிறேன். இந்த வாழ்க்கை எனக்குத் தேவைதானா?

''எனக்குத் திடீர் என்று முடிவு ஏற்பட்டால், இந்த டைரி யார் கையிலாவது அகப்பட்டால், அவர்கள் உன்னிடம் சேர்க்கட்டும் என்று நீ இப்போதிருக்கும் முகவரியைக் கடைசிப் பக்கத்தில் எழுதி வைத்திருக்கிறேன். நீ படித்துப் பார்த்து உன் அன்பான தந்தைக்கு நீ தந்திருக்கும் பரிசை எண்ணி எண்ணிச் சாகும் வரை கண்ணீர் விடு. உன் பாவம் கண்ணீரில் கரையட்டும்.''

MITHRAVINTHA

சிதறி விட்டிருக்கும் துண்டங்களை ஒன்று சேர்த்து ஒரு படத்தை பூர்த்தி செய்வது போல, இங்குமங்கும் டைரியில் படித்த வரிகளைக்கொண்டு அவன் ஒருவாறு புரிந்துகொண்டு விட்டிருந்தான்.

விருதபுரம் கிராமத்திலே வசதியாக வாழ்ந்த தணிகை வேலனுக்கு யாமினி ஒரே மகள். செல்லமாக வளர்க்கப் பட்டாள். பஸ் பயணத்திலே ஏற்பட்ட ஒரு அயோக்கி யனின் தொடர்பால் காதலன் என்று நம்பி அவனுடன் கிளம்பிப் போயிருக்கிறாள். அவன் அவளை பம்பாயிலோ சென்னையிலோ இழி தொழில் செய்யும் ஒரு விடுதியில் தள்ளிவிட்டுப் போயிருக்கிறான். அங்கே அவள் பாழாகிப் போலீஸ் ரெய்டில் சிக்கித் தண்டனை அடைந்து மகளிர் காப்பகம் வந்து சேர்ந்துவிட்டிருக்கிறாள்.

ஒரு உயர் மட்டத்துப் பெண்—படித்தவள், செல் வாக்கு மிக்க ஒரு நல்ல குடும்பத்தில் பண்புடன் வளர்க்கப் பட்டவள். அவளுக்கு இப்படி ஒரு பயங்கர வீழ்ச்சியா?

தணிகைவேலுக்காக அவன் இரக்கத்தில் கரைந்தான். யாமினிக்காகவும் அவன் மனம் சங்கடப்பட்டது.

டைரியை மூடி வைத்துவிட்டு எழுந்தான். வெளியே கொட்டிக் கொண்டிருந்த மழை பொட்டென்று அடங்கிப் போயிற்று. திடீரென்று வெய்யில் சுள்ளென வீசியது.

"தாகத்துக்கு இதை முதல்லே சாப்பிடு. இன்னும் கொஞ்ச நேரத்திலே சாப்பாடு தயாராகிவிடும்." உபசரித்தபடி தாயம்மாள் கோப்பையில் தேநீரை நிறைத்துக் கொண்டு வந்து மேஜைமீது வைத்துவிட்டுப் போனாள்.

சூடாகத் தாகத்துச்கு இதமாக—சுவையாக இருந்த தேநீரை அவன் மெல்லப் பருகிக்கொண்டு வெளியே பார்த்தபடி ஜன்னல் அருகே வந்து நின்றான்:

தொலைபேசி அடித்தது.



மீதித் தேநீரை ஒரே வாயாக உறிஞ்சிவிட்டுக் கோப் பையை மேஜைமீது வைத்தான். தொலைபேசியை எடுத் தான்.

ஏதாவது நிலைமை சந்தேகமாக இருந்தால் உடனடி யாக டெலிபோன் செய்துவிடு என்று தணிகைவேலைக் கவனித்த நர்சிடம் சொல்லியிருந்தான்.

நோயாளி மோசமான கட்டத்திற்கு வந்துவிட்டார் என்று எச்சரிக்கவா அந்த டெலிபோன்? நர்ஸிங் ஹோமுக்கு அவன் விரையும்வரை தணிகைவேல் உயிருடன் இருப்பாரா? கவலையுடன் ரிஸீவரைக் கையில் எடுத் தான். மகளிர் காப்பகத்துத் தலைவி மறுபக்கம் பேசினார்.

"டாக்டர் பரதன், உங்கள் நர்ஸிங்ஹோமுக்கு போன் செய்தேன். இன்று உங்கள் ஓய்வு தினம் என்று சொன்னாங்க. தயவுசெய்து இங்கே வர முடியுமா? யாமினி உங்களிடம் ஏதோ பேச வேண்டுமாம்."

வேகமாக வெளியே செல்ல உடையணிந்து கொண் டான்.

யாமினி அவன் பேச்சுக்கு இணங்கித் தந்தையைக் காண நர்ஸிங்ஹோம் வரச் சம்மதிக்கிறாளோ?

சட்டென்று அபிராமி நர்ஸிங்ஹோம் எண்களைச் சுழற்றினான். இன்டென்சிவ்கேர் யூனிட் நர்ஸுடன் தொடர்பு கொண்டான்.

"நோயாளி நிலைமையா? அப்படியேதானிருக்கு டாக்டர். குணம் ஏதும் தெரியலை. ஸ்பெஷலிஸ்ட் வந்து போனார். அவரும் நம்பிக்கையை இழந்துவிட்டதாகத் தோணுது."

நெஞ்சு படபடக்க அவன் தாயம்மாவிடம் கூறிவிட்டு ஸ்கூட்டருடன் வெளியேறினான்.

MITHRAVINTHA

தலைவியிடம் பேசிவிட்டு, அலரது உத்தரவின் பேரில் மரங்கள் அடர்ந்த அந்த மையப் பகுதிக்கு விரைந்து வந்தான்.

மழையில் தரை ஈரமாகிவிட்டிருந்தது. காற்றில் அசைந்த மகிழ மரக் கிளைகளிலிருந்த மழைத் தண்ணீர் தயாராகப் போடப்பட்டிருந்த நாற்காலிகள் மீது பூவாக உதிர்ந்தது. அவனது வரவுக்காக யாமினி காத்துக் கொண்டு நின்றாள்.

அந்த முகத்தில் இப்போது சோகம் கப்பிக்கொண்டு இருந்தது கண்கள் அழுதனினால் சிவந்து காணப்பட்டன.

"உட்காருங்கள் டாக்டர் பரதன்! இத்தோட உங்களை நாலு தடவை இங்கே வரும்படி அலக்கழிச்சிட்டேன். இரண்டு தடவைகள் உங்களைப் பார்க்க முடியாதுன்னு மறுத்து அனுப்பிச்சேன். இப்போ நானே சொல்லி அனுப்பியிருக்கேன். உங்களுக்கு வீண் சிரமம் கொடுத்ததுக்கு என்னை மன்னிச்சிடுங்க."

சொல்லிக்கொண்டே எதிர்ப்பக்கத்து நாற்காலியில் அவன் உட்கார்ந்தாள்.

"பரவாயில்லை. ஒரு நோயாளியின் வேண்டுகோளை பூர்த்தி செய்து வைக்கப் பத்துத் தடவை வேண்டுமானாலும் இங்கே நான் வரத் தயார்." முறுவலித்தபடி அவளை உற்றுப் பார்த்தான்.

ஒப்பனை ஏதுமில்லாத அந்த முகத்தில்தான் எத்தனை ஒரு கலர்ச்சி. கலங்கி விட்டிருந்த கண்களில் எத்தனை ஒரு அழகு? பிரமிப்புடன் அவளை உற்றுப் பார்த்தான் பரதன்.

"உங்களிடம் கோபமாகப் பேசினத்துக்கு மன்னிப்பு கேட்டுக்கிறேன்." அவன் கூறி முடிப்பதற்குள் சட்டைப் பையிலிருந்த அந்தச் சிலப்பு டைரியைக் கையில் எடுத்தான்.



"இது உங்கள் அப்பாவின் சொத்து. உங்களிடம் சேர்ப்பிக்க வேண்டியது முதல் கடமை."

டைரியை வாங்கிப் புரட்டினாள். சில நிமிஷங்கள் மௌனமாக உள்ளே எழுதப்பட்டிருந்தவற்றைத் தன்னுள் வாசித்துக் கொண்டாள். "இதில் எழுதியிருப்பதையெல்லாம் நீங்கள் வாசித்திருப்பீர்கள் என நம்புகிறேன்."

"மன்னிக்கணும். எனக்கு அந்த மட்டமான பழக்கம் கிடையாது. உங்கள் முகவரியை எழுதியிருப்பதுபோல வேறு உறவினர் முகவரியை இதில் எழுதியிருக்கலாம். அவர்களையாவது இப்போது தொடர்பு கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் புரட்டினேன், படித்தேன்."

"அப்பா எழுதியிருப்பது அத்தனையும் உண்மைதான்." அவள் உதடுகள் துடித்தன. கண்கள் ஈரமாகியது. முகம் அவமானத்தில் சிவந்தது. பட்டென்று கீழே தரையைப் பார்த்தாள். கணப்பொழுதில் சமாளித்துக் கொண்டாள். "ஆனால் இன்னும் சில உண்மைகளை அப்பா அதில் எழுத மறந்து விட்டார்."

"பரவாயில்லை...அதைப் பற்றி இப்போது நாம் பேசத் தேவையில்லை."

"தேவையுண்டு. என் பக்கத்திலிருந்து நீங்கள் ஒரு பெரிய உண்மையைத் தெரிஞ்சிக்கணும். அப்பாவுக்கும் எனக்கும் இடையே உறவுப் பாலமாக வந்து உதவ முன் வந்திருக்கிற உங்களுக்கு நான் சொல்லப் போறதையும் தெரிஞ்சிக்கிறது நல்லது."

"...பேசிக்கிட்டு நேரத்தை வீணடிப்பதைவிட உடனடியாகத் தலைவிகிட்ட உத்தரவு வாங்கிட்டு என்னோடு கிளம்பி வந்தீங்கன்னா புண்ணியமுண்டு." பரதன் குழைவான குரலில் கேட்டான்.

"அப்பாவுடன் இருக்கும்போது உலகம் தெரியாத கபடமில்லாத பெண்ணாக இருந்தேன். எனக்கேற்பட்ட

MITHRAVINTHA

பயங்கர அனுபவம் என்னை ரொம்பவே மாத்திட்டது. கொஞ்சம் அவசரப்படாம, சுருக்கமா நான் சொல்லப் போவதைக் கேளுங்க. பிறகு..."

"கேக்கிறேன். பிறகாவது நீங்க உங்க அப்பாவைச் சில நிமிஷம் வந்து பார்க்க ஒப்புக்கணும்"...பரதன் அழுத்தமாகவே கேட்டான்.

யாமினி தலையை அசைத்துச் சம்மதம் தெரிவித்தாள்—கண்களில் திரண்ட நீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். மெல்லிய குரலில் பேசினாள்.

விருதுபுரத்திலும் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலும் பெரிய தனக்காரர் தணிகைவேலுவைத் தெரியாதவர்கள் கிடையாது. அப்படி ஒரு செல்வாக்கு. ஊர்க் கோயிலில் முதல் மரியாதை ஏற்கும் கௌரவமான குடும்பம் அவர்களுடையது. பிறந்த சில நாட்களிலேயே தாயைப் பறிகொடுத்து விட்டாள் யாமினி. கொஞ்ச காலம் பாட்டியால் வளர்க்கப்பட்டாள். பள்ளிப் பருவத்திலே பாட்டியும் காலமாகிவிடவே அப்பாதான் அவளது உலகமாக மாறிவிட்டிருந்தார்.

தணிகை மகள்மேல் உயிரையே வைத்துக்கொண்டு வாழ்ந்தார் என்பது முற்றிலும் உண்மை. அவளைப் படிக்கவைத்து, சீரும் சிறப்புமாகக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமென்றதொரு பெரிய கனவு அவருக்கு. யாமினிக்கும் தன் தந்தைமேல் மட்டற்ற பாசம்.

அப்படிப்பட்ட அப்பாவுக்கும் மகளுக்கும் இடையே ஒரு பெரும் பிளவு ஏற்படும்—அவள் அவரது தீராத வெறுப்புக்கு ஆளாவாள் என்று கனவில்கூட எதிர்பார்க்கவில்லை.

எதிர்பாராத அந்தச் சம்பவம் அவள் பி.ஏ. இறுதி ஆண்டில் படிக்கும்போது நடந்தது. சிவராத்திரி லீவுக்காக அவள் பஸ்சில் ஊர் திரும்பிக் கொண்டிருந்தாள். பஸ் சாலையில் குறுக்கிட்ட ஒரு பசு மாட்டைத் தவிர்க்க



நகர்ந்து விரைந்து ஓடிச் சாலையோரமிருந்த புளிய மரத்தில் மோதிக்கொண்டது. நல்லவேளை அது பெரிய விபத்தாகி விடவில்லை. பஸ்சின் முன் பகுதி சிறிது நசுங்கி விளக்குகள் உடைந்து சில பயணிகளுக்குச் சிராய்ப்புக் காயத்துடன் தப்பியது.

அதிர்ந்துபோன அத்தனை பயணிகளும் பயத்தில் விழுந்தடித்துக்கொண்டு இறங்கினர். மோதலில் ஏற்பட்ட குலுக்கலில் நெற்றி ஓரத்திலே யாமினிக்கு ஒரு சிறு காயம்! கோடாக ரத்தம் கன்னத்தில் வழிவதை வெளியே வந்த பின்னர்தான் உணர்ந்தாள். "அடடா! காயம்பட்டிருக்கு. என்கிட்டப் பஞ்சு, பிளாஸ்திரி மருந்து எல்லாமிருக்கு. தரட்டுமா?" கேட்டுக்கொண்டு அருகில் வந்து நின்ற வாலிபனைப் பார்த்தாள். வலுவில் உதவ வந்த அவனது தாராள மனம் அவளை மிகவும் கவர்ந்தது. அலையாகச் சரிந்த முடி கழுத்தில் புரள...தொங்கு மீசை—கிருதா... குறுந்தாடியுடன்... கருப்புக் கண்ணாடியும் கையில் சிறு தோல் பையுமாக, கச்சிதமான உடையில் அவன் கண்களை ஒரே பார்வையில் நிறைத்துக் கொண்டான்.

காயத்தைப் பஞ்சால் துடைத்து-மருந்து போட்டுப் பிளாஸ்த்திரியை ஒட்டி முடிப்பதற்குள் பெயர், ஊர், விவரங்களை இருவரும் பரிமாறிக் கொண்டனர்.

சென்னையிலிருப்பவன். மருந்து தயாரிப்புக் கம்பெனி ஒன்றின் விற்பனைப் பகுதியைச் சேர்ந்தவன்...தங்கள் கம்பெனி தயாரிப்பு மருந்துகளைக் கிராமத்து டாக்டர்களிடமும் மருந்துக் கடைகளிலும் அறிமுகப்படுத்தி விற்பனையை அதிகரிக்கச் செய்ய ஒரு சுற்றுப்பயணம் புறப்பட்டிருக்கிறான்.

தன்னைப்பற்றித் தெரிவித்துக் கொண்டாள் யாமினி. ஆனால் அவனை வீட்டுக்கு அழைக்கவில்லை. பிற ஆண் வாடை பிடிக்காத அப்பாவிடம் அச்சமாக இருந்தது.

MITHRAVINTHA

திரும்பும் போதும் பஸ்ஸில் மறுபடி அவனைச் சந்தித்தாள்.

சில தினங்களுக்குப் பின்னர் கல்லூரி ஹாஸ்டலுக்கே அவளைப் பார்க்க ஒரு விசிட்டராக அவன் வந்துவிட்டிருந்தான்.

முதலில் அச்சமாக இருந்தது. பின்னர் அடிக்கடி அவன் வரத் தொடங்கவே அச்சம் மறைந்தது. அவனது பேச்சு-பார்வை தன் வருங்காலத்தைப் பற்றி அவன் விவரித்த கற்பனை எல்லாம் இனித்தன.

அவளை அவன் மணக்க விரும்புவதாகத் தெரிவித்த போது மகிழ்ச்சி அடைந்தாள். அப்பாவின் ஒப்புதல் வேண்டுமே...?

பரீட்சைக்குப் பின்னர் அவள் ஊர் திரும்ப வேண்டி வந்துவிட்டது. துணிவுடன் ஒருநாள் அவன் அவளைத் தேடிக் கொண்டு வீட்டுக்கே வந்துவிட்டான். நல்லவேளை அப்போது அப்பா வயல்வெளியில் சுற்றிக் கொண்டிருந்தார்.

கல்யாணத்திற்கு அப்பா சம்மதம் கிடைக்கும் வரை சந்திப்புகள் ரகசியமாக இருக்க வேண்டுமென்று அவன் சொன்னதற்கு ஒப்புக்கொண்டாள்.

இருவரும் சிவன் கோவிலுக்குச் சற்றுத் தொலைவிலிருந்த பாழடைந்த சாவடி—வாய்க்கால் கரையோரமிருந்த பிள்ளையார் கோவில் பின்பக்கம் என்று மனித நடமாட்டமில்லாத இடங்களில் சந்திக்க ஆரம்பித்தனர்.

அப்பா தணிகைவேல் அவளுக்கு வேறு இடங்களில் மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கியிருந்ததை உணர்ந்த போது நடுங்கிப் போனாள்.

பாசமுடைய அப்பாதான். ஆனால் முன் கோபக்காரர். என்னதான் அப்பாவுக்குச் செல்ல மகளானாலும் கல்யாண வயதடைந்த ஒரு பெண் தன் மனதைவிட்டு ஒரு



தாயிடம் தன் ரகசியங்களைச் சொல்வதுபோலத் தந்தையிடம் எப்படிச் சொல்ல முடியும்? வீட்டில் வேலைக்காரியைத் தவிர நெருங்கிய உறவினரான அத்தையோ பாட்டியோ கிடையாது. தவித்துக் கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தான் அவன் அந்த யோசனையைச் சொன்னான். முரட்டு அப்பாவைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைக்க முடியாவிட்டால்—இருவரும் சொல்லாமல் சென்னைக்குப் போய் பதிவுத் திருமணம் செய்து கொண்டு திரும்பி வந்து அப்பா காலில் விழுந்தால்—முதலில் கத்துவார்—பின்னர் சமாதானமாகி விடுவார்—அதுதான் அவர்களின் காதலுக்கு ஒரு வழி. அவளை உற்சாகப்படுத்தினான்.

படித்தவள்தான். ஆனால் உலக அனுபவமில்லாத பத்தாம் பசலி.

அவன் பேச்சுக்கு மயங்கிப் போனாள்.

வீட்டைப் பழுது பார்க்கவும், ஓடு வாங்கவும், மற்ற செலவுக்குமாக அப்பா ஒட்டு மொத்தமாக வங்கியிலிருந்து எடுத்துவந்த ஐயாயிரம் ரூபாயை அவர் அலமாரியிலிருந்து எடுத்துக்கொண்டு-தன் கல்யாணத்திற்காக இரும்பு பீரோ லாக்கரில் அப்பா பத்திரமாக சில ஆண்டுகளாக வைத்திருந்த அம்மாவின் நகைகளுடன் சில புடவை ரவிக்கைகளை ஒரு சிறு பெட்டிக்குள் அடக்கிக் கொண்டு கிளம்பி விட்டாள்.

நாகசுந்தரம் அன்று இரவு ரயிலுக்கு டிக்கெட்டுகள் வாங்கித் தயாராக வைத்திருந்தான். முன் ஏற்பாடுபடி டாக்ஸியில் அவளைத் திருச்சி ஜங்ஷனுக்கு அழைத்துச் செல்லக் குறிப்பிட்ட இடந்தில் காத்திருந்தான்.

அன்று பார்த்துத் தணிகைவேல் பக்கத்து டவுனில் நடந்த விவசாயிகள் கூட்டமொன்றிற்குப் போய்விட்டிருந்தார்.

MITHRAVINTHA

அவர் திரும்ப நேரமாகும் என்பது மகளுக்குத் தெரியும். வேலைக்காரியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு இருட்டத் தொடங்கிய சமயம் பின்பக்கமாக வீட்டை விட்டு வெளியேறி விட்டிருந்தாள்.

உத்சாகமும் அச்சமுமாக நாள் முழுவதும் வீட்டில் வளைய வந்து எல்லா ஏற்பாடுகளையும் திருட்டுத் தனமாகச் செய்ய நேர்ந்ததினால் யாமினி மிகவும் களைத்து விட்டிருந்தாள்.

முதல் வகுப்பு ஸ்லீப்பரில் வேறு இரண்டு பேர் மேல் பலகையில் படுத்திருந்தனர். கீழ்ப்பலகையில் எதிரும் புதிருமாக அவர்கள் படுக்கச் சாய்ந்தனர். நகைகள், பணம் இரண்டையும் பத்திரமாக வைத்துக் கொள்ளச் சொல்லி அவனிடம் தந்துவிட்டு...அவள் அசதியில் ரயில் ஆட்டமே தாலாட்டாக ஆழ்ந்து உறங்கிப் போனாள்.

எங்கேயோ கனவு போல ஏக சத்தம். திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். ரெயில் எழும்பூர் ஸ்டேஷனை அடைந்து விட்டிருந்தது. எல்லோரும் இறங்க அவசரப் பட்ட துடிப்பில் எழுந்த இரைச்சல், குழப்பம், விடிய நேரம் இருந்தது. கண்களைக் கசக்கிக் கொண்டு ஆடையைச் சீர்செய்து கொண்டாள். மேல் பலகையிலிருந்தவர்கள் இருவரும் இறங்கி எப்போவோ கூட்டத்தோடு வெளியேறி விட்டிருந்தனர்.

''சாமான் தூக்கணுமா?...'' கூலி ஆள் ஒருத்தன் கேட்டான். கலவரத்துடன் எதிர்ப் பலகையைப் பார்த்தாள்.

நாகசுந்தரம் எங்கே? கழிவறைக்கு முகம் கழுவப் போயிருப்பானோ? கீழே அவளுடைய சிறு பெட்டியிருந்தது. அதை இழுத்து எடுத்து வைத்துக்கொண்டு தயாராக நின்றாள்...''கூலி வேண்டாம் சாமான் அதிகமில்லை'' — சொல்லி விட்டு...பெட்டியைத் தூக்கிக் கொண்டு கழிவறை அருகில் சென்று அதனைத் தள்ளிப்



பார்த்தாள். அது திறந்து கொண்டது. ஆனால் நாகசுந்தரத்தைக் காணவில்லை.

கீழே இறங்கிப் பிளாட்பாரத்தில் ஒரு பக்கமாக நின்று கொண்டாள்—நெஞ்சு திக்திக்கென்றது. விடியத் தொடங்கி விட்டது — வருவோரும் போவோருமாக மனிதத் தலைகள் நகர்ந்தபடி—டிராலிகள் ஊர்ந்தபடி சப்தமாக இருந்தன. குழல் விளக்கின் பளிச்சென்ற ஒளியில் அவள் தன்னை ஒரு பெரும் இருள் சூழ்ந்து கொண்டு விட்டதை உணர்ந்தாள். நாகசுந்தரம் நகைகள் பணம்... முதலியவற்றுடன் இவளைத் தனியே விட்டு விட்டு எங்கேயோ மறைந்து போனான்.

காதலன் என்று பஸ் பயணத்திலே அவனை நம்பினாள். அவன் ஒரு காதகன் என்பதை இந்த ரயில் பயணத்தின் முடிவு அப்பட்டமாக விளக்கியது.

ஐயோ! சென்னை அவளுக்குப் புதிய நகரமாச்சே—நல்ல வேளை கையிலிருக்கும் பர்சில்—முப்பது ரூபாய் இருக்கு—

அதை வைத்துக்கொண்டு இத்தனை பெரிய நகரத்தில் அவள் யாரைத் தேடிக்கொண்டு உதவிக்கு அலைவாள்?

திகிலில் மனம் படபடக்க—வியர்வை உடல் முழுவதும் கொப்பளிக்க அச்சத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தபடி நின்றவளுக்கு ஒரு நினைவு பளிச்சிட்டது.

## 9

அவளுடைய வகுப்புத் தோழி கனகரேகாவின் அப்பாவுக்குச் சென்னைக்கு மாற்றலாகி விட்டது. பரீட்சைக்கு மூன்றே மாதங்கள் தானிருந்தது. அந்தக் குறுகிய காலத்தில் ஹாஸ்டலில் தங்கிக்கொண்டு தேர்வு எழுதப் பக்கத்தறையில் இருந்தாள். அப்போது ஏற்பட்ட தோழமை.

MITHRAVINTHA

"கோடை லீவுக்குச் சென்னைக்கு எங்க வீட்டுக்கு வா. கடிதம் போடு—" பரீட்சை முடிந்ததும் ஊருக்குப் புறப்படும்போது அவன் கொடுத்த முகவரி நினைப்பில் பளிச்சிட்டது. "ராமரத்தினம், கிருஷ்ணசாமி தெரு, ராயப்பேட்டை" என்றாளே, அவள் வீட்டுக்கு ஒரு டாக்ஸி பிடித்துக்கொண்டு போய்விட்டால்?

"என்னம்மா, டாக்ஸி வேணுமா" யாரோ கேட்கத் திரும்பினாள்.

"எங்கே போகணும்மா?" கூட நின்ற வழுக்கைத் தலை ஆசாமி விசாரித்தார். பார்த்தால் குழந்தைகுட்டி உள்ள நல்லவர் போலத் தென்பட்டார்.

"என் சிநேகிதி வீட்டுக்குப்போகணும். ராயப்பேட்டை கிருஷ்ணசாமி தெரு" சொல்லிவிட்டாள். பிறகுதான் எத்தனை பிசகு என்று புரிந்தது.

இப்படி ஊரை விட்டு ஓடி வந்து அனாதரவாக ரயில் நிலையத்தில் நிற்கும் பெண்களை வலைபோட்டுப் பிடிப்பது அவர்கள் தொழில் என்று இவள் என்ன கண்டாள்? அவள் வயதுக்கு மீறிய ஆண்கள் எல்லோரும் அவளுக்கு அண்ணனாகவும் தந்தை போலவும் தான் கண்யமாகக் கண்களில் பட்டனர்.

கதைகளில் நிறையப் படித்திருக்கிறாள். சினிமாவில் கூடப் பார்த்திருக்கிறாள். அவள் வாழ்க்கையில் இப்படி ஒரு அவலம் நேரும் என்று அவள் நினைத்ததே கிடையாது.

"நான் அந்தப் பக்கந்தான் போரேன். ஊருக்கு நீ புதுசு போல இருக்கு. கூட யாரும் வரலையா அம்மா?" கனிவுடன் விசாரித்த வழுக்கை மண்டை குதப்பிக் கொண்டிருந்த வெற்றிலையை ஒரு கம்பத்தின் மீது பீய்ச்சிவிட்டு, "வாம்மா இப்படி" என்றார்.

டாக்ஸி வேணுமா என்று கேட்ட சற்று இளையவனாகக் காணப்பட்ட ஜில்பா கிராப்புக்காரனும்



"அண்ணே தங்கச்சியைக் கொண்டு முதல்லே வுட்டுட்டுப் பிறகு நாம போவோம்—பாவம் பசியா இருக்கும்" என்று உருகினான்.

முன்பின் தெரியாத ஊரில் அண்ணனும் அப்பாவும் போல் அபயமளிக்க யாரோ நல்லவர்கள் எதிர்ப்பட்டது அவள் அடைந்த அதிர்ச்சிக்கு மருந்து போல இதமாகத் தோன்றியது.

பிளாட்பாரத்திலேயே ஒரு பக்கம் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த கறுப்பு அம்பாசிடரில் அவள் பெட்டியைக் காலடியில் வைத்துக்கொண்டு பின் ஆசனத்தில் ஏறிக் கொண்டாள். வழுக்கைத்தலை அவள் பக்கத்தில் ஏறிக் கொண்டு "மருதமுத்து" என்று குரல் கொடுத்தார். சிறிது தூரத்தில் பீடி ஒன்றை ஊதிக்கொண்டு நின்ற முகத்தில் முரட்டுத்தனம் தெரிந்த ஒரு மனிதன் பீடியைத் தூக்கி எறிந்துவிட்டு ஓடிவந்தான்.

"ஏறிக்கோ—வீட்டுக்குப் போகணும். அப்படியே இந்தக் குழந்தையை வழியிலே விட்டுடு." வழுக்கைத்தலை கண்களைச் சிமிட்டியதைப் பார்த்தான்.

பகீர் என்ற உணர்வு வயிற்றுக்குள்ளே நெருப்பாகப் புரண்டது.

ஐயோ! யாரோ முன்பின் தெரியாதவர்களை நம்பிக் காரில் ஏறிக்கொண்டு விட்டோமே. அவர்கள் ஆண்கள் மூன்று பேர். அவள் ஒரு பெண். ஊர் புதிது. பற்பல எண்ணி அவள் கவலைப்படுமுன் வண்டியைச் சாலைக்குள் ஓட்டினான் ஜில்பா கிராப்புக்காரன். அதற்குள் பொழுது நன்றாக விடிந்துவிட்டது. சென்னை நகரத்தின் அவசரப் போக்குவரத்து நெரிசல் ஆரம்பமாகியது.

காலை வேளை—இத்தனை பஸ்கள், ஆட்டோக்கள், மனிதர்கள் போகும் சாலையில் இவர்கள் என்ன செய்ய முடியும்?



MITHRAVINTHA

அவன் எண்ணி முடிக்கு முன் மருதமுத்து பீடி நாத்தம் அடிக்க அவள் காதருகே குனிந்தான்.

"சத்தம் போட்டே ஒரே குத்து. வாயை மூடிக்கிட்டு எங்களோட வா" என்றான் தாழ்வான குரலில்.

அவன் கையில் ஒரு சிறு கத்தி கூர்மையில் பள பளத்தது...

"என்னைத் தாண்டிக் குதிச்சிடலாம்னு நினைக் காதே. கத்தி யாரையாச்சும் கூப்பிட்டா குடலைக் கிறிடு வேன்."

சாதுபோல அப்பா போல தெரிந்த வழுக்கைத்தலை இப்போது புலியாகச் சீறியது. அவன் கையிலும் கத்தி. 'அடப்பாவி!' என்று அவள் உள்ளம் ஓலமிட்டது.

பெண் என்பவள் கத்தி முனையில் நடப்பதுபோல சர்வ ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளவேண்டும். அப்பா தனிகை அடிக்கடி சொல்வார். மகள் இப்போது கத்தி முனைக்குக் கட்டுண்டு வாயை மூடிக்கொண்டு பட படத்த நெஞ்சுடன் கிலியில் உறைந்துபோய் உட்கார்ந் திருந்தாள்.

அவள் படிப்பினால் பயன் இல்லை. அப்பா அவளுக்கு அப்போதைக்கப்போது உரைத்த அறிவுரைகள் உதவ முடியவில்லை. மூன்று முரடர்களிடம் அகப்பட்டுக் கொண்டு முன்பின் தெரியாத சென்னையில் ஐய்யய்யோ அவள் கதி என்ன ஆகப்போகிறது?

ஒரு சமயம் நாளேடு ஒன்றில் படித்த சங்கதி நினைவுக்கு வர அவள் உடல் முழுதும் நடுங்கியது.

கல்லூரி மாணவி ஒருத்தி ஹைதராபாத்துக்குத் தன் உறவினர் வீட்டுக்கு விடுமுறைக்காகத் தனியே ரயிலில் பயணம் செய்தவள், வழியில் காணாமல் போய்விட்டாள். போலீஸ் சல்லடை போட்டுத் தேடிய பின்னர் அவள் பிணம் ஒரு வாய்க்கால் கரையோரம் கிடந்தது. பிரேதப்



பரிசோதனையில் அவள் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டாள் என்ற விவரம் தெரிந்தது.

இந்தப் பாவிகள் அவளை என்ன செய்யப் போகி றார்கள்? கொன்றுவிட்டாலும் பாதகமில்லை. அப்பா வுக்குத் தெரியாமல் காதலன் என்று நம்பி எவனுடனோ புறப்பட்டு வந்ததற்குத் தண்டனையாக உயிர் போகட்டும். ஆனால் மானம்? ஐயய்யோ...அழுகை தொண்டையை அடைத்தது.

"ஐயா என்னை இங்கேயே வழியில் இறக்கி விட்டுடுங்க. உங்களுக்குப் புண்ணியம் உண்டு" மெல்லிய குரலில் வழுக்கைத் தலையிடம் தழுதழுத்தாள்.

"புண்ணியத்தைப் பார்த்தால் பணம் கிடைக்குமா? ஆமாம் நீ எந்த ஊர்? யாரோட ஓடிவந்தே...? சினிமாவில் சேர ஆசைப்பட்டுகிட்டு வந்தியா?"

'அயோக்கியன் கிண்டல் வேறு செய்கிறானே. கடவுளே! விருதநாதா! உன் சந்நிதியில் உன்னை வாயாரத் துதித்து மனமாரப் பலமுறை வேண்டியிருக் கிறேனே? சிவராத்ரிக்கு முதல்ஜாம பூஜை செலவெல்லாம் அப்பாவுடையதாச்சே. உன்னைப் பன்னீராலும்—விபூதி யாலும் முழுக்காட்டி மலர்களால் அலங்கரித்து ஆராதித்துத் தேவாரப் பதிகங்களை ஆசையோடு பாடித் துதிப்போமே. விருதநாதா காப்பாத்தும்! காப்பாத்தும்! என்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாத்தும்!' கண்கள் பனித்தன. மனம் உருகத் தனக்குள்ளே அழுதபடி வேண்டிக் கொண்டாள்.

எங்கே போகிறோம் என்ற நினைப்பு இன்றி அவள் பயத்திலே கண்களில் நீர் புரண்டு கன்னங்களில் ஓட மெல் லியதாக விசித்தபடி உட்கார்ந்திருந்தாள்.

"அழுகையை நிறுத்து. இல்லாட்டா சப்தம் போட்டே" ஜில்பா கிராப்புக்காரன் வண்டியைச் சந்து போன்ற ஒரு தெருவுக்குள் திருப்பினான்.

MITHRAVINTHA

சிறிது தூரம் சென்று வண்டி ஒரு சிறு வீட்டின் முன் நின்றது. "கண்களைத் துடைச்சுக்கிட்டு இந்தப் பக்கம், அந்தப் பக்கம் பார்க்காம, பெட்டியோட உள்ள நட" உத்தரவிட்டான் வழுக்கைத் தலை. அவன் கையிலிருந்த கத்தி தன் இடுப்பில் மெல்லக் குத்துவதை உணர்ந்தாள்.

உயிர் ஏனோ அப்பொழுது அவளுக்கு வெல்லமாக இருந்தது. அந்தச் சமயம் கூடக் கூக்குரல் எழுப்பித் தெருவில் உள்ள யாரையாவது உதவிக்குக் கூப்பிட்டிருக்கலாம். ஆனால் அந்த மூன்று பேர் மத்தியில் அவளுக்குத் துணிவு இருக்கவில்லை.

அந்த வீட்டிற்குள்ளே அவள் நுழைந்ததும் பின்பக்கமிருந்த ஒரு அறைக்குள் அவளைத் தள்ளி வழுக்கைத் தலை கதவைச் சாத்தி வெளியே பூட்டினான்.

"ஜாக்கிரதை. இங்கே நீ எத்தனை கத்தினாலும் யாரும் உதவ மாட்டாங்க வாயை மூடிகிட்டு சொன்னதைக் கேட்டியோ, உயிரோடு இருப்பே..." மிரட்டினான்.

உயரத்திலிருந்த சிறிய ஜன்னல் வழியே வந்த வெளிச்சத்தில் தனது சூழ்நிலையை அறியச் சிறிது நேரம் சென்றது.

அது தேங்காய்கள், சரக்குகள் அடுக்கப்பட்டதொரு சாமான் அறை. வீட்டின் மற்றப் பகுதிகளில் யாருமே இல்லாதது போன்ற அமைதி.

சிறிது பொழுதில் கதவு மறுபடி திறக்கப்பட்டது. ஒரு டம்ளர் காப்பியைக் கொண்டு வந்து ஜில்பா கிராப்பு அவளிடம் நீட்டினான். "குடிச்சுட்டு பெட்டியைத் தூக்கிகிட்டு வெளியே வா—வாசல்லே வண்டி நிக்குது, நாம வேறே இடத்துக்குப் போவோம்."

மறுபடியும் அவர்கள் இருவரிடையே கத்தி முனைகளின் பயத்திலே காரில் பயணப்பட்டாள்...



'இவர்களிடமிருந்து எப்படித் தப்புவது?'...யோசித்து மூளையைக் குழப்பிக்கொண்டு உணர்வுகள் மரத்த நிலையில் சாலையைப் பார்த்தாள்.

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை என்று படித்தவுடன் ஒரு சிறு தெம்பு. அவள் தோழி சொல்லியிருக்கிறாள், அந்தப் பகுதி உயர்மட்டத்து வாசிகள் வசிக்குமிடம். கடைகள் உண்டு. தெருக்கள் சுத்தமாக இருக்கும். அடுத்தடுத்து பங்களாக்கள் தென்படும்.

இருக்கட்டும். இங்கே இறங்கும்போது கூச்சல் போட்டு பங்களா வாசிகளை ஜன்னல் வழியே எட்டிப்பார்க்கச் செய்து தப்பிக்க முயலவேண்டும் என்று கணக்கிட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

திறந்திருந்த கேட்டு வழியே வண்டி மரங்கள் அடர்ந்த ஒரு தோட்டத்திற்குள் தார்பாவிய பாதையில் ஓடி ஒரு போர்ட்டிக்கோ முன்னால் நின்றது.

வீடு பழையதாகச் சுண்ணாம்புப் பூச்சுக்கு ஏங்கியபடி இருந்தது. ஆனால் பெரிய பங்களாபோல் காணப்பட்டது.

"இறங்கு, இதுதான் இனி உன் வீடு. இந்த வீட்டில் உள்ள அம்மாதான் உன் அம்மா. அவங்க இஷ்டப்படி நடந்தா உனக்கு நல்லது. அவங்களுக்கும் நல்லது. இங்கிருந்து ஓடிவிடலாம்னு மனப்பால் குடிக்காதே. காவலுக்கு மூனு மொட்டைத் தலையன்கள் இருக்காங்க."

'ஐயோ! வசமாக மாட்டிக்கிட்டோமே, விருதநாதா! கைவிட்டுட்டியே!' உள்ளூரப் புலம்பியபடி அந்தப் பெரிய ஹாலுக்குள் நுழைந்தாள்.

"வாம்மா!" ரொம்பவும் தெரிந்தவள் போல் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி அவளை வரவேற்றாள். "ரோசி இவளை மாடிக்கு அழைச்சுட்டுப் போ" உத்தரவிட்டாள். பிறகுதான் யாமினி புரிந்து கொண்டாள். பங்களாக்கள் நிறைந்த உயர் மட்டத்துவாசிகள் நடுவே

MITHRAVINTHA

அந்த வீட்டை, வாடகைக்கு எடுத்துக்கொண்டு கௌரவமான ஒரு பெரிய மனிதரின் விதவை போன்ற வேடத்திலே ருக்மணி என்ற அந்த அம்மாள் ஒரு விபச்சார விடுதியை நடத்திக் கொண்டிருக்கிறாள்.

அவள் மாடிப்படியேறிப் போய்க் கொண்டிருக்கையில் 'நாலாயிரம் கொடுக்கலாம், சரக்கு ரொம்ப உயர்ந்த ரகம்' என்ற வார்த்தைகள் கேட்டன. அந்த மூன்று முரடர்களின் தலைவனான வழுக்கைத்தலையன் அவளது உரிமை, பெண்மை எல்லாவற்றையும் நாலாயிரம் ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்தான்.

அவளைப்போல அங்கு இன்னமும் சில பெண்கள் இருந்தனர். யாரும் யாருடனும் அதிகம் பேசிக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. அவளுக்கு மாடியில் ஒரு தனி அறை கொடுக்கப்பட்டது. உள்ளடங்கிய குளியலறை. மொசாயிக் தரை, மெத்தை போட்ட கட்டில், மேஜை நாற்காலி இத்யாதியுடன் வசதியான அறை. ருக்மணி அம்மாள் சிறிது பொழுதில் மாடிக்கு வந்தாள்.

"பெரியவர் சொல்லியிருப்பார்னு நினைக்கிறேன். நீ இன்னிக்கு ராத்திரியே தயாராகிடணும். வடக்கேயிருந்து நண்பர் ஒருவர் வருகிறார். இன்னிக்கு ராத்திரிக்கு உன்னோட தங்கப் போகிறார். அதனாலே நீ சாயங்காலமே நல்லா குளிச்சிட்டு நான் கொடுக்கிற பட்டுச் சேலையைக் கட்டிக்கிட்டுத் தயாராக இருக்கணும். சத்தம் போட்டுக் கலாட்டா செய்தா கால் முட்டியைப் பேத்துடுவேன். எந்தக் காரணம் கொண்டும் நீ கீழே இறங்கி வரக்கூடாது. உன்னை நாலாயிரம் ரூபா கொடுத்து வாங்கியிருக்கேன். ஏமாத்தப் பார்க்காதே." படபடவென்று பேசினாள்.

வழுக்கைத் தலையனைவிட இவள் படுபொல்லாதவளாக இருக்கிறாளே? இந்த ராட்சசியிடமிருந்து எப்படித் தப்புவது? கதிகலங்கிப் போனாள்... யாமினி... ருக்மணியின் வேலைக்காரி வந்து சாயங்காலம் அவளை அதிகாரம் செய்தாள். "சோறு நல்லா கொட்டிட்டு பகல் முழுவதும் தூங்கியாச்சி—இப்போ எழுந்து குளிச்சி தயாரா இரு—அவர் வர நேரம்" உத்தரவிட்டாள்.



வேறு வழியின்றி—யாமினி—குளித்து முடித்துவிட்டு—அவள் வைத்துபோன சேலை ஒன்றை அணிந்துகொண்டாள். உடல் முழுவதும் அருவெறுப்பில் குலுங்கியது. 'ஐயோ கடவுளே ஏமாந்து போனேனே' என்று கூச்சலிட்டு அழ வேண்டும் போன்ற துக்கத்தில் திணறினாள்.

## 10

பெண்கள் அனைவரும் மாடியறையில் சப்தமிடாது அறைக்குள் இருந்தனர். கீழே வாடிக்கையாளர்களுக்குப் பலத்த விருந்து அமர்க்களப்பட்டது. வெளியார் பார்வைக்கு ருக்மணி என்னும் அந்தப் பணக்கார விதவை தன் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஒரு சிறு விருந்தளிக்கிறாள் என்ற பூச்சு.

இரவு ஒன்பது மணிக்கு மேல் கீழேயிருந்து வந்த சிரிப்பும், பாட்டு சப்தமும் ஓய்ந்தன. சில கார்கள் தோட்டத்திலிருந்தும் புறப்பட்டுப் போகும் சப்தம் கேட்டது. பத்து மணியளவிலே யாமினியின் அறைக் கதவு தட்டப்பட்டது.

"திற! முரண்டு பிடிக்காதே. உதை விழும்" அடிக்குரலில் அதட்டினாள் ருக்மணி.

கதவை மெல்லத் திறந்தாள் யாமினி. வேலைக்காரி மரத்தட்டில் வறுத்த முந்திரிப் பருப்பும், ஒரு மதுபாட்டிலும் இரண்டு கண்ணாடி டம்ளரையும் கொண்டுவந்து மேஜைமேல் வைத்து விட்டு அப்பால் போனாள்.

"இவள்தான் நான் சொன்ன பெண்," ஒரு மாதிரி சிரித்த ருக்மணி சில்க் ஜிப்பாவை முண்டிக்கொண்டு தொந்தி சரிய கால்களில் இறுக்கமாகப் பாண்ட் அணிந்

MITHRAVINTHA

இருந்த ஐம்பது வயதைத் தாண்டிவிட்ட ஒரு இரட்டை நாடி மனிதனை உள்ளே அனுப்பினாள்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு விகாரமாகச் சிரித்தபடி அவன் 'ஹலோ! மை ஸ்வீட்டி' என்று நெருங்கிய போது யாமினிக்குத் துணிவெல்லாம் திரண்டு கொண்டு ஆவேசமாக வந்துவிட்டது.

''ஸ்டுப்பிட் பூல்—கிட்டே வந்தீன்னா—மண்டையை உடைச்சுடுவேன். பல்லாலேயே கிழிச்சு ரத்தத்தைக் குடிச்சுடுவேன்...ராஸ்கல்—யார்டா நீ'' கிரீச்சிட்டாள்.

''ஸ்வீட்டி ரொம்பக் கத்தாதே. நான் உன் காதலன். இன்று இரவுக்கு மட்டும் கொஞ்சம் நல்லா நடத்துக்கிட்டா உனக்கு லாபம் உண்டு.''

ஆங்கிலமும் இந்தியுமான கலவையில் மது நெடி வீச அருகில் நெருங்கினான்.

தலைக்குமேல் வெள்ளம்—இனி உயிரோடு இருந்து பயன் என்ன என்ற ஒரு வைராக்கியத்தில் குபீரென்று பாய்ந்து மேஜை மேலிருந்த மது புட்டியைக் கையில் எடுத்துக்கொண்டாள்.

''மதுவுக்குப் பிறகு மாது'' உளறியபடி அருகில் வந்த அந்தத் தடியன் தலையைக் குறிபார்த்து ஓங்கி புட்டியால் ஒரு அடி வைத்தாள் யாமினி. மிஞ்சிப் போனால் உடைந்த புட்டியாலே அவன் வயிற்றைக் கிழித்துக் குடலை மாலையாகப் போட்டுக் கொண்டுவிட வேண்டுமென்ற ஆத்திரம். கொலைகாரியானாலும் சரி, பெண்மையை இழக்கக் கூடாது. ஒரே வீரம் வைராக்கியம்.

முன் நெற்றியில் காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்து வாயில் பட்டு உப்புக் கரித்தது. சட்டென்று கைக்குட்டையால் காயத்தை அழுத்திக்கொண்டு...

அவன் ஆத்திரத்துடன் அவளை நெருங்கியபோது வராந்தாவிலே பலத்த காலடி ஓசை கேட்டது.



''போலீஸ் ரெய்டு செய்கிறாங்க. ஓடுங்க மறைவான இடத்துக்கு'' என்று வேலைக்காரி மூச்சிரைக்க எச்சரித்துக் கொண்டு ஓடினாள்.

வடக்கே இருந்து வந்த நண்பன் ஐயோ, அப்பா என்று கத்திக்கொண்டு கதவைத் திறந்து வேகமாக ஓடினான். பெண்கள் எல்லோரும் அவரவர் அறைகளிலிருந்து வராந்தாவின் பின்பக்கத்தை நோக்கி ஓடினார்கள். யாமினியும் ஓடினாள். தோட்டத்திற்குப் போகும் மாடிப் படி வழியே...பின்பக்கமாக அவர்கள் வேகமாக மறைவதைக் கண்டு யாமினியும் தப்பிக் கொண்டு ஓடினாள். திடீரென்று மின் விளக்கு அணைந்தது. போலீஸ் விசில் சப்தம் இங்குமங்கும் கேட்டது.

யாமினி மாடிப்படியின் கைப்பிடியை இருட்டில் கெட்டியாகப் பிடித்தபடி மெல்ல படிகளில் இறங்கிக் கீழே வந்தாள். தோட்டத்தில் இருந்து வீசிய பூங்காற்று சில்லென்று முகத்தில் அடித்தது. அப்பாடா, சுதந்திரமா இனி எங்கேயாவது ஓடிவிடலாம் என்று நினைத்து அவள் ஒரு அடி எடுத்து வைத்தாள். இரும்புபோல அவள் கரத்தை யாரோ பிடித்தார்கள்.

பளிச்சென்று விளக்கு எரியத் தொடங்கியபோது பார்த்தாள். தன்னைச் சுற்றிலும் போலீஸ்காரர்கள்.

வெளியே தோட்டத்தில் இரண்டு போலீஸ் ஜீப்புகள். பின்னர்தான் தெரிந்தது விஷயம். பலநாட்களாக அக்கம் பக்கத்து பங்களாக்காரர்கள் அந்த வீட்டைக் 'கண்காணித்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். அந்த வீட்டில் ஏதோ மோசடி நடக்கிறது என்று சந்தேகம். போலீசிற்குப் புகார் வந்திருக்கிறது. போலீசார் கவனிக்கத் தொடங்கினர். அவர்களுக்கு விஷயம் புரிந்து விட்டது. நேரமும் காலமும் குறித்துக்கொண்டு திடீர்த் தாக்குதல் செய்யக் காவல்துறையின் உயர்மட்டத்து அதிகாரியே சில போலீஸ்காரர்களுடன் ரெய்ட் செய்ய வந்துவிட்டிருந்தார். காவல்துறை அதிகாரிகள் அவர்கள் அனை

MITHRAVINTHA

வரையும் போலீஸ் வானில் ஏற்றி அந்த இரவே அரசினர் மகளிர் காப்பகத்திற்குக் கொண்டுவந்து பாதுகாப்பாக விட்டுப் போயினர்.

மறுநாள் காலை அவர்கள் அனைவரும் விபசாரம் செய்த குற்றத்திற்காக எழும்பூர் நீதிமன்றத்தில் நீதிபதி முன்னர் ஆஜர் ஆகவேண்டும். அவர்களது குற்றங்கள் விசாரிக்கப்படும் என்று புரிந்தது.

யாமினிக்கு அவமானம் தாங்க முடியவில்லை. இந்தச் சங்கதி அப்பாவின் காதில் பட்டால்? ஊரில் நாலுபேர் மத்தியில் தலைநிமிர முடியாது வெட்கத்தில் உயிரை விட்டுடுவாரே?

பெண்ணைக் காணவில்லை என்று இத்தனை நேரம் அவள் அப்பா எப்படித் துடித்துக் கொண்டிருப்பார்? செய்தியைக் கேள்விப்பட்டு ஊர் அமர்க்களப்பட்டுப் போயிருக்கும்!

பெரிய தனக்காரர் மகள் ஓடிவிட்டாளாமே? நகைநட்டுகளுடன் எவனோ பட்டணத்துக்காரனுடன் சினிமாவில் நடிக்கப் போயிட்டாளோ என்னவோ? வாய் ஓயாது கதைகள் பறக்கும். ஊர் இரண்டுபடும். அப்பா அவமானத்தில் குன்றிப்போய் வீட்டிற்குள் முடங்கிக் கிடப்பார். பலவும் எண்ணி அவள் படுத்துக் கொண்டிருந்தபோது ருக்மணி அம்மாள் தொந்திரவு செய்யத் தொடங்கினாள்.

"பத்திரம். நாளை கோர்ட்டில் வந்து எதுவும் உளறினாயோ என் வீட்டில் வைத்திருக்கும் உன் பெட்டி, உன் கழுத்து சங்கிலி, கை வளையல்கள் ஒன்றையும் நான் தர மாட்டேன். நீதிபதி கேட்டால் நீ என் தங்கை, என்னோட கூட தங்கியிருக்கிறாய்னு சொல்லணும். இல்லாட்டி நீதிபதி உன்னை ஜெயிலில் போட்டு விடுவார். ஜாக்கிரதை," பயமுறுத்தினாள்.



அரசினர் மகளிர் காப்பகத்திலிருக்கிறோம், ருக்மணிக்கு ஏன் பயப்படவேண்டும்? உயிர் போனாலும் சரி. இனி இவளுடைய வலையில் சிக்கப்போவதில்லை. ஆபத்துக்களைத் தானே தேடிக்கொண்டாயிற்று. அதன் பலன் சிறைவாசம் என்றால் அனுபவிக்க வேண்டியது தான். திரும்ப ருக்மணி வீட்டுக்குப் போவதைவிட ஜெயில் மேல் என்றவரை திடமாக இருந்தாள் யாமினி.

மறுநாள் காலை போலீசார் அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லுமுன் காப்பகத் தலைவி விடுதியின் சொந்தக்காரியென்று சொல்லப்பட்ட ருக்மணியையும் விபச்சாரத்தில் ஈடுபட்டு வாழ்ந்ததாகக் கருதப்பட்ட யாமினியையும் அழைத்து விசாரித்தார்.

யாமினி தன் தங்கை. தன் ஆதரவில் இருக்கிறவள் என்று ஒரேயடியாகப் பொய் சொன்னாள் ருக்மணி.

யாமினி ஒரேயடியாக, பயமின்றி மறுத்தாள். 'நேற்றுக் காலைதான் கிராமத்திலிருந்து ஒருவரை நம்பிப் பட்டணம் வந்தேன். மூன்று முரடர்கள் என்னைக் கடத்திக் கொண்டு வந்து இவளிடம் பணத்திற்கு விற்றார்கள். என்னை ஈனத் தொழிலில் பலவந்தப்படுத்த முயலும் முதல் நாளே போலீஸ் ரெய்ட் நடந்தது. நான் தப்பினேன். நான் தவறு ஏதும் செய்யாது இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டவள்" என்று விசும்பிக் கொண்டே பூரா விவரத்தையும் தலைவியிடம் தனிமையில் சொன்னாள்.

"அம்மா? தாய் போல இருக்கிறீங்க, என்னைக் காப்பாத்துங்க...இனி ஜென்மத்தில் நான் காதல் என்கிற வார்த்தையை வாயால்கூட உச்சரிக்கமாட்டேன். போதும் இந்த அனுபவம்" என்று அழுதாள்.

நீதிமன்றத்தில் ருக்மணி அதே பொய்யைத் திரும்பவும் சொன்னாள். இந்தப் பெண் என் சகோதரி. என்னோட தங்கியிருக்கிறவ. அதனால் நீதிபதி அவர்கள் இவளை

MITHRAVINTHA

என் பாதுகாப்பில் அனுப்பி வைக்கணும். மிகவும் குறைவாகக் கேட்டுக் கொண்டாள்.

நீதிபதி யாமினியை விசாரித்தபோது கதை வேறாக இருந்தது.

''நீதிபதி அவர்களே, நான் ஒரு படித்த பெண். காதலன் என்று ஒரு காதகனை நம்பிப் பட்டணத்தில் வந்து இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டேன். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் என்னைத் தங்கள் முன் ஒரு அசிங்கமான குற்றவாளியாகக் கொண்டு நிறுத்தியிருக்கு. எனக்கும் இந்த ருக்மணி அம்மாளுக்கும் உறவே இல்லை. இருபத்து நான்கு மணி நேரத்திற்கு முன்னர் இவளை எனக்குக் கனவில் கூடத் தெரியாது. இவள் சொல்வதெல்லாம் பொய் நீதிபதி அவர்களே. எனக்குக் கருணை காட்டுங்கள். என்னைத் தண்டிக்க விரும்பினால் சிறைவாசம் கொடுங்கள். இவளுடன் அனுப்பாதீர்கள்.'' விம்மலும் திணறலுமாக அழுதாள்.

ஆரம்ப விசாரிப்புக்குப் பின்னர் மறுபடி அவர்கள் ரிமாண்டில் பதினைந்து நாட்கள் காப்பகத்தில் வைக்கப் பட்டனர்.

அது சமயத்தான் தலைவி யாமினியின் தந்தை தணிகைவேலுக்கு நடந்த அனைத்தையும் விவரித்துக் கடிதம் எழுதிப் போட்டார். சில நாட்களுக்குப் பின் தணிகைவேலிடமிருந்து தலைவிக்கு ஒரு கடிதம் வந்தது.

''தங்கள் கடிதத்தைப் படித்த பின்னர் யாமினியை என் மகள் என்று சொல்லிக் கொள்வதைவிட இறந்து போய் விட்டதாகக் கருதுவது மேல் என்று நினைக்கிறேன். ஆமாம், இன்றோடு என் மகள் இறந்துவிட்டாள்.''

தணிகைவேல் அப்படித் தமது உறவைத் துண்டித்துக் கொண்டு விட்டாலும் கோர்ட்டார் அவரைக் சும்மா விடுவதற்கில்லை.



அப்பா என்கிற உறவில் அவரும் வரவேண்டியிருந்தது. நீதிபதி அவரையும் விசாரிக்கவேண்டியிருந்தது.

நீதிமன்றத்தின் வாயிலில் போலீஸ் வானிலிருந்து இறங்கிய மகளைப் பார்த்தார் தணிகைவேல். அவர் கண்கள் நெருப்பாகின. அப்பாவின் முகத்தைப் பார்க்க முடியாது அவமானத்துடன் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் மகள்.

''உங்கள் பெண்ணைப் பொறுப்புடன் கவனித்துக் கொள்ள நீங்கள் ஒப்புதல் கொடுக்கிறீர்களா?'' நீதிபதி கனிவுடன் கேட்டார்.

தணிகைவேல் கோபத்திலே பொங்கிப் போனார்.

''வீட்டைவிட்டு ஓடி விபச்சார விடுதியில் இருந்தாள் என்கிற செய்தி ஊரில் தெரிந்தால் என் மானம் போகும். இந்தப் பெண் என்வரை செத்துவிட்டாள். இவள் பொறுப்பை நான் ஏற்க முடியாது.'' உறுதியாக மறுத்து விட்டார்.

நீதியின் நிழலில் நின்ற பெண்ணை அப்பா செத்து விட்டதாக ஒதுக்கிக் கைவிட்டுவிட்டார். விம்மி விம்மி அழுதுகொண்டு நின்ற மகளிடம் பேசப் பிடிக்காது தமது விசாரணை முடிந்ததும் வெளியே போய்விட்டார். அது தான் அவள் தணிகைவேலைக் கடைசியாகப் பார்த்தது.

தந்தை பொறுப்பேற்க மறுத்ததால் நீதிபதி அவளை மகளிர் காப்பகத்தின் பாதுகாப்பில் ஐந்து ஆண்டுகள் இருக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கி விட்டார்.

விளக்கைப் பழமென்று நினைத்து விரலைச் சுட்டுக் கொண்டுவிட்ட குழந்தையைப்போல, இளமை உணர்வுகளின் தூண்டுதலால் முதல் முதலாகச் சந்தித்துப் பேசிய இளைஞனைக் காதலிப்பதாகத் தன் கவர்ச்சி உணர்வைத் தவறாகப் புரிந்து கொண்டு அவள் தனக்கே தீங்கு தேடிக் கொண்டு விட்டாள்.

MITHRAVINTHA

அவளது வெகுளி மனப்போக்கையும் அனுபவமில்லாத தன்மையையும் தனக்குச் சாதகமாக உபயோகித்துக்கொண்டு அவளது உடமைகளையும் பணத்தையும் திருடிக்கொண்டு ஓடிய அயோக்கியன் நாகசுந்தரத்திற்கு சட்டம் தண்டனை ஏதும் அளிக்கவில்லை.

ரெயிலடியில் அவளைக் கடத்திச் சென்று ருக்மணியம்மாவிடம் ஈனத் தொழில் செய்ய விற்ற அந்த மூன்று பாதகர்களும் சட்டத்தின் பிடியில் அகப்படாது சுதந்திரமாக சுகமாகத் தொடர்ந்து இன்னும் பல குற்றங்களைச் செய்துகொண்டு வாழ்கிறார்கள்.

சமூகம் அவர்களைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கவேயில்லை. அவளது பெண்மைக்கு விலை பேசிக்கொண்டு வந்த அந்த இரட்டை நாடி சில்க் ஜிப்பாக்காரனைச் சட்டம் தேடவேயில்லை. இன்னும் எந்தெந்தப் பெண்களின் கற்பை அவன் சூறையாடிக் கொண்டிருக்கிறானோ? கடவுள்தான் அறிவார்.

இத்தனை ஆபத்திலும் தெய்வாதீனமாகப் பெண்மை அழியாது தப்பிவிட்ட அவளை—அவள் சொன்னதைத் தலைவி எத்தனை முறை எடுத்துச் சொல்லியும் அப்பா நம்ப மறுத்தார். அவள் தவறு செய்து விட்டதாக எண்ணி அவமானப்பட்டார். பெண்மையழிந்து போன பெண் தனக்கு வேண்டாம் என்று உதறிவிட்டார். சமூகம்?

பெற்றவனே உதறிவிட்ட பெண்ணைச் சமூகம் மன்னித்து ஏற்குமா?

"எத்தனைதான் அவள் சொன்னாலும் யார் நம்பப் போகிறார்கள்?

அவள் கறைபட்டவள், பெண்மை இழந்தவள், நடத்தை கெட்டவள் என்ற முத்திரை குத்தப்பட்டவள்.

யாமினி அதே காப்பகத்திற்கு வந்து வருஷங்கள் ஐந்தாகின்றன. இன்னும் சில நாட்களில் அவளது தண்ட



னைக் காலம் முடிவு பெற்றுவிடும். ஆனால் என்ன? தொடர்ந்து அவள் அங்கேயே தலைவியின் உத்தரவின் பேரில் சுயேச்சையான நிலையில் தங்கத் திட்டமிட்டிருக்கிறாள். தையல் ஆசிரியையாகப் பணியாற்றி அதில் வரும் சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையைச் சாப்பாட்டிற்கும் தங்குவதற்கும் தந்து விட்டு வழுக்கி விழுந்தவர்கள் என்று சமூகத்தினரால் ஒதுக்கப்பட்ட அபலைகளோடு அவளும் ஒருத்தியாகக் கடைசிவரை காலத்தை ஓட்டுவது என்று தீர்மானம்.

மூச்சுவிடாது யாமினி பேசியதைக் கேட்டுக்கொண்டே மௌனமாக அமர்ந்திருந்தான் பரதன்.

"காதல் என்ற கானல்நீரை நம்பிக்கொண்டு ஊரை விட்டுப் புறப்படுமுன் நான் உள்ளத்தளவில் ஒரு பச்சைக் குழந்தையாக இருந்தேன்."

"ஆனால் டாக்டர் பரதன்! இருபத்து நான்கு மணி நேரத்தில் தொடர்ந்து ஏற்பட்ட அனுபவத்தின் அதிர்ச்சியில் நான் ஒரேநாளில் உலக அனுபவங்கள் எல்லாம் அறிந்துவிட்ட முதிர்ச்சியடைந்த ஒரு பெண்ணாக வளர்ந்து மாறிப்போனேன். எத்தனையோ இரவு அப்பாவை நினைத்து ஆரம்பத்தில் நான் அழுதிருக்கிறேன். மனம் வெடிக்க, கடந்த காலத்தை எண்ணி உருகி விசும்பிக் கண்ணீரைத் தாரையாகப் பெருக்கியிருக்கேன். என் தவறுக்காக மானசீகமாக அவரிடம் ஆயிரம்முறை மன்னிப்புக் கோரியிருக்கிறேன்."

"டாக்டர் பரதன்! ஓரளவு என் தந்தையோடு நீங்க பழகியிருக்கீங்க. அதனாலே உங்ககிட்ட சொல்லணும்னு தோணுது."

"இந்த வெறுப்பு—இந்தப் பகை—எல்லாம் வெளியோடு சரி. அப்பா எப்படி என்னையே நினைச்சு உருகிப் போகிறாரோ அதுபோல என் உள்மனம் அவரையே நினைச்சு புலம்பிக்கிட்டிருந்ததை நேத்துத்தான் புரிஞ்சுக்கிட்டேன்.

MITHRAVINTHA

''அவர் கிட்ட நான் பேச ஓடிவந்தப்போ அப்பா இறந்து போய்விட்டது போல ஒரு கனவு கண்டு நான் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன். தாங்க முடியாத துக்கத்திலே கட்டுப்படுத்த முடியாது கதறி அழுதேன்.

''இத்தனை நானாக அடக்கி வச்சுக் கொண்டிருந்ததைக் கொட்டியழுதிட்டேன்.

''டாக்டர் பரதன். நானே இன்னமும் என் தந்தையை நேசிக்கிறேன் என்கிற உண்மை நேற்றுத்தான் எனக்கே விளங்கிச்சு. உடனே இன்னிக்குக் காலை உங்களுக்கு போன் செய்யச் சொன்னேன்.

''என் கதையைக் கேட்டீங்க...என்னைப் பத்தி நீங்களே கணிப்பு செய்துக்கலாம். நான் புறப்படத் தயாரா இருக்கேன். தலைவி என்கூடக் காப்பகத்திலிருந்து ஒரு மேற்பார்வையாளரைக் கூடத் துணையாக அனுப்பு வாங்க. அதுதான் முறை.

''டாக்ஸியில் போவோம். இனி தாமதம் செய்கிறது நல்லதில்லைன்னு தோணுது—இதோ ஒரு நொடியில் வரேன்'' என்று சொல்லிவிட்டு அலுவலகம் இருந்த திசையை நோக்கி விரைந்தாள்.

சிறிது பொழுதில் அவள் தலைவியின் உத்தரவுடன் தன் சீருடையை மாற்றிவிட்டுத் தன் பெட்டியிலிருந்த ஒரு கைத்தறி நூல் சேலையை எடுத்தணிந்து கொண்டு வந்தாள்.

ரோஜா வண்ண நூல் சேலையில் அவள்... அன்றலர்ந்த ரோஜா மலர் போல அழகாகக் காணப் படுவதை வியப்புடன் பார்த்தான் பரதன்.

துணைக்கு வந்த பெண்மணியை—வரப்வேற்பறையில் விட்டுவிட்டு...பரதனும் அவளும் மட்டும் தீவிரக் கவனிப்புப் பகுதியிலிருந்த தணிகையைக் காண நர்ஸிங் ஹோமுக்குள் விரைந்தனர்.



தலைவர் டாக்டர் பூபதியிடம் உத்திரவு வாங்கிக் கொண்டுதான் பரதன்...செயல்பட்டான்.

கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்ற போது...தணிகை—நல்ல நினைவுடன் தான் இருந்தார். காலடி ஓசை கேட்டு விழித்துப் பார்த்தார்.

''டாக்டர் பரதன்— யாமினி வரமாட்டேன்னு சொன்னாளா? உண்மையை என்கிட்டே சொல்ல இனி என்ன தயக்கம்?''...மூச்சுமுட்டக் கேட்டார்!

பரதன் நோயாளி அருகில் நெருங்கி மெல்ல அவர் தோளைத் தட்டினான். ''இப்போ நீங்க உணர்ச்சி வசப் படாம, கொஞ்சம் பொறுமையா இருங்கோ உங்க மகளை உள்ளே வரச் சொல்றேன்...'' ஆதரவாக அன்பாக மெல்ல அவருக்கு மட்டும் கேட்கும் குரலில் சொன்னான்.

உள்ளேயிருந்த நர்ஸுக்குச் சைகை செய்து அப்பால் போகச்செய்து விட்டு வெளியே வராந்தாவில் மெய்பதறிக் கொண்டு திகிலும் துயரமுமாக நின்று கொண்டிருந்த யாமினியை அழைத்தான்.

''கத்தி—கூச்சலிட்டு அழுது அப்பாவுக்கு அதிர்ச்சி ஏதும் ஏற்படுத்தாம அமைதியா மெள்ள பேசுங்கோ'' என்று எச்சரித்தபடி கண்ணாடிக் கதவைத் திறந்து விட்டான்.

''டாக்டர் நீங்களும் பக்கத்தில் இருங்கோ. எனக்கு பயமா இருக்கு'' கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள் யாமினி.

''டாக்டர் பரதன்...என்னோட இத்தனை நாளா பல தடவை கூடவே இருந்து பேசி ஆறுதல் சொல்லிட்டு—இப்போ ஏன் வெளியிலே போறீங்க. வாங்க—மகளோடு நான் பேசறதுக்குச் சாட்சியா சித்த இருங்கோ'' திணறிய படி—கைகளை அசைத்து அழைத்தார் தணிகை.

தந்தையும் மகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பேச முடியாத துக்கம் தொண்டையடைக்க



MITHRAVINTHA

மாலையாகக் கண்ணீர் கன்னத்தில் வழிந்தோட மகள் விரைந்துவந்து தணிகையின் கட்டில் அருகே மண்டியிட்ட படி உட்கார்ந்து கொண்டாள்.

அவரது தாடைமேல் ஓடிய கண்ணீரை முந்தானை யால் துடைத்தாள். தனது கண்ணீரையும் துடைத்துத் துயரத்தைச் சமாளித்துக் கொண்டாள்.

"அப்பா! இது நீங்க கைத்தறி எக்ஸிபிஷனிலே எனக்கு வாங்கிக் கொடுத்த புடவை. இத்தனை காலமா பத்திரமா வச்சுக் கொண்டிருந்தேன். இதைக் கட்டிட்டு உங்களைப் பார்க்க வந்திருக்கேன். இதைப் பத்திரமா வச்சுக் கொண் டிருந்ததுபோல என் மனதையும் உடலையும் பத்திரமா, தாய்மையா வச்சுக்கிட்டிருக்கேன் அப்பா. அன்னிக்குத் தலைவி என்னைப்பத்தி உங்ககிட்ட சொன்னது அத்தனை யும் உண்மை. நம்புங்க அப்பா. நான் தவறு செய்துட் டேன். ஆனால் ஒழுக்கம் கெட்டவ இல்லையப்பா." உணர்ச்சிக் கொந்தளிப்பில் குரல் நடுங்க—கண்ணீரில் கண்கள் பார்வையை மறைக்க மெல்ல விம்மினாள் மகள்...

தணிகை தனது மெலிந்த கரத்தை மெல்ல நீட்டி அவள் தலையை வருடினார். "என்னை மன்னிச்சுட் டேன்னு—ஒரு வார்த்தை சொல்லுங்கப்பா. கேட்கத் துடிக்கிறேன்" விசும்பியபடி மகள் தந்தையின் கரத்தைத் தன் கன்னத்திலே வைத்துக் கொண்டாள்.

"மன்னிச்சுட்டேன் குழந்தே...என் கண்ணே யாமினி. உன்னை மன்னிச்சுட்டேன்...அதேபோல நீயும் என்னை மன்னிச்சுட்டதாக ஒரு வார்த்தை சொல்லும்மா."

"நீ அந்த பயங்கரச் சூழ்நிலையிலும் களங்கப்படாமல் தப்பினாய் என்கிறதை நம்புகிறேன். சாகப்போகிறவன் கிட்ட நீ பொய் சொல்லமாட்டாய் என்பதால் நீ தாய்மை யானவள்தான் என்பதை நான் இறுதியாக நம்பறேன். ஆனால் நான் உனக்குச் செய்தது பெரிய குற்றம். தவறு செய்து நீ பெண்மையழிந்து களங்கப்பட்டவளாக இருந்



தாலும் பெற்றவன் என்ற முறையிலே உன்னை நான் மன்னிக்காம கைவிட்டது மாபெரும் குற்றம். தந்தை தான் பெற்ற மகளை மன்னிக்காட்டா சமூகம் எப்படி யம்மா மன்னிக்கும்? சமூகத்திலே ஒரு அங்கமான பெத்தவன் உன்னை உதறிவிட்டேன். சமூகம் உன்னை உதறிவிட்டுடுச்சு. என் தப்பை மன்னிச்சுடு. ஈடுசெய்ய நினைக்கிறேன். நேரமும் காலமும் தவறிடுச்சு.

"யாமினி, என் செல்ல மகளே!" மெழலர் நாத்தடுமாற மூச்சு திணற ஒவ்வொரு வார்த்தையையும் மெள்ளத் தட்டு தடுமாறிச் சொல்லி முடித்தார்.

"அப்பா!..." என்று மகள் தந்தையை இறுக்கக் கட்டிக்கொண்டாள். அழுகையில் குலுங்கிய அவளது பிடியின்று தணிகையை மெல்ல விடுவித்துப் படுக்கையில் சாயவிட்டாள்.

"மிஸ் யாமினி! இப்படி அழுதுவிட்டு அவரை அதிகம் உணர்ச்சி வசப்படவிடக்கூடாது. அவரது உடல் நிலை ரொம்ப பலவீனமாக இருக்கு. தலைவருக்குத் தெரிந்தா கோவிச்சுக்குவார்." அன்புடன் கடிந்து கொண்டாள்.

தணிகைவேல் மகளை ஜாடை செய்து அருகில் அழைத்தார். பக்கத்தில் மேஜை மீது அன்று குப்புறப் போட்ட நிலையிலிருந்த திருவாசகப் புத்தகத்தைச் சுட்டிக் காட்டினார்.

யாமினி புரிந்துகொண்டு சட்டென்று அதை எடுத் தாள்.

"பாரோடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே—" என்று ஆரம்பித்த மெல்லிய இனிய குரலால்—மாணிக்க வாசகர் அருளிய வாழாப்பத்தைப் பாடிக்கொண்டே மெய்மறந்து நின்றாள். இனிய அவளது குரலும் உணர்ச்சி ததும்பிய வார்த்தைகளின் உச்சரிப்பும்— பரதனின் மனதைத் தொட்டன. அவன் நெஞ்சுருகிப்போய்க் கண்

MITHRAVINTHA

களை மூடிக்கொண்டு கேட்டபடி ஒரு பக்கம் நின்று கொண்டிருந்தான்.

தணிகைவேலின் முகத்திலே அமைதி நிலவியது—கண்களில் பரவசமானதொரு ஒளி தெரிந்தது.

''தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவெனோ சொல்லாய்...
மழுவிடையானே வாழ்கிலேன் கண்டாய், வருக
வென்றருள் புரியாயே''

என்று முடித்துவிட்டு— ''திருச்சிற்றம்பலம்'' என்றபடி கண்களைத் திறந்து பார்த்தான்.

''அப்பா'' என்று மெல்லக் கூப்பிட்ட மகள் திடுக்கிட்டுப் போனாள்.

வானுலகைப் பார்த்துக்கொண்டு வருக என்று சிவன் அழைத்ததை ஏற்றுக்கொண்டு விட்டது போன்று விழித்த நிலையில்—தணிகைவேலின் உயிர் மிக அமைதியாகப் பிரிந்துவிட்டிருந்தது.

''அப்பா''—என்று கூவிய யாமினியை அடக்கிவிட்டு—விழித்திருந்த கண்களை மூடினான் பரதன்.

ஒரு நல்லதொரு நண்பரைப் பிரிந்துவிட்ட துயரத்தில் அவன் நெஞ்சு துக்கத்தில் இறுகியது.

தந்தையின் பாதங்களில் முகத்தை வைத்துக்கொண்டு ஓசைப்படாது—கண்ணீரில் கைகளைக் குளிப்பாட்டிக்கொண்டு அழுகையில் குலுங்கிய மகளைச் சில நிமிடங்களில் தனியே இருக்க அனுமதித்து விட்டு—மெள்ளக் கதவை மூடிக்கொண்டு வராந்தா ஓரத்தில் வந்து நின்றான் பரதன்.

முப்பத்து மூன்றாம் அறை நோயாளியுடன் அவனது தொடர்பு அறுந்து போன ஒரு வெறுமை உணர்வில் மனம் சோகத்தில் நிறைந்து நிற்க, கீழ் உதட்டைக்



கடித்துக் கொண்டு கைகளை மடக்கிக்கொண்டு செயலற்றவன் போல நின்றான்.

எத்தனையோ மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன—கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன...

மரணத்தை வெல்லும் மருந்தை—யாரும் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. மரணமில்லா வாழ்க்கையை மனிதன் அடைந்துவிட்டால்? மனம் தத்துவங்களை அலசிக் கொண்டிருக்க, மவுனமாக, திறந்த வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''டாக்டர் பரதன்! மிஸ்டர் தணிகைவேல் இன்று எப்படி இருக்கார்?'' கேட்டபடி வந்தார் ரெஸிடெண்ட் டாக்டர்—

''தணிகைவேல் என்ற மனிதர் மறைந்து மூன்று நிமிஷங்கள் ஆகின்றன. உடலை...அப்புறப்படுத்த டெத் சர்டிபிகேட் கொடுக்கத் தலைவர் வருகைக்காகக் காத்திருக்கிறேன்'' என்றான் விரக்தியுடன்.

## 11

கடுமையான இரவுப் பணிக்குப்பின் வழக்கம்போல இருள் பிரியுமுன் பரதன் வீடு திரும்பிவிட்டிருந்தான்.

அன்று காலை மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை கேஸ்கள் அதிகம் இருக்கவில்லை.

இருந்த இரண்டு கேஸ்களையும் தாமே கவனிக்கப் போவதாகவும், அதனால் அன்று முழுவதும் ஓய்வு எடுத்துக்கொண்டு மறு நாள் காலை பரதன் வேலைக்கு வந்தால் போதும் என்று சலுகை வழங்கியிருந்தார் ரெஸிடெண்ட் டாக்டர்.

MITHRAVINTHA

அவசரமாக உடைகளை களைந்துவிட்டு லுங்கியில் புகுந்து கொண்டவன் தொப்பென்று படுக்கையில் சாய்ந்து விட்டான். அப்படி ஒரு அயர்ச்சி.

"தம்பி எழுந்திருக்கலையா?" லேசாகத் தாயம்மான் கதவைத் தட்டினான்.

திடுக்கிட்டு விழித்தபொழுது காலை பத்து மணியாகிக் கொண்டிருப்பதை மேஜைக் கடிகாரம் தெரிவித்தது.

தலைதெறிக்கக் குளியலறைக்கு ஓடினான். வயதான காலத்தில் தாயம்மானைக் காப்பி பலகாரத்துடன் காக்க வைப்பது முறையல்லவே.

"ரவா உப்புமாவும் தொட்டுக்கப் புதினா சட்டினியும் செய்திருக்கேன். நேரம் கழிச்சு எழுந்திருப்பேன்னு தெரிஞ்சு இப்பத்தான் உப்புமாவை அடுப்பிலிருந்து இறக்கினேன். நல்லா சாப்பிடு. கொஞ்சநாளா உன் உடம்பு கூட இளைச்சுப் போச்சு." தாயம்மான் பெற்ற தாயைப் போல் பரிவுடன் பேசிக்கொண்டு பரிமாறினான்.

மின்விசிறி எழுப்பிய காற்றில் சுவரில் தொங்கிய காலெண்டர் படபடத்தது. சாப்பிடுவதினின்றும் அவன் நிமிர்ந்து அதைப் பார்ப்பதைக் கண்ணுற்றான் தாயம்மான்.

"இறந்தவங்களுக்கு நாள் இறக்கை கட்டிகிட்டுப் பறக்கும் என்பாங்க. இப்பத்தான் போல இருக்கு, அந்தக் கிழவர் போய் ஒரு மாசமாகுதே...?" காப்பி டம்ளரை அருகில் வைத்துவிட்டு...பகல் சமையலைக் கவனிக்க உள்ளே சென்று விட்டான்.

அவன் கூறியது முற்றிலும் உண்மை. தணிகைவேல் மறைந்து நாட்கள் வேகமாக நகர்ந்து மாதம் ஒன்று முடிந்துவிட்டிருந்தது.



அந்த முப்பத்து மூன்றாம் அறைக்குள் அதற்குள் மூன்று நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பி விட்டனர். ஆனாலும் வராந்தாவில் நடக்கும்போது அந்த அறை வாசலைக் கடக்கையில் அவன் மனதில் வெறுமை உணர்வு வேதனை செய்தது. மருத்துவமனையை இரண்டு படுத்திக்கொண்டு—முரட்டுக் கிழம் என்ற பெயருடன் அவனது அன்பையெல்லாம் கவர்ந்து கொண்டு விட்டிருந்த தணிகையின் இழப்பு அவனுக்கு மாபெரும் இழப்பாக மனதை வேதனை செய்தது.

தணிகை இறந்த அன்று அவன் சிறிது நேரத்தில் ஒரு முடிவுக்கு வந்துவிட்டிருந்தான்.

மகன் துரோகமிழைத்து விட்டதாக மனம் கொதித்துப் போய்த் தணிகைவேல் தமது வீடு நிலம் எல்லாவற்றையும் துறந்து அனாதைபோல மருத்துவமனையே கதியென்று வந்துவிட்டார். இறந்தபோது அனாதையாகத் தமது இறுதி யாத்திரையை அந்த மருத்துவமனையிலிருந்தா துவங்குவது. இல்லை, இல்லை. நண்பனாக நெருக்கமாக உறவினன் போல பாசத்துடன் பரதன் பழகினானே, அவன் ஒருவன் இருக்கும்போது தணிகை அனாதையல்ல.

அவரது வக்கீல் அதுசமயம் ஊரில் இருக்கவில்லை. தமது மகனைப் பார்க்க மூன்று வார காலத்திற்கு அமெரிக்காவுக்குப் பறந்து விட்டிருந்தார். மருத்துவமனைக்குக் கட்டவேண்டிய தொகைக்கு உண்டான பில்லை வக்கீலின் அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டு, அதை வசூலித்துத் தருவது தனது பொறுப்பு என்று தலைவர் டாக்டர் பூபதிக்கு உத்திரவாதம் அளித்துவிட்டு, தணிகையின் உடலை அவன் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான்.

அக்கம் பக்கத்தவர்கள் அவனது உறவுக்காரர் போலும் என்று எண்ணிக் கொண்டனர்.

"தாயம்மா, எனக்கு வேண்டியவங்க—சொந்தக் காரங்க வெளிநாட்டிலே இருக்காங்க. அதனாலே இந்தப்

MITHRAVINTHA

பொறுப்பு என் மேலே விழுந்திடுச்சு,'' கருக்கமாகக் கூறி அவன் வாயை அடைத்துவிட்டான்.

காப்பகத்துத் தலைவியின் உத்திரவுடன், துணைக்கு ஒரு பெண்ணுடன் தன் தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வந்திருந்த யாமினியைமட்டும் தாயம்மாளுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

''பெரியவரோட மகள்—இங்கே வேலை பார்க்குது—ஹாஸ்டலில் தங்கியிருக்கு.''

''ஐயோ, பாவமே''—தாயம்மாள் அங்கலாய்த்தாள். எல்லோருக்கும் சேர்த்துப் பெருங்குரலில் தனிகைக்காக ஒரு பாட்டம் அழுது தீர்த்தாள்.

இறுதிச் சடங்கில் எந்தக் குறைவுமின்றி—தனிகை இடுகாடு போய்ச் சேர்ந்துவிட்டார்.

தன் செலவில் அவர் இறந்த பதினாறாவது நாள் அருகிலிருந்த கோயிலில் மோட்ச விளக்கேற்றி வைத்து அனாதை இல்லத்திற்கு உணவளித்துத் தன் கடமைகளை முடித்துக் கொண்டான் பரதன்.

கோயிலுக்கு வந்திருந்த யாமினி அவனிடம் விடை பெற்றபோது நெஞ்சுருகி நன்றிப் பெருக்கில் கண்கள் கலங்கச் சொன்னாள்:

''டாக்டர் பரதன்! உங்களுக்கு எப்படி நன்றி சொல்லறதுன்னு தெரியலை. அப்பாவையும், என்னையும் சந்திக்கச் செய்து ரெண்டுபேர் மனதிலும் அமைதியைத் தேடிக் கொடுத்திருக்க. நான் ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன். வரேன்,'' கைகுவித்து வணங்கினாள்.

அதற்குப்பின் அவன் அவளைச் சந்திக்க முயலவில்லை. அவளது தந்தையின் இழப்பைச் சாதகமாக வைத்துக் கொண்டு அவளைத் தேடிக்கொண்டு காப்பகத்திற்குச் செல்வது முறையல்ல—கண்யமான செய்கையல்ல.



ஆனாலும் ஏனோ அவனுக்கு அவளை மீண்டும் ஒரு முறை பார்த்துப் பேசவேண்டுமென்றதொரு அழுத்தமான விருப்பம். கள்ளம் கபடமற்ற ஒரு பெண். அனாவசியமாக ஆபத்தில் சிக்கித் தண்டனைக்குள்ளாகி—தலை குனிய நேரிட்டதென்பதினால் ஏற்பட்ட இரக்கமா அது, அல்லது?

''சட்டினியைக் கொஞ்சம் காரமா அரைச்சுட்டேன்... அடடா, பொறைக்கேறிக் கொண்டுட்டதே? தம்பி... சட்டுனு ஒரு வாய் தண்ணி குடிச்சுக்கோ''... தாயம்மாள் பதறிக்கொண்டு ஓடி வந்து தண்ணீர் டம்ளரை அருகில் நகர்த்தி வைத்தாள்.

''யாராச்சும் உன்னை நினைச்சுக்கிட்டிருப்பாங்க... பாத்தியா சொல்ல மறந்துட்டேன். நேத்து சாயங்காலம் வந்த தபால்களை உனக்குக் கொடுக்க மறந்திட்டேனே?'' முன்னறையில் புத்தக அலமாரியின் ஒரு தட்டில் பத்திரமாக வைத்திருந்த கடிதங்களை எடுத்துக் கொண்டு விரைந்து வந்தாள் தாயம்மாள்.

தண்ணீரைக் குடித்துத் தலையைத் தானே தட்டிக் கொண்டு எழுந்து சென்று கையைக் கழுவிவிட்டு வந்தான் பரதன்.

காப்பியைக் குடித்துக்கொண்டே மேலே இருந்த கடிதத்தை எடுத்தான். அது ஒரு திருமண அழைப்பிதழ்.

யார் அனுப்பியிருப்பார்கள், யாருக்குத் திருமணம்? ஆவலுடன் எடுத்து உறைக்குள்ளிருந்த அழைப்பிதழை இழுத்துப் படித்தான். முகம் சுருங்கிப் போனான்.

''கல்யாணக் கடிதாசி போலிருக்கே'' தாயம்மாள் ஆவலில் தவித்தாள்.

''ஆமாம் பெங்களூர் மாமா மகள் நளினிக்குக் கல்யாணமாம்—''

MITHRAVINTHA

"பாத்தியா நான் சொல்லலை. உன்னை யாரோ நினைக்கிறாங்க பொரைக்கு ஏறிக்கிச்சுனு." சிரித்தபடி அவன் உள்ளே சென்று விட்டான்.

மாமா அவனை நினைக்கவில்லை. அவனுக்குத் தான் ஜெயித்துவிட்டதைக் காட்டத்தான் அந்த அழைப்பிதழை வேண்டுமென்றே கல்யாணம் ஆனபிறகு அனுப்பியிருக்கிறார்.

"நீ ஒருத்தன்தான் இந்த உலகத்திலேயே ஒரு நல்லவரனோ? பார் என் மகளுக்குக் கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்திவிட்டேனே" என்று சொல்லாமல் சொல்லிய அந்த அழைப்பிதழில் மாப்பிள்ளையின் பெயரைப் படித்தான். ராமசாமி எம். ஏ. என்று காணப்பட்டது. ரங்கன் என்று அடைப்புக்குள் சுருக்கமாக விளக்கம் தெரிந்தது.

போகட்டும். நளினிக்கு மனம்போல் மாங்கல்யம் அமைந்தது நல்லதாகிவிட்டது. அவர்கள் இருவரும் நீண்ட காலம் பல நலன்களுடன் வாழட்டும். தனக்குள்ளே வாழ்த்திவிட்டு அடுத்ததாக இருந்த கடிதத்தைக் கையில் எடுத்தான்.

உள்ளூரிலிருந்து எழுதப்பட்ட கடிதம்...முகவரி அடிக்கப்பட்டிருந்தது. சரவணன், சிவகெங்கா பில்டிங்ஸ், என் எழுபது...சூரப்ப நாயக்கன் தெரு...சென்னை ஒன்று...

யார் இந்தச் சரவணன்? மண்டையைக் குழப்பிக் கொண்டு கடித உறையைப் பிரித்தான்.

முதல் சில வரிகளைப் படித்தவுடன் விளங்கிவிட்டது.

திரு. சரவணன்தான் தணிகைவேலின் வக்கீல் என்ற நினைவு வரலே அவசரமாகப் படித்தான்.

"அன்புள்ள டாக்டர் பரதன் அவர்களுக்கு. வணக்கம் பல. தணிகைவேலின் மறைவு குறித்து மிக்க வருந்துகிறேன். டாக்டர் பூபதியிடம் நான் வெளிநாடு செல்



வதைப் பற்றித் தெரிவித்து விட்டுத்தான் கிளம்பியிருந்தேன். அவர் எனக்கு கடிதம் போட்டிருந்தார். அங்கிருந்தபடி நான் யாருக்கு அனுதாபச் செய்தி அனுப்புவது என்ற குழப்பத்தில் மௌனமாக இருக்க நேர்ந்தது. நாளை பிற்பகல் எனக்குக் கோர்ட்டில் வேலையில்லை... அலுவலகத்தில்தான் இருப்பேன். மேலே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரியில் என்னை அவசரமாகச் சந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

பரதனுக்கு ஒரே குழப்பம். தணிகைவேலின் வக்கீல் சரவணன் அவனைக் காண விரும்புகிறார். எதற்காக?

பகல் உணவிற்குப் பின் வரப்போவதை டெலிபோன் செய்துவிட்டுக் கிளம்பினான்.

முன்பின் அவனுக்குச் சரவணன் அறிமுகம் கிடையாது. தணிகை சொல்லக் கேட்டிருக்கிறான்—மாரடைப்பில் தணிகை சிரமப்பட்டபோது வக்கீலைப் பார்க்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யச் சொல்லியதற்கு உதவினான். அவ்வப்பொழுது ஆஸ்பத்திரி பில்களை அனுப்பி வைக்கும்போது முகவரியைப் பார்த்திருக்கிறான்.

சூரப்ப நாயக்கன் தெருவில்...சிவகெங்கா பில்டிங்...கொஞ்ச நாட்களுக்கு முன் உருவான ஏழடுக்குக் கட்டிடம்.

லிப்டில் ஏழாவது தளத்தை அடைந்து குறிப்பிட்ட எண் கொண்ட அறைக்கு முன் போய் நின்றான்.

சரவணன் என்னவோ ஒரு சாதாரண வக்கீல் என்று தான் எண்ணிக் கொண்டிருந்தான்.

கண்ணாடி பதித்த கதவில் பொன் எழுத்துக்களில் பளிச்சிட்ட பெயரும் உள்ளே குளுகுளுவென்ற ஏ. சி. அமைப்பிலே பளபளத்த மேஜைக்குப் பின் நின்ற வரவேற்பறை அழகியும்...டைப் யந்திரத்தின் பின்னால் அமர்ந்திருந்த பல இளைஞர்கள்...பெண்கள் அப்பப்பா...அவர் ஒரு பிரபல வக்கீல் என்பதை விரைவில் விளக்கிவிட்டன.

MITHRAVINTHA

ரிஸப்ஷனிஸ்டு அவனைப் பார்த்து மெலிதாகச் சிரித்தான்.

''டாக்டர் பரதன்! மிஸ்டர் சரவணன் உங்களுக்காகக் காத்திருக்கிறார்.'' இண்டர்காமில் எச்சரிக்கை செய்து விட்டு, ''டாக்டர் பரதன்! வரச்சொல்கிறார். இந்தப் பக்கம்'' என்று இன்னொரு அறைக் கதவைச் சுட்டிக் காட்டினாள்.

உதகையும்—கோடையும் உள்ளே வந்துவிட்டன போன்ற குளிர்ச்சியில் பாதங்களை மெத்தென்ற காஷ்மீர் கம்பளம் கவ்விக்கொள்ள சுழல் நாற்காலியில் மேஜைக்குப் பின் அழுத்தலாக நறுக்கு மீசையும்...காதோரம் நரைத்த கிருதாக்களுமாக நடு வயதை எட்டிக் கொண்டிருந்த சரவணன் உட்கார்ந்திருந்தார்.

''டாக்டர் பரதன்!''...புன்றுவலுடன் எழுந்து வரவேற்று எதிர் நாற்காலியில் அமரச் செய்து உபசரித்தார்.

சொல்லி வைத்தாற்போல் ஆபீஸ் பையன் இரண்டு கோப்பைக் காபியுடன்...உள்ளே வந்து அலைகளை மேஜைமேல் வைத்துவிட்டு மாயமானான்.

''காப்பியைச் சாப்பிடுங்கள். உங்களுக்கு ஓர் இன்பமான அதிர்ச்சி காத்திருக்கிறது...''மாயப் புன்னகையுடன் சரவணன் எழுந்து அருகில் இருந்த இரும்பு பீரோவைத் திறந்தார்.

ஒரே மூச்சில் காப்பியைப் பருகிக் கோப்பையை வைத்து விட்டுக் குழப்பத்துடன் வாயைத் துடைத்துக் கொண்டான் பரதன்.

பீரோவிலிருந்து எடுத்து வந்த ஒரு பழுப்பு வண்ணக் கடித உறையை அவன் முன் நிழித்தார்.

''இது திரு தணிகைவேலின் இறுதியான உயில். என்னிடம் பாதுகாப்பாக இருக்க ஒப்படைக்கப்பட்டது. தணிகைவேல் அவர்கள் என்னைத் தமது குடும்ப வக்கீல்



என்று சொல்லிக் கொள்வார். ஆனால் உண்மையில் அவரைச் சமீப காலமாகக் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தான் அறிவேன். டெலிபோன் டைரக்டரியில் பெயரைப் பார்த்து என்னுடன் தொடர்பு கொண்டு என்னைச் சந்தித்துத் தமது உயில் ஒன்றை எழுதச் சொன்னார். முதல் உயில் பிரகாரம் அவரது சொத்துக்கள் எல்லாம் ஷேர்களாகவும் வங்கி எஃப்டிக்களாவும் இருந்தன. அத்தனையும் அவருக்குப்பின்...பல தான தர்மங்களுக்கு என்று எழுதச் சொல்லியிருந்தார்.''

மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்த பரதன்... நெஞ்சு படபடவென்று துடித்தது.

''இரண்டாவதாக எழுதச் சொன்ன உயிலில் அந்தச் சொத்தைத் தமது மகளுக்கு விட்டு போயிருக்கிறார்போலிருக்கு...காப்பகத்தில் உள்ள தலைவியிடம் தொடர்பு கொண்டு யாமினியைச் சந்திக்க அழைத்தாரா...?'' இன்ப அதிர்ச்சி என்றாரே அவனது குழப்பம் அதிகமாகியது.

''தணிகைவேல் என்ற மனிதரைத்தான் நான் அறிவேன். அவர் முதலில் ஒரு பிரபல ஹோட்டலில் தங்கியிருக்கிறார் என்பது மட்டும்தான் தெரியும். திருச்சியைச் சேர்ந்தவர் என்பதைத் தவிர அவர் தமது குடும்ப உறவினர் யாரைப் பற்றியும் அதிகம் தெரிவிக்கவில்லை. அவர் கொடுத்த விபரத்திலிருந்து மனைவியை இழந்த—தனி மனிதன். நெருங்கிய உறவினர் யாரும் கிடையாது என்பது புரிந்தது.''

பரதன் நெஞ்சு இன்னும் சிறிது வேகமாக அடித்துக் கொண்டது.

''அப்படியென்றால் வக்கீலுக்குக் கூடவா யாமினியைப் பற்றித் தெரிவிக்கவில்லை? வக்கீலிடமும் வைத்தியரிடமும் பொய் சொல்லக்கூடாது என்பார்களே'' உதட்டைக் கடித்துக் கொண்டான் யோசனையுடன்.

MITHRAVINTHA

"அபிராமி நர்ஸிங் ஹோமில் அனுமதிக்கப்பட்ட பின்னர்...என்னைச் சில தடவைகள் அழைத்துப் பேசியிருக்கிறார். அந்தச் சில மாதங்களில் மூன்று தடவைக்கு மேல் அவர் தமது உயிலை மாற்றி எழுதித்தரக் கேட்டுக் கொண்டிருக்கிறார். பழகுவதற்கு ஒரு விதமான முரட்டுத் தனமிக்க வக்கிரமான மனிதன்.

"பணம் அவருடையது. அதை விநியோகிக்கும் உரிமை அவருடையது...நான் ஆலோசனை மட்டும்தான் வழங்க இயலும். தலையிட முடியாதல்லவா?

"கடைசி முறையாக அவரை நான் சந்தித்தபோது அவர் தமது பழைய உயிலை மாற்றிப் புதிதாக ஒன்றை எழுதிக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார். ஆஸ்பத்திரி மேட்ரனும் கணக்கரும் சாட்சிக் கையெழுத்திட்டனர். உயிலை ரிஜிஸ்டர் பண்ணி என் பாதுகாப்பில் வைத்துக் கொண்டிருந்தேன்."

இந்த விவரமெல்லாம் அவனுக்கு எதற்கு? பரதன் வியப்புடன் அவரைப் பார்த்தான்.

"சிக்கல் இல்லாத உயில். வீடு...கடன் விவகாரமின்றி அத்தனையும் பணமாக வங்கியில் தூங்குவதால் காரியத்தை நான் விரைவில் முடிக்க இயலும்.

"இந்த உயிலின்படி அவரது சொத்துக்கு நீங்கள் வாரிசாகிறீர்கள்."

"நானா?" பரதன் திடுக்கிட்டுக் கேட்டான். நெஞ்சு படீர் படீர் என்று அடித்துக்கொண்டது. கடைசி நேரத்தில் தணிகைவேலுக்கு புத்தி பிசகி விட்டதோ?

"அவர் இந்தக் கடைசி உயிலை எழுதும்போது நல்ல மன நிலையில் பூரண ஞாபகத்துடன் இருந்தார். அபிராமி நர்ஸிங்ஹோமில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து நீங்கள் அவரிடம் ஒரு நல்ல வைத்தியராகவும் நெருங்கிய நண்பனாகவும் பழகி மனத்திற்கும்—உடலுக்கும் இதம் தந்தீர்களாம். அந்த நன்றிக்கடனுக்காக அவர் தமது சொத்தை



உமக்கு விட்டுப் போயிருக்கிறார். அதில் ஒரே நிபந்தனை. பாதி அளவு பணத்தை உபயோகித்து ஒரு சிறு நர்ஸிங் ஹோம் கட்டி உங்கள் திறமையை ஏழை எளியவருக்குக் கொடுக்கவேண்டும் என்ற வேண்டுகோள். மீதியை உங்கள் சொந்த உபயோகத்திற்கு வைத்துக் கொண்டு சுகமாக வாழ வேண்டும் என்று வாழ்த்தியிருக்கிறார்."

"அப்படி அவர் என்னதான் விட்டுப் போயிருக்கிறார்?" மெல்ல நிதானமாகக் கேட்டான்.

"எஸ்டேட் டியூடி...அது இது... நர்ஸிங்ஹோமுக்கு ஒதுக்கி விட்டது எல்லாம் போக...உங்களுக்குச் சுமார் பத்து லக்ஷத்துக்கு மேல் தேறும்...உயிலைப் படித்துவிட்டுத் திருப்பித் தாருங்கள்...இந்தப் பணம் வந்து சேரக் கொஞ்ச காலம் பிடிக்கும். ஆனால் உயிலில் உள்ளதை உடனடியாகச் சொல்ல வேண்டியது என் கடமை."

வக்கீல் பற்கள் பளிச்சிடச் சிரித்தார்.

நிதானமாகப் படித்தான் பரதன். அவனால் நம்ப முடியவில்லை. ஒரு சில மணி நேரங்களில் அவன் ஒரு பெரிய லக்ஷாதிபதியாகி விட்டானே.

உயிலைத் திருப்பிக் கொடுத்துவிட்டு எழுந்திருந்தான். "எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. நன்றி. வருகிறேன்" விடை பெற்றுக்கொண்டான்.

"முதல்லேயே சொன்னேனே உங்களுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருக்கு என்று. விரைவில் நீங்கள்...பல லக்ஷங்களின் அதிபதியாகப் போகிறீர்கள்...மகிழ்ச்சியாக இருங்கள். ஆல் த பெஸ்ட்" கையை நீட்டி அவன் கரத்தைப் பற்றிக் குலுக்கிவிட்டு...விடை கொடுத்தார் வழக்கறிஞர்.

கட்டிடத்தின் வாயிலில் ஓரமாக நின்ற ஸ்கூட்டர் அருகே வந்தான். தன்னையும் மறந்து தெருவைப் பார்த்தபடி நின்றான்...

MITHRAVINTHA

'நியாயமில்லை...இது கொஞ்சமும் நியாயமேயில்லை— யார் சொத்தை யார் அனுபவிக்கிறது என்பதற்கு வரைமுறை கிடையாதா?'

## 12

அன்று இரவு முழுவதும் அவனுக்கு உறக்கமே இல்லை. வக்கீல் சரவணன் சொன்னது உண்மையா? உயிலை அவனே படித்துப் பார்த்தானே. இதென்ன அநியாயம்! பெற்ற மகள் இருக்கும்போது யாரோ ஒருத்தனுக்கு, கொஞ்சகாலம் அன்போடு பழகினான் என்பதற்காக அத்தனை சொத்தையும் தந்து விடுவதா?

எந்தவித எதிர்பார்ப்புடனும் அவன் தணிகைவேலுடன் பழகவில்லையே? ஒரு சமயம் தணிகை தன் மகளைப் பார்த்தபின் மனதை மாற்றிக்கொண்டு உயிலை மாற்றிக் கொண்டிருக்கலாம்.

''நான் செய்த கொடுமைக்கு ஈடு செய்ய விரும்பறேன். ஆனால் காலம் இடம் கொடுக்கலையே'' என்று அவர் ஏதோ அவனிடம் பேசியது காதில் பட்டதே. உயிலை மாற்றி எழுத நேரம் இல்லை என்று வருந்தியபடி உயிரை விட்டுவிட்டாரே? அப்படி ஒரு கடைசி எண்ணம் அவர் மனதில் இருந்திருந்து—அது நிறைவேறுமுன் மரணம் வந்து விட்டிருந்தால்கூடச் சட்டப்படி சொத்து அவனுக்கு உரியதானாலும் மனச்சாட்சிப்படி அது அவனுக்கு ஒட்டாத பணமாயிற்றே. இதற்கு ஒரு தீர்வு கண்டாக வேண்டும்.

மறுநாள் காலை அவன் வேலைக்குப் போகவில்லை. அந்த நாளும்—அதற்கடுத்த நாளும் தனக்கு லீவு தேவை அவசர காரியம் என்று ரெசிடெண்ட் டாக்டருக்குப் போன் செய்து உத்தரவு வாங்கிக் கொண்டான்.



அவசரமாகக் குளியலை முடித்து உடுத்திக்கொண்டு விரைவாகக் காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டு வெளிக் கிளம்பினான்.

தலைவியை அவரது வீட்டிலேயே சந்தித்தான். ''மிக அவசரம்—யாமினியைப் பார்க்க வேண்டும்.''

''யாமினியா? அவள் இப்பொழுது இங்கில்லை. ஐந்து வருஷத் தண்டனைக் காலம் முடிந்து விட்டதால் சில வாரங்களுக்கு முன் அவள் வேறு வேலை தேடிக்கொண்டு போய்விட்டாள்.''

திக்கென்ற உணர்வில் அவன் இடிந்து போனான்.

''மேடம் அவளை நான் கட்டாயம் சந்தித்தாக வேண்டும். அவள் தந்தை விட்டுப்போன சொத்தைப் பற்றிய பிரச்சினை'' என்றான் அழயாட்டாத துயரத்துடன்.

''யாமினி இப்பொழுது சுதந்திரமான பெண். அவள் இச்சைப்படி வாழ்க்கையை வகுத்துக் கொள்வதை யாரும் தடுக்க முடியாது—எனவே அவள் ஐந்தாண்டுக் காலம் பூர்த்தியானதும் இங்கிருந்து போக விரும்பிக் கேட்டாள். பார்க்க அழகான பெண்—இளம் வயது—மறுபடியும் இந்த வெளி உலகத்திலே அவள் ஆபத்திற்குள் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது என்று அவளை எனக்கு மிகவும் நெருங்கிய ஒரு சிநேகிதி வீட்டில்—வேலைக்கமர்த்தியிருக்கிறேன்.

''சமூக சேவகியும்—பிரபல வழக்கறிஞர் மனைவியுமான என் சிநேகிதி தற்சமயம் ஒரு விதவை. வயதும், நோயும் வேதனை செய்கின்றன. தன்னுடன் கூடத் துணையாக இருந்து சமைத்துப் போட்டுத் தன்னைக் கவனித்துக்கொள்ள ஒரு ஹவுஸ்கீப்பர் போன்ற ஒரு பெண் வேண்டும் என்று ரொம்பக் காலமாக என்னைக் கேட்டுக்கிட்டிருந்தாங்க— அங்கே அனுப்பிவிட்டேன்—உணவு, சம்பளம், வசதிகள் எல்லாம் இங்கேயிருப்பதை விட சவுகர்யமாக இருக்கும்.''



MITHRAVINTHA

''தயவு செய்து அந்த முகவரியை எனக்குத் தர முடியுமா? நான் யாமினியை அங்கு சென்று சந்திப்பதில் மறுப்பு ஏதும் இல்லையே?'' மிகப் பணிவாகக் கேட்டான் பரதன். தலைவி புன்னகைத்தார். ''மறுப்புச் சொல்ல இனி யாருக்குமே உரிமை கிடையாது. அவள் இப்போது பூரண சுதந்திரமுடைய இந்நாட்டுக் குடிமகளில் ஒருத்தி. அவ்வளவுதான்—'' என்று கூறிவிட்டு, ஒரு துண்டுக் காகிதத்தில் முகவரியை எழுதிக் கொடுத்தார்.

நன்றி கூறிவிட்டு நேரத்தை வீணாக்காது உடனடியாக அந்த முகவரியைத் தேடிக்கொண்டு அடையாறை நோக்கி ஸ்கூட்டரில் பறந்தான். கற்பகம் காலனியிலிருந்த ரோஜா வண்ணம் தீட்டிய சிறு வீட்டின் கேட்டைத் திறக்குமுன் சங்கிலியில் பிணைக்கப்பட்டு சுவர் ஓரமாக நின்ற அல்சேஷன் ஆக்ரோசமாகக் குரைத்தது.

''யார் அது?'' கேட்டபடி கதவைத் திறந்த வயதான பெண்மணி அவனைச் சந்தேகம் ததும்ப வெறித்தாள்.

''மிஸ் யாமினி என்கிறவங்களைப் பார்க்க வந்திருக்கேன். என் பெயர் பரதன்'' என்று அவன் முடிக்கு முன்— ''ஆன்டி யார் அது—நீங்க ஏன் கதவைத் திறந்து உடம்பை அலட்டிக்கிறீங்க, நான் கவனிச்சுக்கிறேன்'' என்று கூறியபடி முன்னால் வந்து எட்டிப் பார்த்தாள் யாமினி. இந்தச் சில நாட்களில் அவள் எப்படி மாறிவிட்டிருந்தாள்!

அன்று காப்பகத்தில் சீருடையில் கண்ட இளம்பெண் அல்ல அவள். இப்போது மெருகிட்ட பெண் சிலையாக முகத்தில் பொலிவும் கண்களில் மகிழ்ச்சியுமாக...வெளிர் நீலச் சுங்கடிச் சேலையில் அழகு பிம்பமாக நின்றாள்.

''டாக்டர் பரதன்! வாங்கோ—உட்காருங்கோ— உங்களைப்பத்தி ஆன்ட்டிகிட்டே சொல்லியிருக்கேன்'' போலியான சந்தோஷமின்றி சகஜமாக வரவேற்றாள்.



''அப்படியா உட்காருங்கள்'' உபசரித்துவிட்டு அந்த அம்மாள் உள்ளே சென்று விட்டாள்.

''இப்போ நான் ஒரு அவசர காரியமா வந்திருக்கேன். உங்கள் தந்தை இறந்து போன சமயம், அவரது வக்கீல் வெளி நாட்டிலிருந்ததால் விவரம் எனக்குத் தெரியவில்லை. அவர் திரும்பி வந்த பின்னர்தான் தெரிஞ்சுது—அவரது சொத்துக்கள் அத்தனையையும் எனக்கு எழுதி வச்சிருக்கார்.''

தரையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த அவள் நிமிர்ந்தாள். மூக்கும், முகமும் சிவந்து காணப்பட்டன. உணர்ச்சி வசத்தில் உதடுகள் துடித்தன. கண் இமைகளை நனைத்த கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு அவள் புன்னகைக்க முயல்வதைப் புரிந்து கொண்டான் பரதன்.

''என் தந்தையின் நெருங்கிய நண்பராக இருந்தீங்க— பல உதவிகள் செய்திருக்கீங்க...கடைசிவரை அவருக்கு எல்லாம் செய்திருக்கீங்க. சொத்தை உங்களுக்கு எழுதி வைத்துவிட்டுப் போனதில ஆச்சரியமென்ன இருக்கு?''

''அதை நான் எதிர்பார்த்து ஏதும் செய்யலை''— பரதன் சிறிது கோபத்துடன் சொன்னான்.

''நீங்கள் எதிர்பார்க்கலை...அவர் அன்போடு கொடுத்திருக்கிறார். அனுபவிக்க வேண்டியது உங்கள் கடமை''

''இது அநியாயம். உங்களைச் சந்திக்கும் முன் அவர் எழுதிய உயில் இது—உங்களைச் சந்தித்த பின்னர் அவர் வேறு விதமா எழுதியிருப்பார்—கட்டாயம் தமது சொத்துக்களை உங்களுக்கே விட்டுப் போயிருப்பார்.''

''அப்பா என்னை மன்னித்து விட்டாரே—அதுவே எனக்கு இப்பொழுது பெரிய சொத்து—''

''நீங்க என்ன சொன்னாலும் நான் ஏற்க முடியாது. தமது சொத்தில் ஒரு பாகத்தைச் சிறு நர்ஸிங்ஹோம் கட்டி ஏழை எளியவர்களுக்குச் சிகிச்சை அளிக்க நான் முயல வேண்டும் என்று ஒரு நிபந்தனை வைத்திருக்கிறார்.

MITHRAVINTHA

அதற்கு வேண்டுமானால் நான் ஒப்புக் கொள்கிறேன்—மற்ற ஒரு பகுதியை நான் ஆண்டு அனுபவிக்க வேணும் என்ற அவரது தீர்மானத்தை ஏற்க முடியாது.''

''நீங்கள் இதைச் சொல்ல என்னிடம் வந்தது அதிசயமா இருக்கு. அப்பா சொத்துக்களை எல்லாம் உதறிவிட்டுக் கடனாளியாகி விட்டார்னுதான் நான் நினைச்சேன். உங்க இடத்தில் இன்னொருவர் யாராவது இருந்தால் வாயை மூடிக்கொண்டு அப்பா விட்டுப் போனதை வைத்துக்கொண்டு சுகமாக வாழ்வார்கள். அவர் ஒதுக்கி விட்டுப்போன மகளிடம் ஓடிவந்து சொல்ல மாட்டாங்க.''

''பிறர் பணத்துக்குப் பேயாகப் பறக்கிறவன் நான் இல்லை...என் உழைப்பால் என்னால் உயர முடியும் என்கிற நம்பிக்கை இருக்கு—அதனால் என் பெயருக்குச் சொத்து வந்ததும்...நான் ஆண்டு அனுபவிக்க அவர் விட்டுப் போயிருக்கும் அந்தப் பணத்தை உங்களுக்கு ஒரு பரிசாக உரிய வரி செலுத்தி...மாற்றிக் கொடுக்க விரும்பறேன். கடைசி நாளில் அந்தச் சந்திப்பின்போது 'ஈடு செய்ய விரும்பறேன்னு' உங்கப்பா முனகியது காதில் பட்டது. அவர் இதைத்தான் விரும்பி இருப்பார்.''

கன்னத்தில் கோடிட்ட கண்ணீரை மெல்லத் துடைத்துக் கொண்டாள் யாமினி. ''அவர் ஈடுசெய்ய விரும்பிய விஷயமே வேறு. முன்போல பாசமுள்ள தந்தையாக என்னுடன்கூட அவர் சிறிது காலமாவது வாழ நினைச்சார்...அந்த நினைவு...கனவாகிவிட்டது—அந்தப் பாசத்தை—இந்தப் பணத்தால் ஈடு செய்ய முடியாது. நானும் உழைப்பால் என்னை உயர்த்திக்க முடியும்னு நம்பிக்கையோடு இங்கே வேலைக்கு வந்திருக்கேன்—அதனால் எனக்கு இப்போ இந்தப் பணம் எந்த விதத்தில் உதவ முடியும்? இதனால் ஒரு தனிப் பெண்ணுக்கு ஆபத்து தான் ஏற்படும். போதும் என் அனுபவம். வேண்டாம் டாக்டர். உங்கள் பரந்த உள்ளத்தைப் பாராட்டறேன்—



நன்றி'' கரம் குவித்து வணங்கினாள். மேலே தர்க்கிக்க முடியாது பரதன் எழுந்து வெளியே நடந்தான்.

அடுத்த நாள் காலை மறுபடியும் அந்த அல்சேஷன் நாய் ஆத்திரமாகக் குரைக்கவே யாமினி கதவைத் திறந்தாள்.

ஸ்நானம் செய்தபின் காயவைத்த கூந்தலை அள்ளிக் கொண்டையாக முடித்துக்கொண்டு நெற்றியில் பனிச் சென்ற குங்குமப் பொட்டுடன் ஆரஞ்சு வண்ண மல்மல் வாயில் சேலையில் அழகாக நின்றவளைக் கண்கொட்டாது பார்த்து பிரமித்தபடி பரதன் நின்றான்.

''டாக்டர் பரதன்! வாங்கோ...உட்காருங்கோ'' உபசரித்தபடி அவன் முன்னறைக்குள் விரைந்தாள்.

'யாரது' என்று உள்ளேயிருந்து வந்த தளர்ந்த குரலுக்கு அவளே பதில் சொல்லிவிட்டாள்.

''டாக்டர் பரதன் ஏதோ முக்கியமாகப் பேச வந்திருக்கிறார் ஆன்ட்டி...''

''ஆமாம் மிஸ் யாமினி! நீங்கள் சொன்னது உண்மை. மிக முக்கியமான தீர்மானத்துடன் பேச வந்திருக்கிறேன்'' சொல்லிக்கொண்டே உட்கார்ந்தான் பரதன்.

பட்டுக்கரை வேஷ்டியும் லக்னோ குர்தாவுமாக, வித்தியாசமாக, கவர்ச்சியாகக் காணப்பட்டவனை அவள் காலோடு தலை கவனித்தாள். கன்னக் கதுப்புகளில் செம்மை படிந்தது.

''நேற்று உங்கள் தீர்மானமான முடிவைச் சொல்லி விட்டீங்க. நான் உங்கள் அப்பாவின் சொத்தைப் பரிசாகக் கொடுப்பதை ஏற்க மறுத்துட்டீங்க. இப்போ நான் கேட்கப் போறதை மறுக்க மாட்டீங்கன்னு நம்பிக்கையோட வந்திருக்கேன். உங்கள் கணவனாகும் தகுதியைப் பரிசாகக் கொடுக்க விரும்பறேன். அதையும் மறுப்பீங்களா?''

MITHRAVINTHA

திடுக்கிட்டுப்போன யாமினி பேசச் சக்தியற்றவள் போலச் செயலற்று அவனை உற்றுப் பார்த்தாள்.

அவளது கண்களில் நீர் புரண்டு கொண்டுவிட்டது. ''டாக்டர் பரதன்! என்னைப் பற்றி விவரம் பூரா தெரிஞ்சுமா இப்படி கேக்கறீங்க ''

''தெரிஞ்சதினால்தான் துணிவோட கேட்கிறேன். என் நண்பர் தணிகையின் மகளை அனாதையாக ஒருவர் வீட்டில் அண்டிப் பிழைக்கத் தவிக்கவிட்டு, அவர் விட்டுப் போன சொத்தைத் தனியே அனுபவிக்க மனமில்லாமல் அதையும் என் வாழ்வையும் சேர்த்துப் பகிர்ந்துக்க வேணும்னு கேட்கத்தான் வந்திருக்கேன்.''

''என்மேல் இரக்கப்பட்டு நீங்க எடுத்துக்கொண்ட முடிவு.''

''உன்னை நான் விரும்பறேன். உனது வெளிப்படையான கபடமில்லாத குணத்திற்காக விரும்பறேன்.''

''டாக்டர் பரதன்...நானிருந்த சூழ்நிலை—எனக்கேற்பட்ட அவமானம் எல்லாம் தெரிஞ்சுமா?...'' தாங்க முடியாத துயரத்தில் திணறினாள்.

''தெரிஞ்சுதான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன்... பயங்கரமான ஆபத்தான சூழ்நிலையில் அகப்பட்டுக் கொண்டும்-எப்படியாவது காப்பாற்றிக் கொண்டு தூய்மை கெடாதவளாக வெளியேற வேணும் என்ற துணிவு இருந்ததே அதைப் பாராட்டறேன்-ஆபத்தான அனுபவங்கள் என்கிற நெருப்புக்குள் புகுந்து நிலை தடுமாறாது தூயவளாக வெளிவந்திருப்பதைக் கண்டு நான் வியக்கிறேன். நீங்கள் யாருக்கு மனைவியாக அமைந்தாலும்...தன்னைக் காத்துக்கொண்டு—கணவனின் நல்ல மனைவியாக வாழ முயல்வீர்கள் என்பது திண்ணம். அப்படிப்பட்ட உறுதி மிக்க பெண்ணைத்தான் நான் என் வாழ்க்கைத் துணைவியாகத் தேடிக்கொண்டிருந்தேன்.''



''ஏற்கனவே ஒருவனைக் காதலித்து நம்பி ஏமாந்து போனது பற்றி?...''

''கற்பு என்பதைப் பற்றிப் பேசினால் அது இருபாலாருக்கும் பொதுவானதொரு குணம்.

''ஆணுக்கு ஒரு நீதி—பெண்ணுக்கு ஒரு நீதி என்பதை நான் வெறுக்கிறேன். நீங்கள் எந்தவிதத் தவறும் செய்யவில்லை. அப்படியே தவறு செய்திருந்தாலும் எனது நண்பனின் மகள்-அவளுக்கு வாழ்வு தரவேண்டியது என் கடமை என்று நினைக்கும் மனம் எனக்கு இருக்கு. அதனைச் செய்கிறேன்.

''யாமினி! உங்களது சம்மதம் உடனடியாகத் தெரிந்தாகவேண்டும்.'' கூறிக் கொண்டே பையிலிருந்த ஒரு சிறு பெட்டியை எடுத்தான்.

சிறு வைர மோதிரம் ஒன்றை எடுத்தான்.

''இது என் தாயாரின் மோதிரம். அப்பா பரிசாக அவங்களுக்குத் தந்தது. என் மனைவியாகப் போகிறவளுக்கு இதை நான் தர விரும்புகிறேன். யாமினி என்னைக் கல்யாணம் செய்து கொள்ள மறுப்பு ஏதேனும் உண்டா?'' கேட்டபடி எழுந்து அருகில் வந்தான்.

யாமினி எழுந்தாள். அவளது உடலும் உள்ளமும் இன்பம் துன்பம் என்ற கலவை உணர்வில் குலுங்கியது.

''என்னை நீங்கள் ஒருமையிலேயே அழைக்கலாம். உங்களைவிட வயதிலும் அறிவிலும் நான் சிறியவள். வருங்காலத்தில் பிரபலமான ஸர்ஜனாகப்போகிற பரதனுக்கு மனைவியாகப் போகும் பாக்கியம்...இத்தனை துன்பங்களுக்கிடையே எனக்கு இப்படி ஒரு பெரும் அதிர்ஷ்டமா? என்ன சொல்வதுன்னே தெரியலை.'' பேச முடியாது கண்ணீரில் திணறிய யாமினி தன் இரு கரங்களையும் நீட்டினாள்.

அந்த மோதிரத்தை அவளது இடது கைப் பிஞ்சு விரலில் அணிவித்துக் கொண்டே

MITHRAVINTHA

''பரதன், நானும் உங்களை விரும்பறேன். கல்யாணம் செய்துக்க முழுமனதோடு ஒப்புக்கிறேன் என்று இரண்டே வார்த்தையில் சொல்கிறது. எங்கே சொல்லு பார்க்கலாம்...'' கைகளை இறுக்கமாக ஒரு கரத்தில் பற்றிக் கொண்டு செம்மையாகிவிட்ட கன்னங்களில் முத்தாக உருண்டை கண்ணீர் துளிகளை இன்னொரு கரத்தால் மெல்லத் துடைத்து விட்டான்...

''வெளி உலகின் ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றி என்னை அணைக்க ஆதரவோடு வந்த இந்தக் கரத்தைப் பிடிச்சுக்கிட்டு வாழ்நாள் முழுவதும் உங்களது உண்மையான மனைவியா, சத்தியமா ஒரு நல்ல குடும்பத் தலைவியா இருப்பேன்னு அப்பாவின் நினைவின் பேரில் ஆணையிட்டுச் சொல்றேன். அதுக்கு மேலே...'' உணர்ச்சி வசப்பட்டுத் திணறினாள் யாமினி.

''என்னம்மா? பேசி முடிச்சாச்சா...'' உள்ளிருந்து வீட்டுக்கார அம்மாள் குரல் கொடுத்தாள்.

''முடிச்சாச்சு...கல்யாணச் சாப்பாட்டுக்குத் தயாராக இருங்கன்னு சொல்லு—'' பரதன் வேடிக்கையாகக் காதருகில் கிசுகிசுத்தான்.

பக்கென்று மனம் விட்டு பல ஆண்டுகளுக்குப்பின் யாமினி வரிசைப் பற்கள் ஒளியிட மகிழ்ச்சியுடன் சிரித்தாள். அப்பொழுது மலர்ந்த ரோஜா போல அந்த முகத்தின் அழகுக்கு மெருகூட்டி விட்டதை மெய்மறந்து பார்த்துப் பூரித்துப் போய் விட்டான் பரதன்.

அவன் உள்ளத்திலே அது சமயம் எழுந்த இன்ப எதிர்பார்ப்பின் மயக்கத்திலே—நேரமும்—சூழ்நிலையும் அவன் உணர்வுகளுடன் கலந்து ஒன்றி விட்டது போன்றதொரு பரவசமான பிரமையில் வளமான வருங்காலத்தை ஆவலுடன் மனக்கண்களில் தேடிக்கொண்டிருந்தான்.

MITHRAVINTHA